22 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

**Jey Ahamparam** P.F.P
Insurance Advisor
**RBC** காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

**Call: 416.301.1733**

Join Our Brokerage - Real Estate Needs

416.315.9397

www.mahendran.ca

Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca

நதி 22 | பாலம் 14 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 15, 2012

# கனேடிய பொருளாதார நிலை!

உலகளாவிய பொருளாதார நிலை தற்போது மிகப்பெரிய மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றது. 20 வருடங்களுக்கு முன்னர் தொழில்துறையில் வளர்ச்சி அடைந்த நாடுகள் உலகிற்கு தேவையான பொருட்களில் 66% ஐ உற்பத்தி செய்தன. வளர்முக நாடுகள் 34% பொருட்களையே உற்பத்தி செய்தன. ஆனால் இன்னும் 20 வருடங்களில் இந்நிலை முற்றிலும் எதிர்மாறாக மாறிவிடும் என TD வங்கி எதிர்வுகூறுகின்றது.



வளர்முகநாடுகள் விரைவாக பொருளாதார வளர்ச்சியையும் சனத்தொகை வளர்ச்சியையும் பெற்றுவருகின்றன. தொழில்துறையில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் அண்மையில் ஏற்பட்ட நிதி நெருக்கடியாலும், அதைத்தொடர்ந்து வரவு செலவுத்திட்டத்தை சமநிலைப்படுத்த முடியாமல் திண்டாடுவதாலும், வயது முதிர்ந்தவர்களது எண்ணிக்கையில் ஏற்படும் அதிகரிப்பாலும் அந்நாடுகளில் மிகவும் குறைந்த பொருளாதார வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது.

கனடா தனது பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உலக நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை செய்கின்றது. அவ்வாறாயினும் கனடாவின் பொருளாதார வளர்ச்சி இன்னமும் குறிப்பிடத்தக்க அளவு வளர்சியை எட்டவில்லை. கனடாவின் கடந்த 10 வருட கால ஏற்றுமதி வளர்ச்சி வருடம் ஒன்றிற்கு 2% மட்டுமே அதிகரித்து வந்துள்ளது. ஆனால் கனடாவின் இறக்குமதி வருடம் ஒன்றிற்கு கிட்டத்தட்ட 5% ஆல் அதிகரித்து வந்துள்ளது என்று TD வங்கியின் அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

கனடாவின் பொருளாதார வளர்ச்சி மந்தமாக இருந்தாலும் அது நிலையானதும் உறுதியானதாகவும் உள்ளது என CIBC வங்கியின் அறிக்கை கூறுகின்றது. 2012 இன் முதல் ஆறு மாத காலத்தை எடுத்துக்கொண்டால் கனேடிய பொருளாதார வளர்ச்சி 155,000 புதிய வேலைகளை உருவாக்கியுள்ளது. இது கனேடிய பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்த்ததை விட அதிகமானதாகும். அதுமட்டும் அல்லாமல் இவை தரமான அதிக சம்பளம் வழங்கும் முழுநேர வேலைகளாகும்.

ஆனால் இதேநிலைமை அடுத்த ஆறுமாத காலத்திற்கு இருக்கும் என எதிர்வு கூறமுடியாது என CIBC வங்கி வெளியிட்ட அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. இவ்வறிக்கை பற்றி கூறிய CIBC வங்கியின் பொருளாதார நிபுணர் Benjamin Tal இம் முதல் ஆறுமாதகால வளர்ச்சி கொண்டாடப்பட வேண்டிய விடயம் என்றார்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட 155,000 புதிய வேலைகளில் 88,000 வேலைகள், பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளால் உருவாக்கப்பட்டவையாகும். இவ்வேலைகள் சாதாரண தொழிற்சாலை வேலைகள் அல்ல. இவை அதிக சம்பளம் உள்ள தொழில்நுட்பவியலாளர்களின் வேலைகளாகும். மற்றைய 67,000 வேலைகளும் எரிபொருள் உற்பத்தி நிலையங்கள், குடிசார் பொறியியலாளர் கள், மற்றும் கட்டிட தொழில் செய்யும் நிறுவனங்களில் உருவாக்கப்பட்டவை ஆகும்.

இவ் அறிக்கை பற்றி மேலும் தெரிவித்த Benjamin Tal மத்திய அரசாங்கம் அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க இருப்பதால் அடுத்த ஆறுமாதத்தில் இதேபோல் பெரும் தொகையாக புதிய வேலைகள் உருவாகும் என கூறமுடியாது என்றார். கனேடிய மாகாணங்களைப் பார்த்தால் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் தான் பெரும்பாலான வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. குவிபெக் மாகாணத்தில் அடுத்து அதிக அளவு வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒன்ராறியோ மாகாணத்தில் குறைந்த அளவு வேலைகளே உருவாக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E.
Suite #203
Scarborough, ON
M1S 0C2
*Independently Owned and Operated

MORTGAGE

Best Rates wih Major Banks/Companies

Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com

- Residential/Commercial needs
- Purchase/Refinancing/Renewal/Switch
- Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
- Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident

Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING

MARKVILLE TOYOTA

KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை

- 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

MONEY TRANSFER

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3
416.267.8221

3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE

DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD
DENTAL SURGEON

- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# தமிழினத்தைப் பாதுகாக்ககூடிய ஒரே வழி தமிழீழ அரசேயாகும்!



அமெரிக்காவில் இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு உள்ளான நமது இலங்கைத் தமிழினம், தன்னை தொடர்ந்து பாதுகாக்கக் கூடிய ஒரே வழி நாடு கடந்த தமிழீழ அரசுதான் என்று நிச்சயமாக நம்பியபடியால் நாம் அந்த அரசை நிறுவியுள்ளோம் என நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 7ம் திகதி சனிக்கிழமை அமெரிக்காவின் மேரிலான்ட் மாகாணத்தில் உள்ள பல்டிமோர் நகரில் நடைபெற்ற நாடு கடந்த தமிழீழ அரசு தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிபோது தெரிவித்தார். மேற்படி கருத்தரங்கில் கனடாவிலும் அமெரிக்காவிலும் இருந்து சென்றவர்கள் பங்கு கொண்டார்கள். நாடு கடந்த அரசாங்கத்தின் கனடாவிற்கான அங்கத்தவர் நிமால் விநாயகமூர்த்தி மேற்படி கருத்தரங்கிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாடு கடந்த அரசின் உண்மையான நோக்கங்களை நமது மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக தமிழ் மக்கள் தற்காலத்து அரசியல் விஞ்ஞானத்திற்கு அளித்த மரியாதை என்றுதான் நான் நாடு கடந்த அரசாங்கத்தை கூறுவேன். தமிழ் மக்கள் தாங்கள் ஜனநாயக விழுமியங்களுக்கு கொடுத்த மரியாதையும் இதுதான். நாடு கடந்த அரசாங்கத்தின் மூலம் தாயகத்தில் வாழும் தமிழர்களும் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள தமிழர்களும் இணைந்துள்ளனர். அத்துடன் தமிழீழம் என்ற கோட்பாட்டை மிகுந்த உயிர்த்துடிப்புடன் பேணிவருவதும் நமது நாடு கடந்த தமிழீழ அரசு.

உதாரணமாக நமது தாயகத்தில் நமது மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி போராடி வீர மரணமடைந்த நமது போராளி கள் மற்றும் போராளித் தலைவர்களின் நினைவாக நாம் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்யக்கூட இலங்கை அரசு தடை விதிக்கின்றது.

ஆனால் இலங்கையில் ஆயுதப் புரட்சி செய்து மரணித்த மக்கள் விடுதலை முன்னணியின் கொல்லப்பட்ட போராளிகளின் நினைவாக இலங்கையில் அரச அனுமதி கிடைக்கின்றது. எனவே இவ்வாறான நினைவஞ்சலி நிகழ்ச்சிகளை நடத்தி மறைந்த போராளிகளுக்கு மரியாதை செய்யவும் அதற்கான நிகழ்வுகளை நடத்தவும் நமது நாடுகடந்த அரசாங்கம் முயன்று வருகின்றது.

மேலும் நாடு கடந்த அரசாங்கத்திற்கு உலகில் பெரும்பாலான நாடுகளின் ஆதரவோ அன்றி அங்கீகாரமோ இல்லை. இவ்வாறு நமக்கு அங்கீகாரம் இல்லை என்பதை அறிந்து கொண்டு நாம் இயங்காமல் இருந்து விட முடியாது. அந்தந்த நாடுகளின் விருப்பு வெறுப்புகளுக்கு நாம் ஆளாகி விட முடியாது. அவர்கள் விரும்பவில்லை என்பதற்காக நாம் போராடாமல் இருக்க முடியாது. பேச்சுவார்த்தைகளின் போது இடைக்கால முயற்சியாகவும் தமிழீழத்தை நோக்கிய போராட்டத்திற்கு ஒரு உந்து சக்தியாகவும் நாம் சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளோம் என்பதையும் நான் எமது தமிழ் மக்களுக்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

முள்ளிவாய்க்காலில் நமது மக்களுக்கு எதிராகவும் நமது போராளிகளுக்கு எதிராகவும் 2009 ஆம் ஆண்டு கொடிய யுத்தம் நடைபெற்றபோது, முள்ளிவாய்க்கால் மட்டுமல்ல உலகம் முழுவதுமே போராட்டக் களங்களாக மாறியிருந்தன.

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

# கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கனேடிய புள்ளிவிபரத்திணைகளத்தின் தரவுகளின்படி கடந்த இரண்டு மாதங்களும் கனடாவின் ஏற்றுமதியானது இறக்குமதியை விட குறைந்துள்ளது. கனடாவில் வேலை தேடுபவர்களது எண்ணிக்கை மே மாதத்தில் 7.3% ஆக இருந்தது. ஆனால் இது யூன் மாதத்தில் 7.2%ஆக குறைந்துள்ளது. இதேவேளை அமெரிக்காவில் வேலை தேடுபவர்களது எண்ணிக்கை 8.2% ஆக இருக்கிறது.

# அகதி கோரிக்கை ஏற்கப்படாதவர்களுக்கு நாடு திரும்பப் பணம்

கனேடிய அரசின் புதிய அறிவிப்பின் மூலம் ஒருவரது அகதி கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் அவருக்கு கனேடிய அரசு அவரது நாட்டிற்குத் திரும்ப ஒருவழி விமானப்பயணச்சீட்டும், $2,000 வரையிலுமான பண வசதியும் வழங்க உள்ளது.

இப்பரீட்சார்த்த முயற்சி யூலை 2012 இல் இருந்து ரொறொன்ரோ பெரும்பாகத்தில் நடைமுறைக்கு வந்துள்ளது. இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் இச்சலுகையை ஏற்று, திரும்பிச் செல்லும் அகதிக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர் கனடாவிற்கு மீண்டும் முறைப்படி வருவதற்கு விண்ணப்பிக்கமுடியும். ஒருவருடைய அகதிக்கோரிக்கை ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டதற்காக அவரது புதிய விண்ணப்பத்தை பரிசோதிப்பவர் அவருக்கு தண்டனை புள்ளிகள் எதுவும் வழங்கமாட்டார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஒட்டாவா பல்கலைக்கழக சட்டவியல் பேராசிரயர், Peter Snowler இது இருபகுதியினருக்கும் மகிழ்ச்சி தரும் திட்டம்

தொடர்ச்சி 04ஆம் பக்கம்







விளம்பரம்
VLAMBARAM™

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,*
*TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com*


விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

# றொறொன்ரோ மாநகர மண்டபத்துக்கு வருக!

## சுய வழித்துணைச் சுற்றுலா

### மன்றக் கூடத் தளம்

மேலே உள்ள பாரிய வட்டக் கட்டமைப்பு, மன்றக் கூடத் தளம் ஆகும். மாதந்தோறும் மாநகராட்சி மன்றம் கூடும் இடம் இதுவே. இதன் எடை 4,000 தொன். இது உலோகப் பாளங்களுடன் கூடிய ஒரே கொங்கிறீட் தூணையே கொண்டது. தூணின் குறுக்களவு ஆறு மீட்டர், சுவர்த்-தடிப்பு ஒரு மீட்டர். மன்றக் கூடத்துக்கு வேண்டிய மின்வடங்கள், தட்ப-வெப்ப சாதனங்கள் என்பன இதன் போறையில் பொருத்தப்பட்டுள்ளன. இது இக்கட்டிடத்து அத்திவாரத்தின் அடித்தளப்பாறையுள் 16 மீட்டர் ஊடுருவி நிலைகொண்ட தூண் ஆகும்.

இரண்டாம் மாடித்தளம் செல்வதற்கு, கிழக்குப் புறத்தில் அல்லது மேற்குப் புறத்தில் வளைந்து அமைந்துள்ள படிக்கட்டு வழியே நடந்து, மேலே செல்லவும் அல்லது மின்னகர்த்தி மூலம் 2-ம் மாடித்தளம் செல்லவும்.

### இரண்டாம் மாடியின் சிறப்புகள்

### பல்வண்ணமைக் காட்சி

'யு' வரவேற்புப் பகுதியில் பல்வண்ணக் கண்ணாடி ஓடுகள் பதித்த நடைகூடத்தைக் காண்பீர்கள். மாநகரக் காட்சிகள் (Views to the City) எனப்படும் இக்கலைப்படைப்பு 1960-ம் ஆண்டின் கட்டிடங்களைப் புலப்படுத்துகிறது. மாநகர வரலாற்றின் முந்திய காலகட்டத்துக்குரிய கூரைகளைப் புலப்படுத்தும் செப்புருவங்கள் இப்பல் வண்மைப் படைப்புடன் இணைக்கப் பட்டுள்ளன. இப்பல்வண்மைப் படைப்பை ஓவியர் பிறையன் கிப்பிங் (Brian Kipping 1953-2007) ஆக்கினார். சிற்பியும் வடிவமைப்பாளருமாகிய யோன் மைக்கினன் (John McKinnon) செப்புருவங்களை ஆக்கினார். இந்நடைகூடம் மன்றாளர்களின் அலுவலகங்கள் சிலவற்றுக்கு இட்டுச்செல்வது.

### றொறன்ரோ மாநகர கேடயச் சின்னம்

(மாநகராதிபதியின் அலுவலகத்துக்கு இடது புறத்தில் அமைந்துள்ளது)
கேடயம்: றொறன்ரோ மாநகர மண்டபத்தின் கோபுரங்கள் இரண்டையும், அக்கோபுரங்க ளுக்கு இடையே ஓங்கிய நீல வானத்தையும் இக்கேடயச் சின்னம் புலப்படுத்துகிறது. இவை T எழுத்துருவாய் எழுபவை.

கழுகு: எங்கள் பின்புலத் தொல்குடியினரின் சின்னம் பொற்கழுகு. இக்கழுகு வன்மைக்கும், துணிவுக்கும், வலுவுக்கும் பெயர் போனது.
மாநகர மதில்: இது மக்களுக்கு உறை விடமளித்து, பாதுகாக்கும் மாநகரப் பொறுப்பின் சின்னம். முந்திய யோர்க் மாந-கரத்தின் (பச்சை முட்களுடன் கூடிய யோர்க் றோசா) சின்னமும், முந்திய நோர்த் யோர்க் மாநகரத்தின் ('இதயம் கொண்ட மாநகரம்' என்பதைக் குறிக்கும் இதயம் கொண்ட) சின்னமும், முந்திய ஈஸ்ட் யோர்க் புரத்தின் (நடுவில் பொன் வண்ணம் கொண்ட யோர்க்



றோசா) சின்னமும் இந்த மதிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

கழுத்துப் பின்னல் சிட்டை: ஒத்துழைத்து எய்தும் வலிமையின் சின்னமாக கழுத்துப் பின்னல் சிட்டை விளங்குகிறது. 'வகைமையே எமது வலிமை' என்னும் இம்மாநகரப் பொன்மொழியின் தோற்றுவாய் இதுவே.

தேனடை: வலு, ஆக்கத்திறன் என்பவற்றின் சின்னமே தேனடை. இது நீர்நாயின் கழுத்துப் பட்டையில் அறுகோண உருவில் தொங்குகிறது.

பசும் பூர்ச்சமர இலை: முந்திய எற்றொபிக்கோ மாநகரத்தின் சின்னமே பூர்ச்சமரம். 'எற்றோபிக்கோ' என்பது 'பூர்ச்சமரம் வளரும் இடம்' என்று பொருள்படும்.

நீர்நாய்: இது மாநகர கைத்தொழில், செயற்பாட்டு வரலாற்றின் சின்னம். விலங்குரோம வியாபாரம் அகநகர் வந்தடைந்ததாக எமது வரலாறு கூறுகிறது.

ஆதலால் எமது அகநகர் றொறன்ரோ (சந்திக்கும் இடம்) எனப்பட்டது.

பசும்புல்: மாநகரம் பெருமைப்படும் வண்ணம் அமைந்துள்ள சோலைகள், பொழுதுபோக்கு வசதிகள் பலவற்றின் சின்னமாக இப்புற்றரை விளங்குகிறது.

கரடி: வலிமை, திடசித்தம், குட்டிகளைப் பராமரித்து, பாதுகாக்கும் தன்மை என்பவற்றை கரடி புலப்படுத்துகிறது. தடித்த மண்ணிறம் புவியின் நிறத்தைப் புலப்படுத்துகிறது.

புறாமலர்: முந்திய ஸ்காபறோ மாநகரத்தின் சின்னமே புறாமலர். நீர்நாயின் கழுத்துப்பட்டையில் அறுகோணப் பொன்னுருவில் இது தொங்குகிறது. மேற்கே எற்றோபிக்கோவும், கிழக்கே ஸ்காபறோவும் அமைந்திருப்பதையே பசும் பூர்ச்சமர இலையும், புறாமலரும் புலப்படுத்துகின்றன.

மூன்று ஆறுகள்: மாநகரை ஊடறுத்து ஒன்ராறியோ ஏரிக்குள் பாயும் (ஹம்பர், டொன், றூஜ்) ஆறுகள் மூன்றையும் புலப்படுத்தும் சின்னம்.

வகைமையே எமது வலிமை: எமது புதிய மாநகரத்தை - ஏழு மாநகரங்கள் இணைக்கப்பட்டு, 26 இலட்சம் (2.6 million) மக்களின் ஒருமித்த வலிமையும், வகைமையும் தோற்றுவிக்கப்பட்டதை இப்பொன்மொழி எடுத்துரைக்கிறது.

### பதவிச் சங்கிலி

(மாநராதிபதியின் வரவேற்புக் கூடத்துக் கண்ணாடிப் பெட்டியில் காணப்படுகிறது)
நோமண்டிக் கோமகன்கள் (Dukes of Normandy) காலந்தொட்டு, ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு மேலாக உள்ளாட்சி அதிகாரிகள் தமது படைக்கலங்களுடன் கூடிய அதிகாரபூர்வமான முத்திரை ஒன்றை அணிந்து வந்துள்ளார்கள். அன்று தலைமை அதிகாரி தனது முத்திரையுடன் கூடிய தங்கச் சங்கிலி ஒன்றைத் தனது கழுத்தில் அணிந்ததுண்டு. அன்றைய 'ஒப்பனை அணிகலனே' இன்றைய பதவிச் சங்கிலியாக மலர்ந்துள்ளது. பதவிச் சங்கிலி அணியும் வழமை ஓர் ஒப்பனை ஆயினும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எமது மரபில் அது ஆழ்ந்து நிலையூன்றியுள்ளது. ஆதலால், தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரிகள் மாத்திரமன்றி, உள்ளாட்சி அமைப்புகளின் நிறைவேற்றுநர்களும் இம்மரபினைக் கைக்கொண்டு வருகிறார்கள். புதிய றொறன்ரொ மாநகராதிபதி ஒருவர் பதவி ஏற்கும்பொழுது இப்பதவிச் சங்கிலி அவர் கழுத்தில் இடப்படுகிறது. பதவியேற்பு விழ-ாவின்பொழுதும், றொறன்ரொ மாநகராட்சி மன்ற ஆரம்பக் கூட்டத்தின்பொழுதும் அதனை அவர் அணிந்திருத்தல் மரபு.

முந்திய ஐந்து மாநகரங்களிலிருந்தும், ஈஸ்ட் யோர்க் புரத்திலிருந்தும், றொறன்ரோ மாநகர் என்னும் பிராந்திய மாநகரிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட பதக்கங்கள் 1998-ல் றொறன்ரொ மாநகரம் தோற்றுவிக்கப்பட்ட பொழுது புதிய பதவிச் சங்கிலியில் பொறிக்கப்பட்டன.

### தொல்குடியினரின் கலைப்படைப்பு

(மாநகராதிபதியின் அலுவலகத்துக்கு வலதுபுறம் அமைந்துள்ளது)
ஆவித் துணைவர்களுடன் கூடிய மூதாதையரின் உருவம்

படைப்பாளி: நோர்வல் மொறிசோ (1932-2007)

நோர்வல் மொறிசோ (Norval Morrisseau), கனடாவின் அதிபுகழ் வாய்ந்த தொல்குடி ஓவியச் செம்மல்களுள் ஒருவர். முதற் குடியினரின் பழங்கதைகளுக்கும், ஆன்மீக பாரம்பரியத்துக்கும் காட்சி உருவம் கொடுத்தமைக்காக அவர்கள் அவரை ஏற்றிப் போற்றுகிறார்கள். அவர் தனக்குத் தானே கற்பித்த ஓவியர். 1962-ல் அவர் ஓவிய அரங்கேற்றம் கண்டார். தடித்த கருங்கோடுகளிடையே அடர்த்தியும் ஈர்ப்பும் மிகுந்த வண்ணங்களை இட்டுநிரப்பி வரையப்பெறும் அவருடைய ஓவியங்கள் திட்பமான உருவங்களைத் துலக்குபவை. நோர்வல் மொறிசோ ஓவியப் பணியாற்றிய காலத்தில் ஓவிய வேண்டுகோள்கள் பலவற்றை நிறைவேற்றினார். 1967-ல் இடம்பெற்ற பொருட்காட்சியில் கனடியத் தொல்குடியினரின் காட்சிமாடத்துக்கான சுவரோவியம் அவற்றுள் ஒன்று. 1978-ல் அவருக்கு கனடா விருது வழங்கப்பெற்றது.

- தொடரும்


**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# கிரகப்பிரவேசம் எதற்காக?

'இந்தியாவில் பொதுவாக இரண்டு வகையான கிரகப்பிரவேசங்கள் கொண்டாடப்படுகின்றன. கணவன் வீட்டிற்குள் ஒரு பெண் நுழைவது என்பது மிக முக்கியம். இது ஒரு வகையான கிரகப்பிரவேசம். அதனால்தான் அதைச் சுற்றியே பல சடங்குகளை உருவாக்கினர். இச்சடங்குகள் சிறுத்துக்கொண்டே சென்று, அவற்றில் பல சடங்குகள் இன்று அர்த்தமற்றவை ஆகிவிட்டன. ஏனெனில் இன்று அவள் திருமணத்திற்கு முன்பே கூட கணவன் வீட்டில் அனுமதிக்கப்படும் நிலையிருக்கிறது.

இன்று திருமணம் என்றால் ஆண், பெண் இருவருக்குள் நடக்கும் கவர்ச்சி அல்லது காதல் என்று நினைக்கின்றனர். ஆனால் அன்றோ திருமண உறவை அவ்விருவர், அவர்களின் குழந்தைகள், குடும்பத்தின் எதிர்காலம் இவற்றை நிர்ணயிக்கும் கருவியாகக் கருதினர். எந்த வகையான பெண் கணவனின் வீட்டிற்குள் நுழைகிறாள் என்பதிலும், கணவனின் வீட்டிற்குள் அவள் முறையாக நுழைவதிலும் அக்கறை செலுத்தினர்.

கிரகப்பிரவேசத்தில் மற்றொரு வகை நீங்கள் புதிதாக ஒரு வீடு கட்டி அதில் குடியேறும் முன் செய்வது. புது வீட்டில் குடியேறுபவர்கள் அவர்களுடைய புதிய வீடு, குடியிருப்பதற்கு உகந்த சூழலில் இருப்பதற்காக இதைச் செய்தனர்.


அவ்வீட்டின் வடிவம், அழகு, நிறம் இவையனைத்தும் முக்கியம் தான். ஆனால் எவ்வகையான சக்தி அவ்விடத்தில் இருக்கப் போகிறது என்பது மிகமிக முக்கியம். நம் கலாச்சாரத்தில் சக்தியூட்டப்படாத ஒரு இடத்தில் எவரும் உறங்குவது கூட இல்லை. எனவே கிரகப்பிரவேசம் என்பது சிறிய அளவிலான பிரதிஷ்டை ஆகும்.

அந்த வீட்டிற்குள் புதிதாக நுழையும் முன் அவ்விடம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில் மக்கள் அங்கே சென்று வாழ்வதில்லை. இந்த செயல்முறை மூலம் அந்த வீட்டில் வசிப்போர் இயல்பாகவே நல்வாழ்வை நோக்கிச் செல்வர். ஒரு இடத்தை உயிரோட்டமாகச் செய்யும் ஒரு செயல்முறை அது. எந்த ஒரு உயிரும் பிரதிஷ்டை செய்யப்படாத ஓர் இடத்தில் வாழக்கூடாது என்பது இக்கலாச்சாரத்தில் ஆழமாய் வேரூன்றிப் போன ஒரு விடயம். ஒவ்வொரு குடும்பமும் ஒரு புதிய இடத்தில் வசிப்பதற்கு முன் அந்த இடத்தை சக்தியூட்டி பின்னரே வசித்தனர்.

மேலும் குறைந்தது வருடத்திற்கு ஒருமுறையாவது அவ்வீட்டின் சூழலை மேம்படுத்தத் தேவையான சடங்குகளையும் செயல்முறைகளையும் செய்து வந்தனர். தனியொரு மனிதன் தன் முழுதிறனை அடையத் தேவையான உகந்த சூழ்நிலையை உருவாக்கினர்.

தற்போது மனிதனுடைய முழுத்திறன், அவன் எவ்வளவு பணம் சேர்க்கிறான் என்பதை வைத்துத்தான் மதிப்பிடப்படுகிறது. வெற்றியை பற்றிய நவீன கருத்து மிகவும் மேலோட்டமானதாக உள்ளது. பணமும் அந்தஸ்தும்தான் இப்போது வெற்றியை நிர்ணயிக்கிறது. அன்று வெற்றியை பற்றிய மக்களின் கருத்து இவ்வாறு இருக்க வில்லை. மாறாக அது பரந்து விரிந்த மனப்பான்மையோடு மிகுந்த ஆழமானதான இருந்தது.

ஒருவர் தன் உணர்தலில் ஒரு குறிப்பிட்ட நிலையில் இருந்து, பொருளாதார நிலையிலும் ஓரளவு சிறப்புடனிருந்து, குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூகத்தின் அன்பைப் பெற்றிருந்தால் மட்டுமே அவரை வெற்றி பெற்றவர் என்று நினைத்தனர். இது வெறும் தத்துவமல்ல. இது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இச்சமூகத்தில் இயல்பாக நடைபெற்ற நிகழ்ச்சி இது.



## சத்குரு வாசுதேவ்

கடந்த 30, 40 வருடங்களில் கணிசமான அளவு இதனை வேருடன் களைந்துள்ளோம் (சிரிக்கிறார்). அதனால் கிரகப்பிரவேசம் என்றால் அது இந்த செடி (தன்னை சுட்டிக் காட்டுகிறார்) வளர்ந்து, பூத்து, கனி கிடைப்பதற்கான சரியான நிலத்தை உருவாக்குவதே. ஆனால், துரதிஷ்டவசமாக இந்த சடங்குளைச் செய்வோர் தற்போது எதனால், எப்படி செய்கிறோம் என்கிற சரியான புரிதல் இல்லாமல், ஒரு கடமை போல செய்வதால் மக்களும் இதில் ஆர்வமிழக்க ஆரம்பித்துவிட்டனர். இன்று கிரகப்பிரவேசம் என்றால் அனைவரையும் விருந்துக்கு அழைப்பது, தேவைக்கதிகமாக சாப்பிடுவது, குடிப்பது என்று ஆகிவிட்டது. இன்றைய கிரகப்பிரவேசம் இப்படித்தான் ஆகிவிட்டது. நீங்கள் உங்களுடைய நல்வாழ்வை நோக்கிச் செல்லவில்லை. நீங்கள் சிறந்தபடி வாழ, உங்களைச் சுற்றியுள்ள சூழலை சரியான முறையில் உருவாக்குவது மிகவும் முக்கியம். குறிப்பாக குழந்தைகள் வளரும் பொழுது, சூழ்நிலைக்கேற்ப அவர்கள் மாறக்கூடிய நிலை இருக்கும்போது சரியான சக்திநிலையை அமைத்துக் கொடுப்பது மிகவும் முக்கியம்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org / **Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org




# அகதி...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

என்றார். இதன் மூலம் அரசு பலகோடி டொலரை மிச்சம் பிடிக்கின்றது என்றார். தற்போது அகதிக்கோரிக்கை மறுக்கப்பட்டவர்கள் ஓடி ஒளியும்போது அவர்களைத் தேடிக்கண்டுபிடிக்க அரசு பலகோடி டொலரை செலவிடுகின்றது என்றார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த குடிவரவு சட்டத்தரணி Joel Sandaluk, இது அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவரை அவரது சட்ட உரிமைகளை உபயோகிக்காமல் இருக்க அரசு வழங்கும் இலஞ்சம் என்றார். இது ஏற்கெனவே 20 நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் இந்த முறை தற்போது கடைப்பிடிக்கப்படுகின்றது. பிரித்தானியா அகதிநிலை நிராகரிக்கப்பட்ட வருக்கு அவரது சொந்த நாட்டிற்கு செல்ல $6,000 வழங்குகின்றது.

இந்த $2,000 டொலரை பெறுவதற்கு பல கட்டுப்பாடுகள் உள்ளன. முதலாவதாக இவ்வாறு அகதிக்கோரிக்கை நிராகரிக்கப் பட்டவர் மீது எந்த ஒரு பாரதூரமான குற்றச்சாட்டுகளும் (criminal records) இருக்கக்கூடாது. மற்றையது அகதிக் கோரிக்கை நிராகரித்தவர் இப்பண உதவிக்கு எப்போது விண்ணப்பிக்கின்றார் என்பதிலும் தங்கியிருக்கின்றது. ஒருவர் விரைவில் விண்ணப்பித்தால் $2,000 உம் கிடைக்கும். பல மேன்முறையீடுகளுக்கு பின்னரே விண்ணப்பித்தாரானால் அவருக்கு இந்த $2,000 இன் ஒரு பகுதி பணமே கிடைக்கும்.

இது சம்பந்தமாக கருத்து தெரிவித்த ரொறொன்ரோவை சேர்ந்த இன்னொரு குடிவரவு சட்டத்தரணி Max Berger உண்மையான அகதிகள் இதற்கு விண்ணிப்பிக்கமாட்டார்கள் என்றார். உண்மையான அகதிகள் $2,000 இற்காக தங்கள் நாட்டிற்கு திரும்பிச்சென்று கொலை செய்யப்பட தயாராக இல்லை.


கனடாவில் 2009 இல் 34,048 அகதிக் கோரிக்கைகளும் 2010 இம் 22,628 அகதிக்கோரிக்கைகளும் சமர்ப்பிக்கப் பட்டன. இதேபோல் அகதிக்கோரிக்கை நிராகரிக்கப்பட்வர்களில் கனேடிய அதிகாரிகளினால் 2009 இல் 13,249 பேரும் 2010 இல் 15,073 பேரும் நாடு கடத்தப்பட்டிருக்கின்றனர். இவர்களில் 12% மானவர்கள் பாரதூரமான குற்றச்சாட்டுகள் உள்ளவர்கள்.

# தமிழினத்தைப்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

தமிழகத்தில் கூட பல போராட்டங்களை நமது உறவுகளுக்காக அங்குள்ள தலைவர்களும் தமிழ் நாட்டு மக்களும் நடத்தினார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது. மேலும் தாயகத்தில் தற்போது அரசாங்கத்தின் நில அபகரிப்புக்கு எதிராக நடைபெறும் பல போராட்டங்களுக்கு உலகெங்கிலும் பல ஆதரவுப் போராட்டங்கள் நடைபெற்றவண்ணம் உள்ளன. இலங்கையில் பல சமயங்களைச் சேர்ந்த மக்களும் நமது போராட்டங்களுக்கு தங்கள் ஆதரவைத் தருகின்றனர் என்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

எனவே நமது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் மக்கள் அனைவரும் தங்கள் பேராதரவைத் தரவேண்டும். ஒரு பலமுள்ள அமைப்பாக நமது அரசு உலகின் கண்களுக்கு தெரியும் ஒரு நாளுக்காக நாம் மேலும் உறுதியுடன் போராட வேண்டும் என தெரிவித்தார்.

ELECTRICAL WORKS

***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - *416-286-2880*

சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை

தலைவிதியே மாறுதாம்!
மோட்கேஜ் விதி
மாறினால் என்ன ?

மாற்றம் ஒன்றே மாறாதது !

Our New Rates:
5 Yr Fixed Rate : 3.09 %
5 Yr Variable Rate : 2.90 %
OAC

# மோட்கேஜ் கிளினிக்



## 416-644-3555

**CENTUM Rapid Mortgages Inc.**
FSCO LIC # 10156

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



தயா PK கந்தையா BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

ஜெ. இராசதுரை (Jey) MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. ⟹ "Rapid Response; Rapid Results"

# விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி - 2012

## விளையாட்டுத்தகவல் 332

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி, இந்த முறை லண்டனில் ஜுலை 27ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 12ஆம் திகதி வரை நடைபெறுகிறது. நவீன ஒலிம்பிக்கின் 30வது போட்டி இது. நவீன ஒலிம்பிக் போட்டி மூன்றாவது முறையாக லண்டனில் நடைபெறுகிறது. இதன்மூலம் நவீன ஒலிம்பிக்கை மூன்று முறை நடத்திய முதல் நகரம் என்ற பெருமை லண்டன் வசமாகியுள்ளது.




இதற்கு முன்னர் 1908, 1948-ம் ஆண்டுகளில் லண்டனில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றுள்ளது. கி.மு. 776-ம் ஆண்டு முதல் ஒலிம்பிக் போட்டி நடைபெற்று வந்தாலும், 1896-ம் ஆண்டுதான் நவீன ஒலிம்பிக்காக உருவெடுத்தது. ஒரு தலைமுறைக்கே உத்வேகம் கொடு என்பதுதான் லண்டன் ஒலிம்பிக்கின் போட்டியின் வாசகம். 204 நாடுகளைச் சேர்ந்த 10,500 வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்கின்றனர். 26 வகையான விளையாட்டுகளில் 302 போட்டிகள் நடைபெறவுள்ளன. ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா மற்றும் நிறைவு விழா மிக பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆஸ்கார் விருதை அள்ளி வந்த ஸ்லம்டாக் மில்லினர் பட இயக்குநர் டேனி பாயல் தலைமையிலான குழுவினர்தான் தொடக்க மற்றும் நிறைவு விழா நிகழ்ச்சிகளை அரங்கேற்றவுள்ளனர். இதேபோல் இந்தியாவின் ஏ.ஆர்.ரஹ்மான் உள்ளிட்ட பல்வேறு இசைப் பிரபலங்களும் ஒலிம்பிக்கை அதிரவைக்கவுள்ளனர். அதிரடி இசை உள்ளிட்ட பல்வேறு பிரமாண்டங்களுடன் தொடங்கும் இந்த ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவை உலகம் முழுவதிலும் இருந்து 100 கோடிக்கும் மேற்பட்டவர்கள் டி.வி. மற்றும் இணையத்தளங்கள் மூலம் கண்டுகளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாரத்தான், டிரையத்லான், ரோடு சைக்கிளிங் ஆகிய போட்டிகளுக்கு அனுமதி இலவசம் என்றபோதிலும், ஒலிம்பிக்கில் முதல்முறையாக சேர்க்கப்பட்டுள்ள படகுப் போட்டிக்கு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இராணுவ வீரர்களுக்கு இலவச டிக்கெட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் 2008-ல் 2012-ம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட அடுத்த நாளில் லண்டனில் நிகழ்ந்த ரயில் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் இலவச டிக்கெட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு பயங்கரவாத கும்பல்களிடம் இருந்து ஒலிம்பிக் போட்டிக்கு அச்சுறுத்தல் இருப்பதால், பாதுகாப்புக்காக பல கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மைதானத்தைச் சுற்றியுள்ள வீடுகளில் ஏவுகணைகள் நிறுத்தப்படுவதோடு, வான்வழி மற்றும் நீர்வழி பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேம்ஸ் நதியில் பாதுகாப்பு கப்பல்கள் நிறுத்தப்படுகின்றன. இதுமட்டுமின்றி பல்லாயிரக்கணக்கான பொலிசாரும், வீரர்களும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர். கழிப்பறைகளைத் தவிர மற்ற இடங்களில் முழுவதுமாக கண்காணிப்புக் கேமரா பொருத்தப்படுகிறது.

ஒலிம்பிக் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டிகளுக்காக தங்கம், வெள்ளி, வெண்கலம் என மொத்தம் 4,700 பதக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ரோயல் மின்ட் என்ற நிறுவனம் பதக்கங்களை தயாரித்துள்ளது. இதை டேவிட் வாட்கின்ஸ் என்பவர் வடிவமைத்துள்ளார். பதக்கங்களின் எடை 375 கிராம் முதல் 400 கிராம் ஆகும். இது 7 மி.மீ. தடிமனுடையது. பதக்கத்தின் முன்புறம் கிரேக்கத்தின் வெற்றிக்கடவுளான நைக்கின் உருவமும், பின்புறத்தில் ஒலிம்பிக் போட்டியின் இலச்சினை, தேம்ஸ் நதி மற்றும் வீரர்களின் ஆற்றலைக் குறிக்கும் வகையிலான தொடர் கோடுகளும் காணப்படும்.

ஒலிம்பிக் பார்வையாளர்களை ஈர்ப்பதற்காக உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரம் போன்ற ஒரு கோபுரத்தை போட்டி நடைபெறவுள்ள மைதானத்திற்கு அருகிலேயே அமைத்திருக்கிறார்கள். 376 அடி உயரத்தில் சுருள் வடிவில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருக்கும் இக்கோபுரத்திற்கு ஒலிம்பிக் கோபுரம் என்றே பெயர் சூட்டப்பட்டுள்ளது. 455 சுருள் வடிவ படிக்கட்டுகள் இதில் காணப்படுகின்றன. இங்கு ஹோட்டல் வசதியும் உள்ளது. இங்கிருந்து 24 மைல் தொலைவுக்கு லண்டன் நகரின் அழகை ரசிக்க முடியும்.

இந்தக் கோபுரம் அமெரிக்காவின் நியூயார்க் நகரிலுள்ள சுதந்திர தேவியின் சிலையைவிட 22 அடி உயரம் அதிகமாகும். இந்தக் கோபுரத்தை வடிவமைத்திருப்பது வேறு யாருமல்ல, இந்திய ஓவியர் அனீஸ் கபூர்தான்.

யூரோ கிண்ண கால்பந்து: ஸ்பெயின் சாம்பியன் பட்டத்தை வென்றது

## யூரோ கிண்ண கால்பந்து: ஸ்பெயின் சம்பியன் பட்டத்தை வென்றது!

ஐரோப்பிய கிண்ண இறுதி ஆட்டத்தில் இத்தாலியை 4-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஸ்பெயின் நடப்பு சாம்பியன் கிண்ணத்தை தக்க வைத்துக் கொண்டது. ஐரோப்பிய கிண்ண கால்பந்து போட்டி கடந்த ஜூன் மாதம் 8ஆம் திகதி



போலந்து மற்றும் உக்ரேனில் தொடங்கியது. இந்த போட்டியில் ஐரோப்பிய கண்டத்தை சேர்ந்த முன்னணி 16 அணிகள் பங்கு பெற்றன. இதில் சி பிரிவில் இடம் பெற்றிருந்த நடப்பு சாம்பியன் ஸ்பெயின் மற்றும் இத்தாலி அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின. அரை இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் போர்ச்சுகல் அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. மற்றொரு அரை இறுதியில் இத்தாலி 2-1 என்ற கோல் கணக்கில் வலுவான ஜேர்மனி அணியை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இறுதிப் போட்டி உக்ரேனின் கீவ் நகரில் நடைபெற்றது. ஸ்பெயின் அணியில் முதல் 11 பேர் அணியில் பெப்ரிகாஸ் இடம் பெற்றார். இத்தாலி அணியில் எந்த பெரிய மாற்றமும் இல்லை. ஜேர்மனிக்கு எதிராக விளையாடிய அதே வீரர்களே இந்த ஆட்டத்திலும் களம் இறங்கினர். ஆரம்பம் முதலே ஸ்பெயின் அதிரடியாக விளையாடியது. இதனால் 14வது நிமிடத்தில் ஸ்பெயின் முதல் கோலை அடித்து இத்தாலிக்கு அதிர்ச்சியை அளித்தது. மைதானத்தின் வலது பக்கத்தில் இருந்து கிட்டத்தட்ட மைனஸ் டிகிரியில் இருந்து பெப்ரிகாஸ் கிராஸ் செய்த பந்தை மான்செஸ்டர் சிட்டி வீரர் டேவிட் சில்வா தலையால் முட்டி கோலுக்குள் அடித்தார். இந்த கோல் மூலம் ஸ்பெயின் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. தொடர்ந்து 41வது நிமிடத்தில் ஸ்பெயின் அடுத்த கோலை போட்டது. நடுகளத்தில் இருந்து சேவி செய்த பாஸை பெற்ற ஜோர்டி ஆல்பா அதனை மிக நேர்த்தியாக கோலாக மாற்றினார். முதல் பாதியில் ஸ்பெயின் 2-0 என்று முன்னிலை பெற்றது. பிற்பாதியில் ஆன்டனியோ காசோனாவுக்கு பதிலாக 34 வயது அனுபவமிக்க உடினிஸ் ஸ்டிரைக்கர் ஆன்டானியோ டி நடாலி களம் இறக்கப்பட்டார். இறங்கிய உடனே மிக அருமையாக ஒரு ஹெடிங் செய்தார். ஆனால் ஸ்பெயின் கோல்கம்பத்துக்கு சற்று மேலே சென்றதால் கோலாகவில்லை. இரு கோல்கள் பின்தங்கிய நிலையில் இத்தாலி வீரர்கள் கோல் அடிக்க கடும் போராட்டம் நடத்தினர்கள். ஆனால் ரியல்மாட்ரிட் கோல்கீப்பர் இகெர் கேசிலாஸ் இத்தாலி வீரர்களின் கோல் முயற்சிகளை தகர்த்து எறிந்து விட்டார். பின்னர் மாற்று ஆட்டக்காரராக இறங்கிய ஸ்பெயின் வீரர் பெர்னான்டோ டார்ரஸ் தன் பங்குக்கு 84வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். ஸ்பெயின் அணிக்காக டார்ரஸ் அடிக்கும் 31வது சர்வதேச கோல் இதுவாகும். முதல் சுற்று லீக் ஆட்டத்தில் இத்தாலியிடம் கடும் பாடு பட்ட ஸ்பெயின் இறுதி ஆட்டத்தில் இத்தாலியை உண்டு இல்லை என்று ஆக்கியது. ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் 88வது நிமிடத்தில் ஸ்பெயின் 4வது கோலை அடித்தது. பெர்னான்டோ டார்ரஸ் பாஸ் செய்த பந்தை ஜுவான் மாத்தா வளைக்குள் தள்ள ஆட்ட நேர இறுதியில் ஸ்பெயின் 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது. ஐரோப்பிய கிண்ண வரலாற்றில் முதல் முறையாக 4 கோல் அடித்து ஸ்பெயின் கிண்ணத்தை கைப்பற்றியது புதிய சாதனை ஆகும். இதற்கு முன் 1964,2008ம் ஆண்டுகளில் ஸ்பெயின் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

## 41 ஆண்டுகளுக்கு பிறகு படுதோல்வியை சந்தித்த அவுஸ்திரேலிய அணி

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடியது.

முதல் 3 ஆட்டங்களிலும் இங்கிலாந்து வென்ற நிலையில் 4வது ஆட்டம் மழையால் ரத்தானது. இந்நிலையில் கடைசி ஆட்டம் ஓல்டு டிராப்டில் நடந்தது. மழை காரணமாக 32 ஓவர்களை கொண்ட ஆட்டமாக நடத்தப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்தது. ஜார்ஜ்பெய்லி 41 பந்தில் 2 சிக்சர் 3 பவுண்டரியுடன் 46 ஓட்டங்களும், வார்னர் 32 ஸ்மித் 21 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் போப்ரா டிரேடுவெல் தலா 2 ஸ்டீவன்பின் 1 விக்கெட் கைப்பற்றினர்.

மழை குறுக்கீட்டால் டக்வொர்த் லீவிஸ் விதிப்படி இங்கிலாந்து அணிக்கு 29 ஓவரில் 138 ஓட்டங்கள் எடுக்க வேண்டுமென இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது. தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து 27.1 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 138 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஹுக் 78 பந்தில் 4 பவுண்டரியுடன் 58 ஓட்டங்களும், ரவிபோப்ரா 56 பந்தில் 5 பவுண்டரியுடன் 52 ஓட்டங்களும் எடுத்தனர். இந்த வெற்றியால் இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை 4-0 என வென்று கிண்ணத்தை கைப்பற்றியது. ஒருநாள் போட்டி தொடரில் அவுஸ்திரேலிய அணி 41 வருடங்களுக்கு பிறகு படுதோல்வியை சந்தித்துள்ளது. சமீப காலமாக வெளிநாட்டு சுற்றுப்பயணங்களில் இப்படியொரு மோசமான தோல்வியை அவுஸ்திரேலியா பெற்றதில்லை. இதனால் அணித்தலைவர் கிளார்க் மீது கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளது.

## படுதோல்வியடைந்தும் தரவரிசையில் தப்பியது அவுஸ்திரேலியா

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடிய அவுஸ்திரேலிய அணி படுதோல்வியடைந்து தொடரை இழந்தது. ஒரு ஆட்டம் மழையால் ரத்து செய்யப்பட்ட நிலையில் 4 ஆட்டத்திலும் மைக்கேல் கிளார்க் தலைமையிலான அவுஸ்திரேலியா அணி தோல்வியடைந்தது. இந்த தொடருக்கு முன்பாக அவுஸ்திரேலிய அணி 123 புள்ளிகளுடன் தரவரிசை பட்டியலில் முதலிடத்திலிருந்தது. தொடரை இழந்த போதும் அவுஸ்திரேலிய அணி 119 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. தென் ஆப்ரிக்கா அணி 2வது இடத்திலும், இங்கிலாந்து அணி 3வது இடத்திலும் உள்ளது. இந்திய அணி 4வது இடத்திலும் உள்ளது. ஒருநாள் போட்டித்

**எஸ். கணேஷ்**



தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# அடமானக்கடனில் புதிய முறை ஆரம்பம்!

## யூலை 09, 2012

கடந்த பத்து ஆண்டுகளிற்கு மேலாக ஆதனம் விற்று வாங்கல்களின் முறையில் இப்பொழுது சற்று மாற்றம் ஏற்படத்தொடங்கியுள்ளது. கனடிய மத்திய அரசு, எதனை சில காலம் எதிர்பார்த்து, அதற்கேற்ப பல நடவடிக்கைகளை எடுத்ததோ அதன் பலாபலன்கள் கிடைக்கத் தொடங்கியுள்ளன. அமெரிக்காவில் ஏற்பட்ட நிலைமை



இங்கும் ஆதன வியாபாரத்தில் ஏற்படக்கூடாது என்பதில் மத்திய வங்கி ஆளுனர் திரு. மார்க் கார்னி மற்றும் நிதி அமைச்சர் ஜிம் பிளஹற்றி மிகவும் கவனமாக இருக்கின்றார்கள்.

அடமானக் கடன் பெறுவதில் ஏற்படுத்திய மிக இறுக்கமான மாற்றங்களிற்கு சில காரணங்கள் உண்டு. ஆதனத்தின் விலையில் ஏற்பட்ட அதீத அதிகரிப்பு, உலகளாவிய பொருளாதார நிலை மாற்றம் குறிப்பாக, அமெரிக்காவில் ஏற்பட்ட மிக நெருக்கடியான பொருளாதார வீழ்ச்சி கனடாவிலும் ஏற்படலாம் என்ற நியாயமான பயம், கனடிய மக்கள் தொழில்பெறுவதில் ஏற்படும் இக்கட்டான நிலைமையை கொள்ளலாம்.

இத்தகைய மாற்றங்கள் கனடிய ஆதன விலையில் வியாபாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்துமா? ஆதன விலை அதீத அதிகரிப்பு, வட்டிவீதத்தில் அதிகரிப்பு ஆதனத்தை வாங்கி விற்பவர்கள் அதிக இலாபத்தை அடைவது, மேலதிக பணத்தை பலவழிகளிலும் பெற்று ஆதனத்தில் முதலிடுவது, வாடகையினால் ஏற்படும் வருமானமானது அடமானக்கடன், மற்றும் சோலை வரி போன்றவற்றிற்கு கூட செலுத்த போதாமை (மாதாந்த பற்றாக்குறை) இவ்வாறான நிலைமைகள் ஏற்படும்போது ஆதனத்தின் விலையில் இறக்கம் (Bubble Burst) ஏற்படலாம். இதுவே பொருளாதார விதி.

2008-2009 காலப்பகுதியில் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் ஏற்பட்ட விலை இறக்கம் மத்திய அரசினதும், ஆளுனரினதும் சாதுரியமான சிறந்த திறமையான செயற்பாட்டால் இந்நிலைமை குறுகிய காலத்தில் மாற்றப்பட்டது. 2002 இலிருந்து வீட்டின் விலை இதுவரை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட வருடாந்த பணவீக்கத்தை விட 5% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வன்கூவர், ரொறொன்ரோ பகுதிகளில் இந்நிலைமை அதிகமாகக் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

### தொடர் - 370

மாதாந்த, ஆதனத்தின் விலை, ஆண்டு வருமானம் இவற்றின் விகிதம் (Ratio) குறிப்பிட்ட இலக்கத்தைத் தாண்டும்போது பொருளாதார நிலைமையில் கனடியர்களால் தாக்குப்பிடிக்காமல் போகலாம். இவ்விகிதம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


**HomeLife/GTA Realty Inc. Brokerage***

*Independently Owned & Operated




Raja Mahendran, P. Eng.
Broker/Owner

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

**CONDO FOR RENT**
**KENNEDY & HWY 401**
1 Bedroom condo for rent.
1 Parking,
1 Year old building.
Easy access. Rent $1100+

**CONDO. FOR SALE**
**FINCH & MIDDLEFIELD**



2 + Den condo.
Close to GTA Square.
Asking Price $229,000

**OFFICE SPACE FOR LEASE / SALE**
**FINCH & MIDDLEFIELD**
2 Room renovated.
Many uses Available.

**OFFICE SPACE FOR LEASE**



745 Sq.ft Embassy plaza.
2nd floor. All inclusive
Resonable rent. ($850)

**CONVENIENCE STORE FOR SALE**
Weekely sale (18k - 22k).
Lotto, video, CD, DVD.
Established store
Asking only $139,900.
Many other businesses can be done in this location.

**BUSINESS SPACE FOR SALE**
**MARKHAM & STEELES**
-700 Sq.ft
-731 Sq.ft
Price negotiable.
Building sale.

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

# வேதனைகளுடன் வாழும் மாற்றுத்திறனாளிகளுக்கான எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு சிறு வசந்தம்!

## பதிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகள் சேமிப்பு திட்டம் (RDSP - REGISTERED DISABILITY SAVINGS PLAN)

## கனடிய தகவல் தொடர் 176

இந்தியாவில் சில இடங்களில் காணிகள், நிலங்கள், வர்த்தகங்களில் முதலிடுவதனை தமிழ் நாட்டு தமிழில் அங்கு உள்ள நண்பர்கள் 'பொன் முட்டையிடும் வாத்து' என ஒரு வகையான உவமான, உவமேயத்துடன் குறிப்பிடுவார்கள். அதேமாதிரியான வசன நடையில் சுட்டிக்காட்ட கூடிய ஒரு கனடாவின் முதலீட்டு திட்டமே 2008 ஆம் ஆண்டில் இருந்து கனடிய மத்திய அரசினால் ஊக்குவித்து நடைமுறைப்படுத்தி வரும் 'பதிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகள் சேமிப்பு திட்டம் (RDSP) என்பதாகும். உடல், உள ரீதியாக கடுமையான நிலையில் பாதிக்கப்பட்டு (Severe & Prolonged Physical or Mental Impairment) தங்களின் அன்றாட வாழ்வில் பூரணமாக இயங்க முடியாது ஏதோ வேதனைகள், சோதனைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அந்த வாழ்வின் நிரந்தர துயரத்திற்கு ஒரு சிறு ஆறுதலாக இந்த அருமையான சேமிப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தி அரசு ஊக்குவித்து வருகின்றது.

- மாற்றுத்திறனாளிகள் 18 வயதினை அடைந்து தெளிவான மன நிலையில் இருந்தால் அவர்களே தங்களுக்கு தாங்களே இத்திட்டத்தினை ஆரம்பிக்கலாம்.
- 18 வயதுக்கு குறைந்தவராயின் அவரது பெற்றோர் இத்திட்டத்தினை ஆரம்பிக்கலாம்.
- மனவிருத்தி குன்றியவர்களாக இருந்தால் அவரது சட்டரீதியான பெற்றோர், அல்லது சட்டரீதியான பாதுகாவலர்கள் அல்லது அவர்கள் சார்பில் சட்டரீதியாக அனுமதிக்கப் பட்ட நிறுவனங்கள் அவர் சார்பில் இத்திட்டத்தினை கையாண்டு செயல்படுத்தலாம்.
- மாற்றுத்திறனாளிகள் கனடாவில் வசிப்பவராகவும், வலிமையான சமூக காப்புறுதி இலக்கம் (Social Insurance Number) வைத்திருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

### மாற்றுத்திறனாளிகள் எப்படி இச்சேமிப்பு திட்டத்தினை ஆரம்பிப்பது.

கனடா வருமான வரி இணையதளத்தினுள் சென்று 'மாற்றுத்திறனாளிகள் சலுகை சான்றிதழ் விண்ணப்பம்' (Disability Tax Credit Certificate Form #T2201) என்னும் விண்ணப்பபடிவத்தினை பெற்று நிரப்பி கடுமையான முறையில், அன்றாட வாழ்வினை பாதிக்கும் வகையில் மாற்றுத் திறனாளி என்பதனை மருத்துவ அத்தாட்சியுடன் நிரூபித்து கனடிய மத்திய அரசின் வரி சலுகை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்து அரசின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இதனை பூர்த்தி செய்து, இரண்டாவது கட்டமாக கனடாவின் ஏதாவது ஒரு வங்கியில் சேமிப்பு முதலீட்டு திட்டத்தினை ஆரம்பிக்க வேண்டியது மட்டுமே! தொடர்ந்து வங்கியின் நிதி நிபுணர்கள் இவை தொடர்பாக தொடர்ந்து வழிகாட்டுவார்கள்.

### சேமிப்பு ஊக்குவிப்பு பண உதவி மானியங்களை அரசு எந்த அளவில் வழங்குகின்றது?

இருவகையான பண உதவி மானியங்களை அரசு தங்கள் சேமிப்பினை ஊக்குவிப்பதற்கு இங்கு வழங்குகின்றது.

அதனை ஆங்கிலத்தில் பின்வரும் இரு பெயர்களில் குறிப்பிடப்படுகின்றது.




### 1. DISABILITY SAVINGS GRANT

A. தாங்கள் சேமிப்பில் இடும் ஒவ்வொரு டொலருக்கும் மூன்று டொலர் அரசு தங்கள் கணக்கில் வைப்பு செய்கின்றது.

இங்கு வருடம் ஒன்றுக்கு ஆக கூடுதலாக $500 டொலர் வரை தாங்கள் சேமிப்பில் இடலாம்.
$500 x 3 = $1500 டொலர் என அரசு தங்களுக்கு இனாமாக தங்களின் இதே முதலீட்டுக்கணக்கில் வைப்புச் செய்யும்.

B. வருடம் ஒன்றுக்கு மேலே குறிப்பிடப்பட்ட $500 டொலருக்கு மேலாக தாங்கள் சேமிக்கும் ஒவ்வொரு டொலருக்கும் அரசு $2 டொலர் என வழங்கும்.

ஆக கூடுதலாக வருடம் ஒன்றுக்கு தாங்கள் மேலதிகமாக சேமிக்கும் $1000 டொலர் வரை அரச மானியம் கிடைக்கும். $1000 x 2 = $2000 டொலர் வரை அரசு இலவசமாக சேமிப்பு ஊக்குவிப்பு பணமாக முதலீட்டுக்கணக்கில் வைப்புச்செய்யும்.

அதாவது $1500 டொலர் வருடம் மாற்றுத்திறனாளிகள் வாழ்வுக்காக சேமித்தால் அரசு $3500 டொலர் பணத்தினை வருடம் ஒன்றுக்கு 'Disability Grant' என்னும் பெயரில் இனாமாக தந்து ஊக்குவிக்கின்றது.

(ஆனால் அங்கவீனமானவரின் பெற்றோரின் வருட வருமானம் என்பது $85,414 க்கு குறைவாக இருத்தல் வேண்டும். அதற்கு மேலால் வருமானம் இருந்தால் $1டொலர் சேமிப்புக்கு $1 டொலர் என்ற அடிப்படையில் ஆக கூடுதலாக $1000 டொலர் வரையே வருடம் ஒன்றுக்கு அரசின் இலவச ஊக்குவிப்பு மானியமாக வழங்கப்படும்.)

பகுதி பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ வருடம் ஒன்றுக்கு இச்சேமிப்பு முதலீட்டு திட்டத்தில் $1500 டொலர் வரை சேமித்தால் $3500 டொலர் வரை அரச இலவசமானிய பணம் கிடைப்பதுடன் இச்சேமிப்பு ஊக்குவிப்பாக இன்னும் ஒரு உதவி சலுகையினை அரசு வழங்குகின்றது. அதனை ஆங்கிலத்தில் 'Disability Savings Bond' என குறிப்பிடப்படும்.

### 2. DISABILITY SAVINGS BOND

மாற்றுத்திறனாளியின் குடும்பத்தவர்களின் வருமானம் என்பது $24,863 க்கு குறைவாக இருந்தால் $1000 டொலர் ஒவ்வொரு வருடமும் முதலீட்டுக்கணக்கில் இனாமாக வழங்கப்படும்.

இங்கு கணக்கில் வருடம் ஒன்றுக்கு சேமிப்பில் ஒரு டொலர் வைப்பு செய்தாலும் $1000 டொலர் அரசினால் வழங்கப்படும்.

$24,863 - $42,707 க்கும் இடையில் வருமானமிருந்தால் இந்த $1000 டொலர் இலவச பணத்தில் குறைப்பு செய்யப்பட்டு வழங்கப்படும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

High Demand in Future
Big lots, Acre land
Bungalow
1, 2 Acres
HWY 48, Stouffville
New Market

**Daisy Mart**
Brand New
convenience store at Tim Hortons
North of Newmarket
at Leslie Main Road

10% profit appreciation
brand new homes
3,000 sqft.
only $5,000 deposit
February 2014 closing
Near HWY 400

**For Sale**
Markham & Ellesmere
3 Bedrooms Condo.
for sale

10 % down / commercial mortgage/ Private lenders
Antony P. Thangarajah
Mortgage Agent
Dir.: 416.457.0651
Tel./Fax: 416.431.5115

**Renovate and Sell**
Old detached
bungalow near
University of Toronto

# பிரயாண நோக்களையும் மன உளைச்சலையும் தடுத்தல்

## மின்வலையில் வந்தவை - 29

பிரயாணஞ் செய்வதால் உடம்பு மிகுந்த கஷ்டங்களுக்கு உள்ளாகிறது. நீங்கள் வியாபாரக் காரணங்களுக்காகவோ அல்லது உல்லாசப் பிரயாணத்துக்காகவோ நீண்ட தூரத்துக்கு கார் மூலமாகவோ, விமான மூலமாகவோ பயணஞ் செய்தால் உடல் இளைத்து, களைத்து, புண்ணாகி விறைத்து விடும். 'நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பதால் உங்கள் உடலுக்கு ஆபத்து ஏற்படும்' என வைத்தியர் ஜோர்ஜ் றெயிற்சிஸ் கூறுகிறார். நீங்கள் மிகவும் சொகுசான வாகனத்தில் அல்லது விமானத்தில் முதலாம் வகுப்பில் பிரயாணஞ் செய்தாலும், சீரற்ற நிலைகளில் உட்கார்ந்திருப்பதால் இரத்தக் குழாய்களில் அழுத்தம் ஏற்படும். இதனால் கால்தசைகளை சோரவிட்டு இரத்த ஓட்டத்தைச் சீராக்குவது மிக முக்கியம். எனவே அவர் இவ்வாறான சிரமங்கள் ஏற்படாமல் இருப்பதற்குச் சில குறிப்புகளைத் தருகிறார்.

### உடலைச் சூடாக்குவதும் குளிராக்குவதும்

பிராயணஞ் செய்வது ஒரு விளையாட்டு நிகழ்வு எனக் கருதுங்கள். கார் அல்லது விமானத்தில் ஏறுவதற்கு முன் சில பயிற்சிகளைச் செய்து உடலைச் சூடாக்கிக் கொள்ளுங்கள். பின்னர் நீங்கள் செல்ல வேண்டிய இடத்தை அடைந்ததும் உடலைக் குளிராக்குங்கள். உங்கள் பின்னங்கால் தசைகளையும் தசை நார்களையும் நீட்டுவதற்கு வேகமாக நடவுங்கள்.

### விமானத்தில் பிரயாணிக்கும் போது

எழுந்து, நிமிர்ந்து நின்று உங்கள் முதுகெலும்பு 'S' போன்று வளைவதை உணருங்கள். உங்கள் இருக்கையில் அமரும் போது சுருட்டிய தலையணை



அல்லது விரிப்பை முதுகுக்கு அணையாக இருப்புக்கு மேல் இருங்கள். இன்னுமொரு தலையணையை உங்கள் கழுத்துக்கும் இருக்கையின் தலைசாய்வுக்கு மிடையிலுள்ள இடைவெளிக்குள் வையுங்கள். உங்கள் இருக்கை சிறிது பள்ளமாக இருந்தால் கம்பளியை மடித்து வைத்துவிட்டு அதன்மேல் இருங்கள்.

2. உங்கள் எடையில் 5 முதல் 10% மேலிருக்கும் எடையுள்ள பிரயாணப் பைகள் யாவற்றையும் பொதிப்பகுதிக்கு அனுப்பி விடுங்கள். அதிகளவு நிறையுள்ள எப்பொருளையும் இருக்கைக்கு மேலுள்ள பகுதியில் வைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இதனால் கழுத்து, கீழ் முகுதுப் பகுதிகளில் வலி ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

3. உங்கள் இருக்கைக்குக் கீழ் ஏதாவது பொருளை வைப்பதானால் அசாதாரணமுறையில் கைகளை அல்லது கால்களைப் பாவிக்காதீர்கள். இவ்வாறு செய்தால் தொடைகளில் அல்லது முதுகுத் தசைகளில் வலியை அல்லது தடிப்பை ஏற்படுத்தும். நன்கு இருந்த பின்னர் பையை மெதுவாகச் சிரமப்படாமல் இருக்கைக்குக் கீழே தள்ளி விடுங்கள்.

4. அமர்ந்திருக்கும் போது, இடைக்கிடை அமரும் நிலையை மாற்றுங்கள். இதனால் இரத்ததோட்டம் சிறப்படையும். கால்களில் பிடிப்பும் ஏற்படாது. இடைக்கிடை கால்களையும் கணுக்கால்களையும் கைகளால் பிடித்து (மசாஜ்) விடுங்கள். கால்களை உயர்த்தி மடக்குங்கள், முழங்கால்களை மேலும் கீழும் அசையுங்கள். உங்கள்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்



# பிரயாண...

### 09ஆம் பக்கத்தொடர்ச்சி

இருக்கையின் முன்னால் ஒரு பையை அல்லது புத்தகத்தை வைத்து அதன் மேல் கால்களை உயர்த்தி வையுங்கள்.

5. காற்று வெளிவரும் துவாரங்களுக்கு நேர்கீழே அமரவேண்டாம். தொடர்ச்சியாகக் கூடிய காற்று உங்கள் கழுத்திலும் தோள் தசைகளிலும் இறுக்கமான நிலையை உண்டாக்கும்.

### காரில் பிரயாணஞ் செய்வது

1. உங்களது இருக்கையை செலுத்த சக்கரத்துக்கு (Steering Wheel) அண்மையாகச் சௌகரியமான முறையில் சரி செய்து கொள்ளுங்கள். உங்கள் முழங்கால்கள் இடுப்பு மட்டத்துக்குச் சிறிது மேலே இருக்க வேண்டும். முழங்காலுக்கு அண்மையாக தொடைக்குக் கீழே உங்கள் விரல்களை வைத்துப் பாருங்கள். விரல்களை இலேசாக முன்னும் பின்னும் அவ்விடைவெளியில் அசைக்க முடியாவிட்டால் உங்கள் இருக்கையை மீளச் சரி செய்ய வேண்டும்.



**- துறையூரான் -**

2. முதுகுக்கு ஒரு அணை தேவை. முதுகுப் பக்கம் ஏதாவது வைப்பதால் முதுகுவலியையும் நோவையும் குறைக்கலாம். இந்த அணையை உங்கள் என்புக் கூட்டுக்கும் இடுப்புக்கும் இடைப்பகுதியில் வைக்க வேண்டும்.

3. வாகனத்தைச் செலுத்தும் போது கால்வீக்கம், களைப்பு, அசௌகரியம் ஏற்படாமல் இருப்பதற்கு, கால் விரல்களை அகட்டுங்கள். பின்னங்கால் தசையை இறுக்குங்கள். அவ்வாறே தொடை, பிட்டத் தசைகளையும் இறுக்கி இளக்குங்கள். தோளை முன்னும் பின்னும் சுழட்டுங்கள். இவ்வாறு செய்யும் போது கைகளைச் செலுத்த சக்கரத்தின் மீதும் கண்களை வீதியின் மேலும் இருக்குமாறு கவனமாக இருங்கள்.

4. கார் செலுத்தும்போது கைகளில் ஏற்படும் இறுக்கத்தைக் குறைப்பதற்கு கைகளை 3மணி, 7மணி கடிகார முட்களைப் போன்று செலுத்தி சக்கரத்தைப் பிடிக்கவும். பின்னர் 10 மணி 5மணி நிலைகளிலும் மாற்றிப் பிடிக்கவும்.

5. மணிக்கட்டு, விரல்கள், கைகளில் தசைகளின் களைப்பைக் குறைப்பதற்கும் குருதிச் சுற்றோட்டத்தை மேம்படுத்தவும், சக்கரத்தை ஒரேயடியாக இறுக்கிப் பிடிக்காமல் இறுக்கித் தளர்த்தவும்.

6. கண்களின் சோர்வு, தலைவலி ஆகியவற்றைக் குறைப்பதற்கு பார்வையை தெருமீது செலுத்துவதை அடிக்கடி மாற்றிக் கொள்ளவும். அதாவது ஒரே இடத்தைப் பார்க்காமல் அடிக்கடி பார்க்குமிடத்தை மாற்றவும்.

7. கார் செலுத்துவதிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ளவும். உடலுக்கு ஏற்படும் அசதியை உதாசீனம் செய்யக்கூடாது. உங்களுக்கு மட்டுமல்ல பிற பிராயாணிகளுக்கும் வீதியிலுள்ள பிறசாரதிகளுக்கும் அலுப்பு ஏற்படும் என்பதை மறந்து விடாதீர்கள்.

### குழந்தைகள் பாதுகாப்பாகப் பிராயாணம் செய்வதுக்குக் கவனிக்க வேண்டியவை

1. 4 வயதுக்குக் குறைந்த 40 இறாத்தலுக்குக் குறைவான எடையுள்ள பிள்ளைகள் காரில் பிராயாணஞ் செய்யும் போது கட்டாயம் இதற்கான குழந்தை இருக்கையைப் பயன்படுத்தவும்.

2. விமானத்தில் பிரயாணஞ் செய்யும்போது இந்த இருக்கையைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். உயரத்தில் காற்றமுக்கம் ஏற்படும் போது தாயின் மடியைக் காட்டிலும் இருக்கைகள் பாதுகாப்பானவை.

3. குழந்தையின் வயதுக்குப் பொருத்தமான இருக்கையைத் தெரிவு செய்யுங்கள். சிறுகுழந்தைக்கும் 3வயதுப் பிள்ளைக்கும் வித்தியாசமான இருக்கைகள் தேவை.

4. குழந்தைகளின் இருக்கை எப்போதும் காரின் இருக்கையை நோக்கியே இருக்க வேண்டும். இதனால் குழந்தையின் கழுத்து தோள் முதலியன விபத்து நேரத்தில் பாதுகாக்கப்படும்.

5. குழந்தைகளின் இருக்கை எப்போதும் பின் இருக்கையில் வைக்கவும். காற்றுப் பை பொருத்தப்பட்ட கார்களில் ஒருபோதும் குழந்தை இருக்கை முன் சீற்றில் வைக்கவே கூடாது. இதனால் விரியும் காற்றுப் பையினால் குழந்தைக்கு ஆபத்து விளையும்.

6. குழந்தை இருக்கையானது கார் இருக்கையில் கெட்டியாகப் பொருத்தப்பட வேண்டும். அதுவும் 45 கோணத்தில் இருக்கை இருக்க வேண்டும். இதனால் குழந்தையின் தலையும் மேற்பகுதியும் பாதுகாப்பாயிருக்கும்.

மேலுள்ளவற்றை நீங்கள் கவனித்தால் மிகவும் சந்தோசமாகப் பிரயாணத்தைக் கழிக்கலாம்.

# விளையாட்டு...

### 06ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடரில் அவுஸ்திரேலிய அணி 4 ஆட்டங்களில் தோல்வியடைவது இது 4வது முறையாகும். இதற்கு முன்னர் 1993, 94ல் தென் ஆப்ரிக்காவுக்கெதிராக 8 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 4ல் தோல்வியடைந்திருந்தது. 1994,95ம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான 5 ஒருநாள் போட்டித்தொடரில் 1-4 என்ற கணக்கில் உதை வாங்கியது. 2008, 2009ல் தென் ஆப்ரிக்காவுக்கு எதிராக 1-4 என்ற கணக்கில் படுதோல்வி கண்டது. மேலும், தொடரில் ஒரு ஆட்டத்தில் கூட ஜெயிக்காமல் வெறுங்கையுடன் திரும்புவது இது 3வது முறையாகும். 1997ல் இங்கிலாந்துக்கெதிராக 0-3 எனவும், 2006,07ல் நியூசிலாந்துக்கெதிராக 0-4 எனவும் அவுஸ்திரேலிய அணி தோல்வி கண்டிருந்தது. அதேவேளையில் இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக அதிரடி வெற்றிகளை குவித்து வருகிறது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியாவுக்கெதிரான தொடரை வென்றது. அதன்பின்னர் பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகளுக்கெதிரான தொடரிலும் வெற்றி வாகை சூடியது. தற்போது அவுஸ்திரேலியாவையும் வீழ்த்தியுள்ளது. தொடர்ச்சியாக 10 ஆட்டங்களில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதும் தற்போதுதான் நடந்துள்ளது.



# வேதனைகளுடன்...

### 08ஆம் பக்கத்தொடர்ச்சி

அதாவது சராசரி மாற்றுத்திறனாளி வாழ்வில் வருடம் ஒன்றுக்கு தொகையாகவோ, அல்லது பகுதி பகுதியாகவோ $1500 டொலர் வரை எதிர் கால வாழ்வுக்கு என இம்முதலீட்டுத் திட்டத்தினூடாக சேமித்தால் கனடிய அரசு $4500 டொலர் வரை இலவசமாக தந்து சேமிப்பினை ஊக்குவிக்கின்றது. 49 வயது வரை அரசின் இவ் ஊக்குவிப்பு பணம் வழங்கப்படும். 2008 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்று 2012இல் இருந்து இதனை ஆரம்பித்தாலும் கடந்த வருடங்களில் தவறவிட்ட அரச இலவச மானியங்களை யும் அந்த வருடத்திற்குரிய சேமிப்புகளை முதலீட்டில் வைப்பு செய்வதன்மூலம் பெற்றுக் கொள்ளுங்கள் என அரசு அறிவிக்கின்றது.

$1500 + $4500 = $6000 டொலர் என வருடம் ஒன்றுக்கு முதலீட்டில் இடப்படும் பணம் வட்டிக்கு வட்டி என்ற விகிதத்தில் (Compound Interest Rate) கனடிய வங்கிகள் வளர்த்து வருகின்றது. ஒவ்வொரு வருடமும் இடப்படும் பணம் பத்து வருடத்தின் பின்பு வெளியே எடுக்கலாம். வேதனைகளுடன் வாழும் மாற்றுத்திறனாளிகள் விரும்பிய படி அந்தப்பணத்தினை அனுபவிக்கலாம்.

1. இவ்வாறு வெளியே எடுக்கும் பணத்திற்கு வரி விதிப்பு இல்லை.
2. பத்துவருடத்தின் பின்பு வெளியே எடுக்கும் இந்த பண வரவு என்பது உடல், உள அங்கவீனமானவரின் வாழ்வில் வழங்கப்படும் எந்த அரச உதவி பணங்களையும் பாதிக்காது.


RDSP
Registered Disability Savings Plan

3. சில நேரங்களில் மாற்றுத்திறனாளி உடல் இழப்பினை எதிர்கொண்டால், அவர் ஏற்கெனவே குறிப்பிட்டு வைத்த வாரிசுகள் அல்லது மனவிருத்தி குன்றியவர்களுக்காக இதனை ஆரம்பித்தவர்கள் முதலீட்டு பணத்தினை யும், வட்டியினையும் எதுவித ஆபத்துக் களும் இல்லாது திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அரசாங்கம் வைப்பு செய்த ஊக்குவிப்பு மானியங்களை மட்டும் (Grand & Bond) இந்த நிலைமை ஏற்பட்டால் அரசே எடுத்துவிடும்.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# விபுலாநந்தர் வெண்பா



கடவுள் வணக்கம்

பாவின் பரிசருளிப் பாலித் தடியேனின்
ஆவி கலந்திருக்கும் ஐங்கரத்தீர் - ஆவல்
மிகவிபுலா நந்தர்வெண் பாவாக்கு வேற்குத்
தகைமைப் புலமைவரந் தா.

அவையடக்கம்

கடலைக் கடைந்தின் னமுதுகாண் பான்போல்
அடிகள் விபுலாநந் தாழி - கடையத்
துணிந்தேன் பிழையேதும் தோன்றின் பொறுக்கப்
பணிந்தேன் அறிஞர் பதம்.
(ஆழி - மாகடல்)

நூல்

அன்பாளும் ஆன்ற அறிஞர் பதியாய
மன்பேரார் மட்டக் களப்பதிலே - துன்பம்
தலைகாட்ட அஞ்சும் தமிழன்னை மஞ்சம்
கொலுவீற்றி ருப்பாள் குளிர்ந்து. (1)

ஆதவன் தோன்றும் கிழக்கில் அதுபோலத்
தீதிலா மீன்பாடும் தேன்நாட்டில் - சோதிபோல்
உம்பர் பதிகாரை தீவில் உதித்ததுவே
தம்பிப்பிள் ளைக்குழந்தை தான். (2)
(மீன்பாடும் தேன்நாடு - மட்டக்களப்பு. உம்பர் பதி - தேவர் விரும்பி வாழும் திருவிடம்.)

வானம் மழைபெய்ய வங்கக் கடல்துள்ள
கான மயிலாடக் காற்றாட - தேனார்
இசைநீ ரரமகளிர் ஏற்றமுறப் பாட
உசனன் அளித்தான் ஒளி. (3)
(உசனன் - வெள்ளி ஆகிய கோள். மட்டக்களப்புக்கு வெள்ளிதிசை பிறந்தது என்பது குறிப்புப் பொருள்.)

காவி உடைதாங்கக் கன்னித் தமிழோங்கத்
தேவர் மலர்தூவச் சீர்காரை - தீவதிலே

ஊன்றநற் கல்வி ஒழுக்கம் உணர்ந்தோம்பத்
தோன்றியதோர் தெய்வச் சுடர். (4)

தவத்தந்தை தாய்சாமித் தம்பிகண் ணம்மை
சிவத்தந்தை தந்ததெனத் தேர்ந்து - புவிவந்த
தெய்வக் குழந்தையினைச் சீராட்டி இவ்வுலகம்
உய்ய வளர்த்தார் உவந்து. (5)
(தந்தையார் - சாமித்தம்பி. தாயார் - கண்ணம்மை.)

கதிர்காமக் கந்தன் கருணையதாற் பிள்ளை
முதற்பேரைப் பெற்றோர் முருகன் - கதிசேர்
மயில்வா கனனென்று மாற்றினார் வானோர்
வியனார் மலர்தூவ வே. (6)
(வியனார் - சிறப்பு மிகுந்த.)

கதிர்வேலர் காட்டக் கருணை விபுல
மதிவாணர் ஈழத்து மண்ணின் - முதலான
பண்டிதரும் ஆகிப் படைத்தாராம் சாதனையைத்
தண்டமிழும் தானோங்கத் தான். (7)
(விபுலம் - விரிவு, பெருமை)

வாட்டமிலாக் கல்வி வளரப் படித்திலண்டன்
பாட்டுடைய விஞ்ஞானப் பட்டமதும் - ஈட்டியுயர்
ஆசிரியர் மற்றும் அதிபர் பதவிகட்கு
வீசுபுகழ் சேர்த்தார் மிக. (8)
(பாட்டுடைய - புலவராற் பாடத்தக்க பெருமையுடைய.)

கேடில்லாக் கல்வி கிறித்துவத்துச் சூழலிலே
பாடறிந்து பெற்றாலும் பண்பாளர் - பீடார்
தனையாள் சமயம் துறக்காத்தன் மானக்
கனவான் மயில்வா கனர். (9)
(பாடறிந்து - இயல்புகளை உணர்ந்து. பீடு - பெருமை. துறக்காத்தன் மான -துறக்காத தன்மானமுடைய.)

உயர்வான கொள்கை உணர்வான செய்கை
உயிராகப் பேணும் ஒழுக்கம் - துயர்தீர்க்கும்
இன்னலத்தால் சான்றோன் எனமக்கள் ஏத்திவரப்
பொன்மனத்தார் பெற்றார் புகழ். (10)

கவிஞர் வி. கந்தவனம்






# Universal Community Help

## 1. EXPRESS METRO HOUSING

வருமானம் குறைந்தவர்களுக்கும், Shelter இல் வசிப்பவர்களுக்கும், முதியவர்கள், தனியே வாழ்பவர்கள், தனிப்பெற்றோர் புதிய குடிவரவாளர்கள் அனைவருக்கும் கூடிய விரைவில் 4 கிழமை தொடக்கம் 3 மாதங்களில் Subsidized House பெற்றுத்தருவோம்.

## 2. WALKER OR WHEEL CHAIR OR SCOOTE

இதனுடன் Washroom உட்பட 15,000 டொலர் பெறுமதியான பொருட்களை குறைந்தது 3 மாதத்தில் பெற்றுத்தருவோம். WALFARE OR O.D.S POR WSIB OR PENSION இருப்பவர்கள் உடனே விண்ணப்பிக்கவும். அரச அனுமதி பெற்ற Occupational Therapist ஒருவர் எம்முடன் இணைந்து கடமையாற்றுகிறார். June 7, 8, 16, 18, 23, 25 ஆகிய திகதிகளில் விசேட நேர்முகத் தேர்வுகள் உண்டு.

## 3. FOOT CARE CLINIC

கால்களில் பல்வேறு காரணங்களால் பாதணிகள் பாவிக்க முடியாமல் இருப்பவர்களுக்கு Free Medicated Shoes 3 மாதங்களில் பெற்றுத் தருவோம்.

4. இலங்கை, இந்தியத் தூதரகங்கள் ஊடாக உங்களுக்குத் தேவையான கடவுச்சீட்டு, அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாக மரண விவாகரத்துப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

5. கனடியக் குடிவரவு சட்டப்படி Sponcer செய்து தாமதமாக இருப்பவர்களுக்கு துரிதப்படுத்தி வரவசதி செய்து கொடுக்கப்படும். இலங்கை இந்திய பாகிஸ்தானியர்களும் தொடர்பு கொள்ளலாம்.

6. Separation ஆக இருப்பவர்கள் அனைவர்க்கும் Quick Divorce Certificate வசதி செய்து தரப்படும். இருவரும் தனித்தனி அல்லது இருவரும் முன் கூட்டியே அனுமதி பெற்று வரவும்.

7. எமது பயிற்சி பெற்ற வைத்தியர்கள் மூலம் Special Diet Allowance Form அத்தாட்சிப்படுத்திக் கொடுக்கப்படும்.

8. நீண்டகாலமாக Tax Return பெற்றுக் கொள்ளாமல் தவறவிட்டவர்கள் Special Re Tax Return Service மூலம் Revenue Canada பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்.

## 9. தானம் - தர்மம் - தொண்டு

புதிய குடிவரவாளர்களே ***Vegetarian Food Bank or U.C.H or Thiruchchenchdoor Murugan Temple*** தொண்டர்களுடன் இணைந்து கொள்வதன் மூலம் அரச உதவியாக 6 மாதப் பணமாக 600 டொலரையும் முதல் மாதம் மேலதிகமாக 250 டொலரையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள சகல சேவைகளுக்கும் ஆகக் குறைந்த அலுவலகக் கட்டணம் அறவிடப்படும்.

***10. Food handling certification certified food handle training.***

***11. UCH Legal Clinic***

## தொடர்புகளுக்கு: *416.744.3011*

***Office Hours -*** 11.00 Am to 4.00 Pm
*Monday to Sunday -* 416.744.4357
12.00pm to 10.00 pm
*Monday to Sunday -* 416.554.5040
9.00 am to 9.00 pm
*Special hot line*

***Unite - B - 5***
***2370 Midland ave***
***Midland & Sheppard***
***M1S 5C6***

***Unit - E***
***3005 Isilington Ave.***
***Steel & Isilingtion***
***M9L 2K9***

# அழிக்கப்பட வேண்டிய நோய்

## ஓடும் நீர் உறைவதில்லை 146

நமது வாழ்க்கையில் இனங்காண முடியாத பிரச்சினைகளுக்கு ஆணிவேராக அமைவது நமது மனத்தில் எழும் சந்தேகங்களே. சந்தேகம் என்பது தன்னைத்தானே நம்பாத ஒரு மனஇயல்பு. இந்த மனஇயல்பு ஒருவருக்கு ஒருவர் வேறுபட்டதாகவும் மாறுபட்டதாகவும் இருக்கும். தன்னைத் தானே நம்பாத இந்த மனஇயல்பு அவ்வாறு வேறுபடுவதற்கான காரணம் ஒருவரது பிறப்பு அல்ல. அவரது வளர்ப்புமுறை, பெற்றோர்களின் செல்வாக்கு, அவர்சார்ந்த சூழலின் தாக்கம், கல்வியறிவு, அனுபவ அறிவு, புரிந்துணர்வின் தன்மை, மற்றவர்களது கருத்துக்களை மதிப்பீடு செய்யும் திறன், அவர் சார்ந்துள்ள நண்பர்களின் செல்வாக்கு, வாசிக்கும் புத்தகங்கள் போன்ற பல்வேறு காரணிகளால் உருவாக்கப்படுகின்றது.

சந்தேகம் என்று நாம் கூறும்போது அது எதிர்மறையான எண்ணக்கருத்தைத் தருவதாகவே இருக்கும். நேர்த்தியான சந்தேகம் என்று ஒன்று இல்லை. ஒருவிடயத்தில் எதிர்மறையான கருத்து அல்லது எதிர்மறையான எதிர்பார்ப்பு என்பதே சந்தேகம் எனப்படுகிறது. இங்கே சந்தேகத்தின் அடிப்படையாக அமைவது எமது மனஉணர்வு என்பதை நாம் மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

உண்மையில் சந்தேகம் என்ற இந்த மன உணர்வுக்கான அடிப்படை என்னவென்பதை மிகவும் குறிப்பாகக் கூறுவதாயின் ஒருவரது மனக் காட்சிக்கும் அந்தக் காட்சிபற்றிய அவரது மனக்கருத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடே சந்தேகம் எனப்படும். அதாவது காட்சிக்கும் அக்காட்சி பற்றிய கருத்துக்கும் இடையிலான முரண்பாடு தான் சந்தேக மனப்பான்மையை உருவாக்குகிறது. இந்த முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்கள் ஒவ்வொருவரது வாழ்வியல் அனுபவங்களால் தீர்மானிக்கப்படுகின்றது.

நாம் பிறந்தபொழுது எந்தவிதமான மனக் கருத்துக்களையும், காட்சி அனுபவங்களையும் நமது மனத்தில் வைத்துக்கொண்டு பிறந்தவர்களல்லர். நாளாந்த வாழ்வில் ஒவ்வொருவரதும் நடைமுறைகள் பல்வேறு வகையான விடயங்களை நமது ஆழ்மனம் / நனவிலி உள்ளத்தில் (Subconscious Mind) பதிவு செய்கின்றன. ஆய்வுகளின் அடிப்படையில் ஒவ்வொருகணமும் நமது ஐம்புலன்களால் தகவல்கள் அனைத்தும் இந்த நனவிலி உள்ளத்தில் பதியப்படுகின்றன. இவ்வாறு பதியப்படும் விடயங்களில் எவற்றை நாம் நமது ஆளுமைக்குள் கொண்டு வருகின்றோம் என்பதைப் பொறுத்தே ஒருவரது பழக்க வழக்கங்கள், கணிப்பு முறைகள், கருத்துக்கள் என்பன அமைகின்றன. இதனால்தான் ஒருவிடயம் பற்றிய கருத்து ஒவ்வொருவருக்கும் வேறுபட்டதாக அமைகின்றது.

காட்சிக்கும் அக்காட்சி பற்றிய கருத்துக்கும் இடையிலான வேறுபாடு அல்லது



முரண்பாடு சந்தேகத்தை உருவாக்குகின்றது என்பது மறுக்க முடியாததாயினும் அவ்வாறு ஒரு சந்தேகம் எழுகின்றபோது அந்த சந்தேகத்தை தெளிவுபடுத்தக் கூடிய விடயங்களைப் பின்பற்றி அந்தச் சந்தேகத்தை அழிக்கும் சக்தியும் நமக்கு உண்டு என்பதும் மறுக்கமுடியாததே. இந்த சக்தி அல்லது மனப்பக்குவம் தான் ஒருவரது வாழ்க்கையில் மகிழ்ச்சியான நிகழ்வுகளுக்கு அடித்தளமாகின்றது. ஒரு விடயத்தில் அல்லது நிகழ்வில் சந்தேகம் எழுகின்றது எனும்போது அந்த நிகழ்வின் உண்மையான நிலையை இனங்கண்டு கொள்வதில் ஏற்படும் தவறான மனக்கணிப்பு அடிப்படையாக அமைவதால் அந்தக் கணிப்பு சரியான முறையில் இடம் பெறுவதற்கான சகல சந்தர்ப்பங்களையும் நாம் பயன்படுத்தி அந்தச் சந்தேகத்தை இல்லாமல் செய்வது நமது வாழ்வியல் கடமைகளில் மிக முக்கியமானது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு வரும் ஆண், பெண் எந்த வேறுபாடின்றி இந்தச் சந்தேகம் என்ற நோய்க்குள் அகப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஏனெனில் வாழ்க்கைக் கல்வி என்பது புதிய புதிய விடயங்கள் பற்றி அனுபவ அறிவாக அமைவதனால் அந்த அனுபவ அறிவின் ஆரம்ப நிலை ஒரு தெளிவற்றதாக அமைவது இயல்பானதே. இந்த தெளிவற்ற எதிர்பார்ப்புக்கள் எமது மனத்தில் ஒரு மாறுபட்ட எண்ணக்கருத்தை உருவாக்குவதும் இயல்பானதே. ஆனால் நமது மனதில் எழுகின்ற ஒவ்வொரு எண்ணக்கருத்துக்கும் ஏதோ ஒன்று அடிப்படையாக அமைவதும் அந்த அடிப்படையை அடிப்படையாகக் கொண்டு அவ்வாறு எழுந்த எண்ணக் கருத்திற்கான காரணத்தைக்கண்டு அது சரியானதா அல்லது தவறானதா என உறுதிப்படுத்தும் போது சந்தேகம் மறைந்து விடுகின்றது.

ஒருவிடயம்பற்றிய காட்சியும் அதுபற்றிய கருத்தும் வேறுபடும் போது ஏற்படும் சந்தேகத்தை பூர்த்தி செய்வதற்கு அந்தக் காட்சியைக் கருத்துக்கேற்றவாறு அல்லது கருத்தைக் காட்சிக்கேற்றவாறு மாற்றியமைப்பது தான் சந்தேகத்தை தீர்ப்பதற்கான வழி. இவ்வாறாகத் தான் நமது நாளாந்த வாழ்வில் எழும் பல்வேறு வகையான சந்தேகங்களுக்கு நாம் விடை காணகின்றோம். நமது வாழ்வின் ஒவ்வொரு நிலையும் இவ்வாறான விடை தேடும் நடவடிக்கையாக அமைவதை நாம் அவதானிக்கலாம். எனவே சந்தேகம் என்பது நமது வாழ்வியலில் தவிர்க்கப்பட முடியாதது. எனினும் ஒருதரமான வாழ்வியலில் நம்மை உட்படுத்திக் கொள்வதற்கு இந்தச் சந்தேகங்களுக்கான விடையை உடனுக்குடன் கண்டுபிடித்து அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்வது மிக மிக அவசியமாகும்.

சந்தேகம் என்பது தவிர்க்க முடியாதது எனினும் சந்தேகத்தையே வாழ்க்கையாக அமைத்துக் கொள்வது என்பது ஒரு துரதிஷ்டமான விடயம். தீர்வுக்கான வழிகளைக் கண்டறியவோ அல்லது ஏற்கெனவே உள்ள தரமான வழிமுறைகளைப் பின்பற்ற விரும்பாமலோ சந்தேகத்தையே சிம்மாசனமாக்கி வாழுகின்ற சீமான்களும், சீமாட்டிகளும் தங்கள் வாழ்க்கையையும் சிதைத்து தங்களைச் சார்ந்தவர்களையும் சீரழித்து விடுகிறார்கள். இவர்கள் காரண காரியத் தொடர்பு எதுவுமின்றி எல்லாவிடயங்களிலும் சந்தேகப்படுகின்ற ஒரு கொடிய நோயின் சூத்திரதாரர்கள். இவர்களது இந்த நோய்க்கு மருந்து பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களது சொந்த உயிராகவும் சில சந்தர்ப்பங்களில் அவரைச் சார்ந்துள்ளவர்களது வாழ்வாகவும் அமைகின்றது.

நமது வாழ்வியலில் சந்தேகம் என்பது அவ்வப்போது நமது மனக்கண்ணில் எழுகின்ற ஒரு சம்பவமேயன்றி அதுவே வாழ்வியலின் முடிவல்ல. சிலருடைய சந்தேகங்கள் தீர்க்கப்பட்ட பின்னரும் அதிலிருந்து தம்மை விடுத்துக்கொள்கின்ற சாதாரண மனப்பக்குவத்தை வளர்க்கத் தவறுகின்ற காரணத்தால் மீண்டும் மீண்டும் அந்தச் சந்தேகத்திற்குள் நுழைந்து அல்லற்படுகின்ற ஆறறிவுடன் பிறந்து ஐந்தறிவுடன் வாழும் அப்பாவிகளுக்கு மகிழ்ச்சி என்பது முயற்கொம்பு என்பதை மறந்துவிடாதீர்கள்.

சந்தேகம் என்பது ஒரு சாதாரண சம்பவம். நமது எதிர்பார்ப்புக்களின் நிச்சயமற்ற தன்மைகளால், எமது கருத்துக்கணிப்பின் தரத்தின் அளவால் உருவாக்கப்படுபவை. காலவோட்டத்தில் பல்வேறு சந்தேகங்களுக்கு நமது வாழ்வியல் அனுபவங்கள் விடை காண்கின்றன. அதனால் நாம் அனுபவசாலிகள் என்றும், அறிவுமிக்கவர்கள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றோம். அது மட்டுமல்ல மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் நாம் அமைகின்றோம். மாறாக சந்தேகத்தையே அடிப்படையாகக் கொண்டு வாழ்பவர்கள் வாழ்வியலின் ஒவ்வொரு சம்பவத்தையும் தவறான பார்வைக்குட்படுத்தித் தம்மைத்தாமே துன்பப்படுத்தும் அப்பாவிகள். இவர்களுக்கு இது ஒரு நோய் மருந்தாலோ அல்லது மந்திரத்தாலோ மாற்றமுடியாத மனநோய்.

**KG Master**-kgmaster@rogers.com
**www.kgmaster.com**

ஆம் வாசகர்களே!

சந்தேகம் என்பது எந்த நிலையில் எந்த அளவில் ஏற்பட்டாலும் உடனடியாக அழிக்கப்பட வேண்டியது. சாதாரண நோய்கள் குணப்படுத்தப்பட வேண்டியவை. ஆனால் சந்தேகம் என்ற நோய் அழிக்கப்பட வேண்டியது. சிறியமுளை ஒன்று இருந்தால் கூட நாளடைவில் மீண்டும் பூதாகாரமாக உருவெடுக்கக்கூடிய நோய் இது. அதுமட்டுமல்ல சந்தேகத்தை நாமாக அழிக்காவிட்டால் நாம் தாமாக அழிந்து விடுவோம்.

சந்தேகம் எழும்போது தாமதிக்காமல் அதற்கான விடையைக் கண்டறிந்து அந்தச் சந்தேகத்தை அழித்து விடுங்கள். சந்தோசமான வாழ்க்கையின் அடிப்படையே சந்தேகம் என்ற நோயை அழிப்பதன் செயற்திறன்தான்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV


Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219





# கால் மூட்டுவலி காணாமல் போகும்!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

மூட்டுவலி என்பது மூட்டின் தேய்மானத்தால் மட்டும் வருவதல்ல. மலச்சிக்கலாலும் இது ஏற்படும். மனித உடலானது எண்ணற்ற நரம்புகள் எலும்புகள், தசை என்பவற்றால் பின்னிப் பிணைக்கப்பட்ட ஒரு உருவமாகும்.





உடலின் செயல்பாடுகள் அனைத்தும் வாத, பித்த, வாயு, கபம் என்பவற்றின் தன்மைக் கேற்ப மாற்றமடைகிறது. இவற்றில் ஒன்றின் அளவு கூடினாலோ அல்லது குறைந்தாலோ உடலில் நோய் ஏற்படக் காரணமாகின்றது. பொதுவாக மனிதனுக்கு நோய் ஏற்படக் காரணம் உண்ணும் உணவும், மனத்தில் ஏற்படும் பாதிப்பும் தான்.

நம் முன்னோர்கள் நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தார்கள். அதற்குக் காரணம் அவர்கள் உடலுக்கும், மூளைக்கும் சமமான அளவு வேலை கொடுத்தார்கள். ஆனால் இன்று மூளைக்கு மட்டுமே அசுர வேலை கொடுக்கப்படுகிறது. உடல் அசைவின்றி ஒரே இடத்தில் அமர்ந்திருக்கும் நிலையில் உள்ளது. இயந்திர மனிதர்கள் போல் மாறி விட்டார்கள். உணவைக்கூட மறந்து உடற்பயிற்சியும் இல்லாது போய்விட்டது.

நீரிழிவு, இரத்த அழுத்தம், ஆஸ்துமா போன்ற நோய்களை விட மனிதர்களை வாட்டி வதைக்கும் கொடிய நோய்தான் கால் மூட்டுவலி. இது ஒருவரை நடக்கவே இயலாமல் செய்வதுடன் பயங்கரமான வலியை உண்டாக்கும். சிலருக்கு கால் மூட்டுகளில் வீக்கமும் வலியும் உண்டாகி மாடிப்படிகளில் ஏறமுடியாமல் செய்துவிடும். இதற்கு அநேகமானோர் மாத்திரைகளை உட்கொண்டும் அறுவை சிகிச்சைகள் செய்து வருகின்றனர். இதனால் பூரணகுணம் அடைந்தவர்கள் மிக அரிது.

முழங்காலில் உள்ள இணைப்பிலும், எலும்புகளுக்கு இடையிலும் ஒருவித சவ்வு உள்ளது. இதற்குத்தான் கார்டி லெஜ் என்று பெயர். இந்த சவ்வுதான் மூட்டுகளில் அசைவுக்கு உதவுகிறது. இந்த சவ்வுகளில் வாய்வு சேர்ந்து வாத நீராக மாறி வலியை ஏற்படுத்துகிறது. தற்போதைய சூழ்நிலையில் மாதவிலக்கு காலங்களிலும் ஓய்வில்லாது உழைக்கும் பெண்களுக்கு அதிகம் மூட்டுவலி வருவதை நாம் காணமுடிகிறது.

### கால் மூட்டுவலிக்கான அறிகுறிகள்

காலையில் எழுந்தவுடன் நடக்க முடியாமை, தலைசுற்றுதல், தலைவலி உண்டாகும், கால்களில் வீக்கம் உண்டாகும், கால் நடுக்கம் ஏற்படும், கால்களை மடக்கி உட்காருவது கடினமாயிருக்கும், மலச்சிக்கல், அஜீரணக்கோளாறு என்பன உருவாகும்.

### மூட்டுவலி ஏற்படக் காரணங்கள்

1. நேரம் தவறி உணவு அருந்துதல்.
2. ஒரே நேரத்தில் வயிறு புடைக்க உண்ணுதல் அல்லது நீண்ட நேரமாக பட்டினி இருத்தல்
3. இரவு உணவில் காரம், புளி அதிகமாகச் சேர்த்தல்.
4. உடலில் அபாணவாயு அதிகமாகும் போது அது மேல்நோக்கி நகர்ந்து தலைப் பகுதியை அடைந்து அங்கு நீர் கோர்த்து அங்கிருந்து பின் கழுத்து வழியாக கீழ் இறங்கி வாத நீர், பித்தநீர் என்பவற்றுடன் கலந்து மூட்டுகளில் தேங்கும் நிலை ஏற்படுகிறது. இதிலிருந்துதான் வலி ஆரம்பிக்கிறது.
5. அதிகதூரம் நடப்பதாலும், நீண்டநேரம் நின்றபடி வேலை செய்வதாலும், தினமும் மாடிப்படிகள் ஏறி இறங்குவதாலும் கால் மூட்டுவலி ஏற்படும்.
6. உடல் எடை அதிகமாவதால் முழங்காலில் வலி தோன்றும்.
7. கால்களுக்கு பொருத்தமில்லாத பாதணிகளை அணிவதாலும் மூட்டுவலி ஏற்படலாம்.

### மூட்டுவலி ஏற்படாமல் தடுக்க

1. நேரம் தவறாது சாப்பிடவேண்டும்.
2. பொதுவாக இரவு வேளைகளில் நாம் உண்ணும் உணவு மென்மையானதாகவும் எளிதில் சமிபாடடையக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
3. மது, புகை பழக்கத்தை அடியோடு நிறுத்துவதுடன் காப்பி, தேநீர் அருந்துவதை முடிந்தவரை குறைக்க வேண்டும்.
4. மலச்சிக்கலும் மனச்சிக்கலும் இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டும்.
5. அதிக உஷ்ணத்தையும் வாயுவையும் உருவாக்கும் உணவுகளைத் தவிர்க்க வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகளை உண்ணலாகாது.
6. அதிக புளிப்பு, காரம் தவிர்ப்பது சிறந்தது.
7. கீரைகள், பழங்கள், மூலிகை குடிநீர் போன்றவற்றை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும்.
8. கணினி (Computer) முன்னால் இருந்து அதிக நேரம் வேலை செய்பவர்கள் கண்டிப்பாக நடைப்பயிற்சி செய்ய வேண்டும்.

### யோகாசன சிகிச்சை முறைகள்

கால் மூட்டுகளைப் பலப்படுத்தி முழங்கால் இணைப்புகளிலுள்ள சவ்வுகளை கெட்டிப்படுத்தும் சில யோகாசனங்களை பழகிவந்தால் வலிகள் தோற்ற வாய்ப்பே வராது.

### பொருத்தமான ஆசனங்கள்

1. உட்கட்டாசனம்
2. சப்பாணி ஆசனம்
3. கருடாசனம்
4. பத்மாசனம்
5. விபரீத ஹரணி

இவற்றை ஒரு யோகா ஆசிரியரின் துணையோடு பழகி வந்தால் மிக விரைவில் பூரண சுகம் பெறலாம்.


ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

# அடமானக்கடனில்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிகரிக்கும் போது, நிலைமை மோசமாகலாம். அதாவது ஆதனவிலை, வருமானத்தைவிட மிக அதிகமாக அதிகரிக்கும்போது ஆதன பராமரிப்பு இறுக்கநிலையை தோற்றுவிக்கலாம்.

கடந்த 25 வருடங்களாக வீட்டின்விலை ஆண்டு வருமானம் என்ற விகிதம் 3.5 ஆகக் காணப்பட்டது. ஆதனத்தின் விலை மொத்த குடும்ப வருமானத்தின் 3.5 மடங்காக இருந்தே வந்தது. (Price Annual Disposable Income) அண்மைக்காலங்களின் இந்த பெறுமதி 4.5 ஆக அதிகரித்துள்ளது. அண்ணளவாக 30% அதிகரிப்பு 2007 இலிருந்து இந்த பெறுமதி, மற்றைய வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாக அதிகரித்து வந்துள்ளது.

மிக அண்மைக்காலங்களில் ரொறொன்ரோ மற்றும் வன்கூவர் நகரங்களில் இந்த விகிதம் 8 ஐ தாண்டியுள்ளது. இது ஓர் ஆரோக்கியமற்ற நிலைமையை ஆதன வியாபாரத்தில் ஏற்படுத்தியுள்ளதை முக்கியமாக கவனிக்கக்கூடியதாக உள்ளது.

விலைக்கும் வாடகை வருமானத்திற்குமான விகிதம் (Price to rent income) 2007 இலிருந்து இந்த பெறுமதி 20% இனால் அதிகரித்துள்ளது. பொருளாதார நிபுணர்களின் அண்மைய அறிக்கையின்படி கனடிய வீட்டுவிலை வாடகை வருமானத்துடன் ஒப்பிடும்போது (Price/ rent Income) 76% அதிகமாகவும் காணப்படுவதாக தெரியவந்துள்ளது. சராசரியாகப் பார்க்கும்போது 54% அதிகமாகக்காணப்படுகின்றது.



கனடிய நிலைமையை விட அதிகமாக இந்த விகிதம் சிங்கப்பூர், கொங்கொங், பெல்ஜியம் போன்ற நாடுகளில் காணப்படுகின்றது. இந்நிலைமை ஏற்பட்டதால் பல நாடுகளில் ஆதனத்தில் விலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. அமெரிக்காவில் 40% இற்கு அதிகமாகவும் பிரிட்டனில் 20% இற்கு அதிகமாகவும் விலையில் இறக்கம் ஏற்பட்டது. ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 1989 இலிருந்து 1997 வரை இறக்கம் ஏற்பட்டது. 2001 இலிந்து முந்தைய விலையைத் தாண்டியது. முந்திய மாதிரியான நிலைமை ஏற்படாவிட்டாலும் அதற்கு ஒத்த நிலைமை ஒன்று ஏற்படலாம் என மனதில் வைத்து, அதற்கேற்ப செயல்படுவது சிறந்ததாகும்.

அறிக:

1. 50% ஆன ஆதனம் வாங்குபவர்கள் முதல்தடவை வாங்குபவர்கள் (First time buyers)

2. கடனைத் திருப்பி கொடுக்கும் காலம் July 09, 2012 இலிருந்து (Amortization Period) 25வருடம்

3. அனேகமாக வீட்டு உரிமையாளர்கள் குறிப்பிட்ட வீட்டில் வாழும் சராசரி காலம் 5-7 வருடம்

4. கனடாவில் சராசரி வீட்டு விலை - $205,333 (2002), $375,605 (2012)

# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?

# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY

## வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை

## GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினுடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவணைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

## ARE YOU CONCERNED ABOUT YOUR DEBTS ? ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

## இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஜை

## இன்றே அழையுங்கள்

இலவச ஆலோசனைகளுக்கு

# (416) 556-9287

**Credit Revolving Center**
**(GTA Square )**
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2


# காலத்தோடு வளரும் கணினிகள் - 1

‘காலத்தோடு வளரும் கணினிகள்’ என்ற இந்தத் தொடர்கட்டுரையை ‘அகணி’ என்ற புனைபெயருடன் எழுத ஆரம்பிக்கும் சி.அ.சுரேஸ் அவர்கள் பொறியியல் துறைப் பட்டதாரியும், கணினித் துறையில் முதுமாணிப் பட்டமும் பெற்றவர். கணினிப் பிரயோகத்திலும், கணினித்துறைக் கல்வி கற்பித்தலிலும் இருபத்தாறு வருடப் பட்டறிவு கொண்டவர். கணினிகளின் நேரக்கோட்டில் (Timeline) பதிவான பல்வேறு தகவல் களுடன் விரியும் இந்தத் தொடர்கட்டுரை இவரின் முன்னைய தொடர்கட்டுரைகளான நினைவாற்றல், வெகுளாமை வரிசையில் மேலும் ஒரு பயனுள்ள தொடர்கட்டுரையாக வாசகர்களைச் சென்றடையும் என்பது எதிர்பார்ப்பு.

காப்பு
கணபதி போற்றிக் கணினிகள் பற்றி
வணங்கிப் படைக்க மகிழ்வாய் - இணங்கும்
விளம்பரம் பத்திரிகை வீச்சுடன் ஓங்க
வளர்ந்திடும் கட்டுரையாய் வார்ப்பு.

காலக் கோட்டில் கணினிகள் பதிவை
ஞாலத்தில் நடந்ததை ஞாபகம் செய்துமே!
தோற்றமும் வளர்ச்சியும் தகவலாய்ச் சேர்ந்துமே!
காற்றினில் தூவிடக் கட்டுரையாய் மலருதே!

நாம் வாழ்கின்ற உலகம் ஒரு கணினி உலகம். நாங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் கணினியின் ஆக்கிரமிப்பு விசுவரூபம் எடுத்துவிட்டது. இதுவரை காலமும் கணினி உலகத்தில் காலடி வைக்க முடியாதவர்களும் கணினிப் பிரயோகத்தை நாங்களும் எப்படியாவது அறிந்து கொள்ள வேண்டும் எனப் பேரவா கொண்டு வாழ்வதை நான் நன்கு அறிவேன். சில வேளைகளில் கணினிகள் என்றால் ஏதோ திடீரென அண்மைக் காலத்தில் ஏற்பட்ட ஒரு சூறாவளியென தப்புக்கணக்குப் போட்டு விடுகின்றோம். உண்மையில் கணினிகளுக்கு நீண்ட வரலாறு உண்டு. அன்று முதல் இன்று வரை கணினிகளின் வளர்ச்சி பற்றியெல்லாம் இந்தக் கட்டுரையில் ஆராய இருக்கின்றோம். கணினிகள் பற்றித் தெளிவாக அறியவைக்கும் ஒரு அறிவியல் தொடர்கட்டுரையாக இருக்கும். உலகமே உள்ளங்கை அளவு கணினிக்குள் அடங்கி விட்டதா என்று எண்ணத்தோன்றும் கணினிகள் பற்றிய முழுமையான விடயங்களை தமிழ்மொழியில் தொடர் கட்டுரையாக வெளிக்கொணரும் முயற்சியாக வும் இந்தத் தொடர்கட்டுரையை வாசகப் பெருமக்கள் நோக்கலாம். கணினிகள் பற்றி வாசகர்கள் அறிந்து கொள்வதற்கும், கணினிக்குள் புகுந்து கொள்ளாதவர்களையும் கணினிப் பாவனை யாளர்களாக மாற்றிக் கொள்ள ஊக்குவிக்கும் செயற்பாடாகவும் கருதிக்கொள்ளலாம் அல்லவா. இந்தத் தொடர்கட்டுரைக்கு வாசகர்களாகிய நீங்கள் கொடுக்கும் வரவேற்பும், எண்ணக் கருத்துக்களும் எனது முயற்சியில் வெற்றிபெற வழங்கும் ஊக்குவிப்பாகவே இருக்கும். கணினி என்றால் பொதுவான பயனுள்ள ஒரு உபகரணம். இதன் மூலம் அடிப்படையில் கணித்தல், தகவல் பரிமாற்றம் போன்ற செயற்பாடுகளைச் செய்ய முடியும். ஏறக்குறைய 5000 வருடங்களுக்கு முன்னதாக சீனாவில் அபகஸ் என்றழைக்கப்படும் எண் சட்டத்தை கணித்தலில் பயன்படுத்தினார்கள். அபகஸ் என்ற சொல் லத்தீன் சொல்லாகும். கிறிஸ்துவுக்கு முன்னர் முன்னோர்கள் இந்த அபகஸ் (கணிப்புச் சட்டம்) துணை கொண்டு கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்றவற்றை செய்தார்கள்.



1822 தொடக்கம் 1877 வரையான காலப்பகுதியில் இங்கிலாந்தில் லண்டன் பகுதியைச் சேர்ந்த சார்ல்ஸ் பாபேஜ் (Charles Babbage) என்பவரால் முதலாவது இயந்திரவியல் கணினியான அனெலெற்றிக்கல் (Analytical) இயந்திரம் (என்ஜின்) உருவாக்கப்பட்டது. சார்ல்ஸ் பாபேஜ் ஒரு கணிதவியலாளர், தத்துவஞானி, பொறியியலாளர். விஞ்ஞானி எனப் பல்வேறு தகைமைகளைக் கொண்டவர். அவர் 1792 டிசெம்பர் 26ம் திகதி பிறந்ததாகக் கூறப்படுகின்றது. இவரின் தந்தையார் ஒரு வங்கியின் பங்குதாரராக விளங்கினார். ஒரு செல்வந்தக் குடும்பத்தில் போதிய கல்வி யறிவை இளம் வயதிலேயே பெற்றுக்கொள்ள முடிந்தது. இவர் 1814ல் திருமணம் புரிந்தார். இவர் தனது 79வது வயதில் (1871) காலமானார். இவருக்கு எட்டுப் பிள்ளைகள் பிறந்தபொழுதும் நால்வர் சிறுபராயத்திலேயே இறந்துவிட்டார்கள். இவரின் மூளையின் அரைப்பகுதி சத்திர சிகிச்சை நிபுணர்களின் ரோயல் கல்லூரியின் நூதனசாலையிலும் (museum), மிகுதி அரைப்பகுதி மூளை லண்டன் விஞ்ஞான நூதனசாலையிலும் (museum) வைக்கப் பட்டுள்ளது. இவரது கடைசி மகன் ஹென்ரி பிரிவாஸ்ற் பாபேஜ் (Henry Prevost Babbage) தந்தையின் ஆய்வுகளைத் தொடர்ந்ததாகவும் கூறப்படுகிறது. சார்ல்ஸ் பாபேஜ் உருவாக்கிய கணினி தற்காலிக நினைவகம் (temporary Memory) மூலம் கணிப்புக்களை யும், கணித்தல் தொடர்பு கொண்ட ஏனைய வேலைகளையும் செய்யத்தக்கதாக உருவாக்கப்பட்டது. இதனை உருவாக்கு வதற்கு இருபத்தி மூவாயிரம் பவுண்கள் தேவைப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்தக் கணினிக்குள் தகவல்களையும், கட்டளைகளையும் உட்செலுத்துவதற்கு குத்து அட்டைகள் (Punching cards) பாவிக்கப் பட்டது. இந்தக் கணினியில் பல ஆயிரம் அசைவுள்ள பாகங்கள் காணப்பட்டன. இந்தக் கணினி வெளிவந்த காலத்தில் இந்தக் கணினியின் தொழில்நுட்பம் அக்காலத் தொழில் நுட்பத்தை மிஞ்சியதாகக் காணப்பட்டது. இந்தக் காலத்திற்குப் பின்னர் வெளிவந்த கணினிகளின் உருவாக்கத்திலும் இந்தக் கணினியின் தொழில்நுட்பம் அடிப்படை அம்சமாகக் காணப்பட்டது. நாங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் கல்விகற்ற காலத்தில் அங்கு காணப்பட்ட IBM 1130 கணினியல்கூட குத்து அட்டைகள் (Punching cards) மூலமே தகவல்களும், கட்டளைகளும் உட்செலுத்தப் பட்டன என்றால் நீண்ட காலத்திற்கு முன்பு கணினியை உருவாக்கிய சார்ல்ஸ் பாபேஜ் அவர்களின் பங்களிப்பு கணினிகளின் உருவாக்கத்தில் எவ்வளவு உயர்ந்தது என்பதை நாங்கள் ஊகித்துக் கொள்ளலாம். இதன் காரணத்தினால்தான் சார்ல்ஸ் பாபேஜ் கணினியின் தந்தையாக இன்றும் போற்றப்படுகின்றார். இந்தக் கணினியில் தகவல் உட்செலுத்தும் கருவி (Input Device), விடயங்களைப் பதிவு செய்து வைத்திருக்கும் தற்காலிக நினைவகம் (Temporary Memory), கணிப்பகம் அல்லது மையச் செயற்பாட்டகம் (Processor), கட்டுப்பாட்டகம் (Control Unit), தகவல் வெளிக்கொணரும் கருவி (Output Device) என எல்லாமாக ஐந்து முக்கிய பாகங்கள் காணப்பட்டன. சார்ல்ஸ் பாபேஜ் வடிவமைத்த கணினி நீண்ட காலத்திற்குப் பின்னரே அவர் இல்லாத காலத்திலேயே முழுமையாக உருவாக்கப்பட்டது. 1890 இல் ஹேர்மான் ஹொலரித் (Herman Hollerith) மக்கள் கணக்கெடுப்பிற்காக (Census) குத்து அட்டைத் தொகுதியை (Punching Card System) உருவாக்கினார். இந்த முறையை அறிமுகம் செய்ததனால் ஐம்பது இலட்சம் அரச பணத்தை மீதப்படுத்தினார் என அறிய முடிகின்றது. இவர் உருவாக்கிய நிறுவனமே 1911இல் ஐபிஎம் (IBM International Business Machines Corporation) ஆக மாறியது. 1937இல் லோவா மாநிலப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் ஜே. வி ஆற்றனசோவ் (J.V. Atanasoff, Professor Lowa State University) கியர்



(Gear), பெல்ற் (Belt) போன்ற இயந்திரப்பாகங்கள் அற்ற முதலாவது கணினியை உருவாக்கினர். கணினிகளின் முதற் பிரவேசம் பற்றிய சில தகவல்களைப் பரிமாறிக் கொண்டோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி. வணக்கம்.

தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com



AYURVEDA

MASSAGE GOOD FOR HEALTH & PAINS

Back, Leg, Shoulder, Cervical, Heel, Knee and Foot Pain Stiff Neck, Severe Headacke, Migraine, Insommia Weight Problems, Sciatica, Slipped - Prolapsed Disc, Solar Piexus, Disorders Of Joints, Bones And Muscles.

Women For Women, Men For Men - 416.434.9251



யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

**Pleasant Service with**
**LOWEST COMMISSION**
**Starting from 1%**



# BUYING OR SELLING?

## Meet a Realty Expert!

**Why rent when you can invest**
**in real estate and save for your better future.**

## Call me for a change

**I will save your $$$$ and earn your trust**

## Why should you list or buy with me?????

**Surprise Gift for Every Buyer and Seller. You will not be disappointed**

**Your House May Worth More Than You Think**
**ATTENTION BUYERS AND SELLERS THERE CAN'T BE A BETTER TIME THAN THIS**
**Just call me for a free home evaluation**

Superior Negotiating Skills Guaranteed. Continuous Full Advertising until SOLD in Major English and Tamil Media and Websites (24 Hours a Day).
With my 18 years of Real Estate and Mortgage experience I am confident that I will provide and qualify you with your Dream home.
List Your Property with me for the top dollar and be finance free. I provide FREE professional, Complimentary Staging, photography, virtual tour and flexible low commission or no commission (when you list and buy with me).
I Have Many Qualified Buyers Looking for Houses in Your Area

**No Down Payment, Bankruptcy /Bad credit /Self-Employed**
**Up to 20000.00 CASH BACK at closing & Discounted Mortgage**
**Rates to Help you With Arranging your Mortgage**

View Thousands of Homes online www.nilahomes.com

**KNOWLEDGE ! EXPERIENCE! INTEGRITY! HONEST! & CONSCIENTIOUS FULL SERVICE**



**Nila Ravindran**
**Sales Representative**
**647-836-6502**
E-Mail: nila@topremax.ca
Web: www.nilahomes.com

Buyers Have a 1 in 3 Chances of Receiving Lawn Mowing or Snow Removal Services for Up to One Year!


RE/MAX®

RE/MAX CROSSROADS REALTY INC., BROKERAGE
1055 Mcnicoll Avenue, Toronto E05, ON M1W3W6
Office:416-491-4002Cell: (647) 836-6502 Fax(416)756-1267
**"Your Referrals Are The Sincerest Compliment I can Receive"**

# தென் இந்தியாவின் துவாரகா : குருவாயூர்

தமிழக முதல்வர் ஜெயலலிதா, இதற்கு முன்பு இரண்டாவது முறை ஆட்சிக்கு வந்ததும் குட்டி யானை ஒன்றை ஒரு கோயிலுக்கு காணிக்கையாக வழங்கினார், ஞாபகம் இருக்கிறதா? நிச்சயம் மறந்திருக்க மாட்டீர்கள், ஆம், யானைகள் காணிக்கைக்குப் பெயர்பெற்ற குருவாயூர் தான் இந்த வாரம் நம் சுற்றாலா இடம். பகவான், குழந்தை கிருஷ்ணனாக அருள் புரியும் திருத்தலம், எல்லாவற்றுக்கும் மேலே 'தென் துவாரகை' எனப் போற்றப்படுவது!

குருவாயூர், கேரள மாநிலத்தில் திருச்சூர் மாவட்டத்தில் உள்ளது. இங்குள்ள பிரசித் தமான கிருஷ்ணன் கோவில் காரணமாக புகழ்பெற்றது குருவாயூர். இந்துக்கள் வழிபடும் தலங்கள் பல இருந்தாலும், அவற்றில் குருவாயூருக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது, குருவாயூர் பூலோக வைகுண்டமாக அறியப்படுவதுதான், அதாவது பூமியில் இறைவன் விஷ்ணு வாசம் செய்யும் இடமாகக் கருதப்படுகிறது, குருவாயூர்.



## கேரளா சுற்றுலா இடங்கள் - 13

குருவாயூர் கோவில் கிருஷ்ணன் விக்கிரகத்துக்கும் தனிச் சிறப்பு உண்டு. மிகவும் புனிதமானது என கருதப்படும் பாதாளாஞ்சனா சிலையில் இருந்து இந்த சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணன் மனம் கவரும் பாணியில் நான்கு கைகளுடன் காணப்படுகிறார். பாஞ்சஜன்யம் என்ற சங்கை ஒரு கையிலும், சுதர்சன சக்கரம் என்ற சக்கரத்தை இன்னொரு கையிலும், மூன்றாவது கையில் கௌமோதகி என்றறியப்படும் கதையையும் நான்காவது கரத்தில் தாமரை மலரையும் வைத்துக்கொண்டு புன்சிரிப்புடன் காட்சி தருகிறார். கழுத்தில் புனிதமான துளசி மாலை அலங்கரிக்கிறது. இது மகா விஷ்ணுவின் கம்பீரமான அவதாரத்தை குறிப்பதாகும். கிருஷ்ணன் அவதாரத்திற்கு சற்று முன்பு அவர் அன்னை தேவகி மற்றும் தந்தையார் வாசுதேவருக்கு இவ்வாறே தோற்றமளித்தாராம். இதனால் குருவாயூர் 'தென் இந்தியாவின் துவாரகா' என்றும் அறியப்படுகிறது. அவரை கண்ணன், உண்ணிக் (குழந்தை) கண்ணன், உண்ணிக் கிருஷ்ணன், பாலகிருஷ்ணன் மற்றும் குருவாயூரப்பன் என்று பல பெயர்களில் குருவாயூர் கிருஷ்ணனைக் குறிப்பிடுகிறார்கள்.

குருவாயூர் கிருஷ்ணன் விக்கிரகத்தை ஒரு காலத்தில் மகா விஷ்ணு வைகுண்டத்தில் வைத்து வழிபட்டதாகவும், அதற்குப் பிறகு அதனை அவர் பிரம்மாவிடம் அளித்தார் என்றும் ஐதீகங்களில் உள்ளன. 'அரசரான சுதபரும் அவர் மனைவியும் குழந்தை வரம் வேண்டி பிரம்மாவை வழிபட்டு வந்தனர். அவர்களுடைய பக்தியை மெச்சிய பிரம்ம தேவர், அவர்கள் முன் தோன்றி இந்த விக்ரஹத்தை அளித்து, வழிபடச் சொன்னாராம். மேலும், அவரே அவர்களுடைய மூன்று மறுபிறப்புகளிலும் அவர்களுடைய மகனாக வெவ்வேறு உருவங்களில் அவர்களுக்கு பிறப்பார் என்றும் வரம் அளித்தார்.

இப்படியாக அவர்களுக்கு அவர்களுடைய மூன்று மறுபிறப்புகளிலும் இந்த விக்கிரகத்தை வழிபடும் ஓர் நல்ல வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. மூன்றாவது பிறப்பில் அவர்கள் வாசுதேவர் மற்றும் தேவகியாக பிறந்தார்கள். அப்போது அவர்களுடைய எட்டாவது மகனாக, கிருஷ்ணராக பிரம்மா அவதரித்தார். குழந்தையும் இறைவனுமான கிருஷ்ணனே இந்த விக்கிரகத்தை துவாரகாவில் பிரதிஷ்டை செய்து வழிபட தொடங்கினார். கிருஷ்ணரின் சுவர்க்க ஆரோஹணத்திற்கான நேரம் நெருங்க நெருங்க (வைகுண்டத்திற்கு செல்வது), அவரது பக்தரான உத்தவர் அவரை மனதில் நினைத்து உருகி, வருத்தம் அடைந்தார். அப்பொழுது கிருஷ்ணனும் அவரைப் பார்த்து இரங்கி, உத்தவரிடம் இந்த விக்கிரகத்தை அளித்தார். அப்போது, "துவாபர யுகத்தில் துவாரகையை ஏழு நாட்களில் கடல் கொள்ளும். அந்த வெள்ளப் பரப்பில் விக்கிரகம் மிதக்கும். அதை தேவர்களின் குருவாகத் திகழும் பிருகஸ்பதி மூலம் பிரதிஷ்டை செய்ய வேண்டும்!' என்று உத்தவரிடம் அருளினார் கிருஷ்ணர். ஆனாலும் கிருஷ்ணன் மறைவிற்குப் பிறகு, கலியுகத்தில் உலகத்தில் உள்ள ஜீவராசிகளுக்கு ஏற்படப்போகும் கஷ்ட நஷ்டங்களை நினைத்து மிகவும் மனம் வருந்தினார். உத்தவர். அதற்கு இறைவன் கிருஷ்ணன், தானே இந்த விக்கிரத்தில் உறையப் போவதாகச் சொல்லி உத்தவரை சமாதானப்படுத்தினார்.

சொன்னது போலவே, ஒரு பெரிய பிரளயம் துவாரகாவைத் தாக்கியது. வெள்ளப் பெருக்கில் மாட்டி தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த விக்கிரகத்தை தேவகுரு அவருடைய முதன்மை சிஷ்யனான வாயுவின் உதவியுடன் மீட்டெடுத்தார். குரு, வாயு இருவரும் விக்கிரகத்தை பாதுகாப்பாக வைக்க ஒரு நல்ல இடத்தை தேடி உலகெங்கும் சுற்றி அலைந்தார்கள். இறுதியில் அவர்கள் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள பாலக்காட் சந்து வழியாக பாலக்காடை அடைந்தார்கள். அங்கே அவர்கள் பரசுராமரை சந்தித்தார் கள். பரசுராமர் அவர்கள் கொண்டுவந்த விக்கிரகத்தை தேடிக்கொண்டு துவாரகா விற்கு செல்வதாக இருந்தார். பரசுராமர், குருவையும் வாயுவையும் பச்சைப்பசேல் என்ற மிகவும் அழகான ஒரு இடத்திற்கு அழைத்து சென்றார். அங்கே தாமரைக் குளக்கரை ஒன்றில் சிவபெருமான் தவம் செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். இவர்கள் வந்ததும் பரமசிவன், மனைவி பார்வதியுடன் அவர்களுக்கு காட்சி அளித்தார். அவர்களை வரவேற்று விக்கிரகத்தை ஸ்தாபனம் செய்வதற்கு அதுவே உகந்த இடமாகும் என்பதையும் தெரிவித்தார். பரமசிவன் வழிகாட்டுதலின் படி அவர்கள் இருவரும் இணைந்து விக்கிரகத்தை அங்கே நிறுவினார்கள். குருவும் வாயுவும் சேர்ந்து பிரதிஷ்டை செய்ததால், அன்றிலிருந்து அவ்விடம்



**- மா. கிருஷ்ணன் -**

குருவாயூர் என்ற வழங்கப்படும் என்று ஆசீர்வதித்தார், பரமசிவர். அதற்குப் பிறகு பரமசிவர் மற்றும் பார்வதி இருவரும் எதிர்க்கரையில் இருந்த மம்மியூருக்கு திரும்பி சென்றனர்' என்கிறது குருவாயூர் தலவரலாறு.

குருவாயூரப்பன் கோயில், தமிழ்நாட்டின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழநி திருக் கோயிலைப் பார்த்தவாறு அமைந்துள்ளது.

குருவாயூர் கோயில் அமைப்பு, வழிபாட்டு முறைகள், பலன்கள், யானைகள் காணிக்கை மற்றும் வரலாற்று சிறப்புகள் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

எப்படிச் செல்வது, எங்கே தங்குவது?

கேரள மாநிலம் திருச்சூரில் இருந்து சுமார் 22 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள குருவாயூர், கேரளா மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பெரிய நகரங்களுடன்

**தொடர்ச்சி 39ஆம் பக்கம்**

## பாக்ஸ் செய்தி: ஆதிகால கேரளா

மனிதயினவியலின்படி பார்த்தால் கேரளத்தின் ஆதிகால மக்கள் நீக்ரோய்ட், புரோட்டோ ஆஸ்திரேலாயிட், மெடிட்டேரியன் போன்ற இனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்க வேண்டும் என்கிறார்கள். இவர்கள் கி.மு. 10ஆம் நூற்றாண்டு முதலே கேரளத்தில் வாழ்ந்து வருவதாகக் கருதப்படுகிறது. ஆனால், இதனை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இம்மக்கள் தற்போது வழக்கொழிந்துபோன ஆதித் தமிழ் மொழியை பேசியதாகவும் கருதப்படுகிறது.

சிந்து சமவெளி காலத்திலேயே, அம்மக்களோடு கேரளத்திற்கு கடல் வாணிபத் தொடர்பு இருந்ததாக அறிய முடிகிறது. குறிப்பாக, சிந்து சமவெளி ஆரியர்கள் தெற்குக் கேரளத்தில்தான் ஆரம்ப கால அரசாட்சியை நிறுவியுள்ளார்கள். இந்த ஆரியப் பேரரசு தெற்கே - தற்போது தமிழகத்தில் இருக்கும் நாகர்கோயிலில் இருந்து வடக்கே உள்ள திருவல்லா வரையிலும், கிழக்கே, ஸஹ்யாத்ரி மலைத்தொடரையும் உட்படுத்தி ஆட்சி செலுத்தியிருக்கிறது. ஆயக்குடி இப்பேரரசின் தலைநகராக இருந்துள்ளது.

கிறிஸ்துவ சகாப்தத்தின் துவக்கத்தில், தமிழகத்தில் செல்வாக்குடன் இருந்த சோழப் பேரரசே, கேரளத்திலும் மேலாதிக்கமான அரசாக இருந்துள்ளது. சேர அரசு வஞ்சியை தலைநகராகக் கொண்டு இப்போதுள்ள கேரளத்தின் மத்திய பகுதியை ஆண்டுள்ளது. பின்னர் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் முடிவில் ஆரம்ப கால சேர அரசு சிதையத் துவங்கியது. இதன் விளைவாக கேரளத்தின் பல பகுதிகளில், சுயேச்சையான பல சிற்றரசுகள் தோன்றின. அப்படி உருவான சிற்றரசுகளில் வேணாடு, கொச்சி, கோழிக்கோடு, கோலத்திரி ஆகியவைகள் குறிப்பிடத்தக்கவைகள். கேரளத்தின் மத்திய கால வரலாற்றை உருவாக்கியதில் இப்பகுதிகள் முக்கிய பங்காற்றியுள்ளன.

போர்ச்சுக்கீசியர்களின் வருகைக்கு முன்னால், அதாவது 15ஆம் நூற்றாண்டின் நெருக்கம் வரையில், கேரளத்தின் அரசியல் சூழ்நிலை என்பது சிக்கலான ஆண்டை அல்லது பண்ணை அடிமைச் சமூகமாகவே இருந்துள்ளது. ஒவ்வொரு பிராந்தியமும் பல குட்டி வட்டாரங்களாகப் பிரிந்து கிடந்ததோடு, இந்தக் குட்டி வட்டாரங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குட்டி 'ராஜா' ஆண்டு வந்தார். இந்தக் குட்டி ராஜாக்கள் தங்கள் வட்டாரங்களுக்குள் அதிகாரம் உடையவர்களாக இருந்த அதேசமயம் ஏதோ ஒரு பெரிய வல்லதிகார அரசுக்கு கட்டுண்டவர்களாகவும் இருந்தார்கள்.

RBC Insurance®



## உங்களுக்கு எந்த காப்புறுதி வகையை தெரிவு செய்வது என்று குழப்பமாக உள்ளதா?

என்னால் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

உங்கள் வருமானத்திற்கும் தேவைக்கும் ஏற்ற காப்புறுதி வகைகளை தெரிவு செய்வதற்கும் அதில் உள்ள குழப்பங்களை சரி செய்வதற்கும் கனடாவின் முன்னணி காப்புறுதி நிறுவனக்களில் ஒன்றான **Royal Bank Insurance** இன் முழுநேர **Platinum** காப்புறுதி ஆலோசகரான என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்.





இன்றே அழையுங்கள்

**Kugan Ponnampalam** CHS, B.A.Fin, PGDip in MGT, MAAT
Platinum Insurance Advisor

**416.576.0050**

**Insurance advice for your life™**

Coverage is governed by the terms and conditions of the policy as issued. ® Registered trademarks of Royal Bank of Canada. ™ Trademarks of Royal Bank of Canada. Used under licence.

ONTARIO TRILLIUM BENEFIT



# உங்கள் பணம் ஒவ்வொரு மாதமும்

ஒண்டாரியோ விற்பனை வரிக் கடன் > வடக்கு ஒண்டாரியோ சக்தி கடன் > ஒண்டாரியோ சக்தி மற்றும் சொத்து வரிக் கடன்

உங்கள் 2011 ஆம் ஆண்டின் வரிக் கணக்கின் அடிப்படையில், **ONTARIO TRILLIUM BENEFIT** திட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள மூன்று வரிக்கடன்களில் ஏதேனுமொன்றுக்கு நீங்கள் தகுதியடைகிற பட்சத்தில், அடுத்த ஆண்டு நீங்கள் வரிக்கணக்கை சமர்ப்பித்து முடிக்கும் வரை காத்திருப்பதை விட, உங்கள் பலனை நீங்கள் மாதாமாதமே பெற்றுக் கொள்வீர்கள். **2012** ஆம் ஆண்டு ஜூலையில் ஆரம்பித்து - உங்கள் பணம், ஒவ்வொரு மாதமும். நேரடி டெப்பாசிட் அல்லது அஞ்சல் மூலம். நீங்கள் அதனை சரிபார்த்துக் கொள்ளலாம். உங்கள் மொழியில் இன்னும் அதிகத் தகவல்களைப் பெறுங்கள். வருகை தாருங்கள்: **ontario.ca/trilliumbenefit.**

**ontario.ca/trilliumbenefit • 1 866 ONT-TAXS (1 866 668-8297) • TTY 1 800 263-7776**

ஒண்டாரியோ மாகாண அரசால் பணம் செலுத்தப்படுகிறது

Ontario

# சொப்காவின் கனடா பிறந்ததினக் கொண்டாட்டம்

சென்ற முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை 01-07-2012 மாலை 6:00 மணியளவில் சொப்கா (SOPCA) என்றழைக்கப்படும் பீல்குடிமக்கள் ஒன்றியத்தின் கனடா பிறந்த தினக் கொண்டாட்டம் கலை நிகழ்ச்சிகளோடு மிசிசாகாவில் உள்ள ஸ்குயர்வண் முதியோர் அரங்கத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மௌன அஞ்சலியைத் தொடர்ந்து கனடிய தேசிய கீதம் ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் பாடப்பட்டு கனடிய தேசியக் கொடி மகாஜனாக்கல்லூரி பழைய மாணவரும் விளையாட்டு வீரருமான திரு. கே. நவரட்ணம் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ் வாழ்த்துப் பாடலும், சொப்கா மன்றத்தின் கீதமும் இடம் பெற்றன.

**- மணிமாலா -**

தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மகாஜனாக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் கனடா பிறந்த தினக்கொண்டாட்டத்தை சொப்பா அங்கத்தவர்களோடு ஒன்று சேர்ந்து பிறந்ததினக் கேக் வெட்டித் தொடக்கி வைத்தார். அந்த நிகழ்வைத் தொடர்ந்து சொப்கா மாணவி ஜெனிற்ரா ரூபரஞ்சனின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

அதைத் தொடர்ந்து சொப்கா மன்றத்தின் உபதலைவர் குரு அரவிந்தனின் உரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் சொப்கா அங்கத்தவர்களின் தொகை இவ்வருடம் அதிகரித்திருப்பதாகவும், அதன் அங்கத்தவர்கள் தன்னார்வத் தொண்டர் களாக சீடாபிறே பூங்காவின் பராமரிப்புத் தேவைகளுக்கு உதவி செய்ய முன் வந்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் ஆகஸ்ட் மாதம் கல்விப் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவிருப்பதாகவும், 2013 தை மாதம் சொப்காவின் கலாச்சார விழாவைக் கொண்டாட இருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழினி விஜயகுமாரின் நடனத்தைத் தொடர்ந்து விசேட விருந்தினராகக் கலந்து கொண்ட மிஸிசாகா கிழக்கு குக்ஸ்வெல் மாகாணசபைப் பிரதிநிதி டீபிகா டமிர்லா உரையாற்றினார். அவரது உரையைத் தொடர்ந்து மிஸசாகா கிழக்கு குக்ஸ்வெல் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. லிஸோன் அவர்களின் உரை இடம் பெற்றது. தன்னார்வத் தொண்டர்களாகப் பணியாற்றிய சிலருக்கும், கனடா தினப் போட்டியில் பங்குபற்றிப் பரிசு பெற்றவர்களுக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து அபிராம் சந்திரமோகன், சிவாணி சிவசெல்வச்சந்திரன், துஜன் கிஷ்ணகுமார் ஆகியோர் பங்குபற்றிய கனடா பற்றிய தகவல்களை எடுத்துச் சொல்லும் நகைச்சுவை உரையாடல் இடம் பெற்றது.

சொப்கா மாணவிகளின் நடனத்தைத் தொடர்ந்து அழகன் சின்னத்தம்பியின் பாடல் இடம் பெற்றது. சந்திரமோகனின் கனட-ாவைப் பற்றிய கவிதையைத் தொடர்ந்து, கனடா பிறந்த தின உரையைச் சொப்கா மாணவர்களான பிரியங்கா ஜெயரட்ணம் ஆங்கிலத்திலும், அருண் பற்குணசிங்கம் பிரெஞ்சு மொழியிலும் நிகழ்த்தினர். அடுத்து சொப்கா மாணவர்களின் நகைச்சுவை நடனம் இடம் பெற்றது.

பிரதம விருந்தினர் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் உரையைத் தொடர்ந்து போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து சொப்கா இசைக் குழுவின் பாடல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் இடம் பெற்றன. அபிநயா ரங்கநாதனும், சூரியா ரட்ணமும் நிகழ்ச்சிகளைச் சிறப்பாகக் கொண்டு நடத்தினார்கள். இறுதியாக சங்கச் செயலா-ளர் செல்வி. ராகுலா சிவயோகநாதனின் நன்றியுரை இடம் பெற்றதைத் தொடர்ந்து வருகை தந்தோர்க்கு இரவு உணவு வழங்கப்பட்டு, சொப்காவின் கனடாதினக் கொண்டாட்டம் இனிதே முடிவுற்றது.






# Lakshmi Timeshare

**Another WORRY FREE Vacation & Investment Ownership**




**TIMESHARE IN YOUR HOMELAND**


**Nallur Kumaran Property Development Coporation is committed to developing communities, creating jobs and bringing people together.**




## 7 REASONS TO BUY NOW!

1. Capital Investment and Profit Sharing
2. FREE Vacations - Holiday Timeshare 42 days / calendar year
3. Multiple Locations
   - Colombo - Green Garden Resort
   - Jaffna - Temple Resort
   - Kandy - Hillsview Resort
   - Trincomalee - Golden Beach Resort
   - Vavunia - Village Resort
   - Nainativu - Island Sweet Water Resort
4. Low Price - $4,950 Easy Payment Plan
5. Referral Bonuses - May refer up to three people, each with$500.00 Refund - Total $1,500.00
6. No Annual Fees - Furnished Paradise Style Resort, $20.00/week per usage only
7. PURCHASE NOW at this LOW PRICE, they won't last long

**ENJOY THE NEXT 24 YEARS WITH YOUR FAMILY ONLY FOR INTRODUCTORY PRICE $4,950. WITH EASY PAYMENT PLAN**




## நல்லூர்குமரன் நிறுவனம் வழங்கும் மற்றுமோர் பிரமாண்டமான திட்டம்


உங்கள் முதலீட்டை பல மடங்கு இலாபத்துடன் பெருக்குவதற்கும் 24 வருடத்திற்கு ஒரு வருடத்தில் 42 நாட்கள் உங்கள் விடுமுறையை உல்லாசமாக கொண்டாட நீங்கள் செலுத்தவேண்டியது **CAD$ 4,950.00** மட்டுமே.

அறிமுக விலை விரைவில் அதிகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்

**FAMILIES TO VISIT THEIR HOMELANDS AND THEIR FOREFATHERS**

**Website: www.LakshmiTimeshare.com**
**Email: info@lakshmitimeshare.com**
**Phone: 416-518-5056 / 416-335-9747**
27 McDiarmid Rd., Toronto ON Canada M1S 1Z5

by Rameez - monara 905 554 7844


AVANI
AT METROGATE
TRIDEL
BUILT FOR LIFE
Special Price for HomeLife GTA Realty Inc. BUYERS
For Your Early Booking or Information Please Call
416.321.6969
Buy Through
HomeLife GTA Realty Inc.
Realtors
Chance to WIN**
• a trip to Cuba for 2
• iPad
• 42" TV
• 10% Deposit*
• Price starting at $214,000
• One parking included
• FREE Assignment
• Occupancy early 2015
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc.,
Brokerage*
5215 Finch Avenue E. # 203, Toronto, ON M1S 0C2
*Independently owned and operated. ** Some conditions may apply
***not intended to solicit buyers /sellers currently under contract
- digi Media -

# இன்னொரு...

பாகம் - 4
பகுதி 44

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

◊ சி.வி. நாதன் ◊

இன்னமும் முடியவில்லை!

'எங்களது பேரண்டம் தோன்றியது போலத்தான் இந்தப் பேரண்டமும் தோன்றியிருக்கலாம். ஆனால் தோன்றிய கணத்தில் அடப்படைத்துகள்களுடன் தோன்றிய அடிப்படை விசைகளில் மெலிந்த விசையானது தோன்றவில்லை என கருதிக் கொள்வோம். அதற்கும் சாத்தியமுண்டு. அப்படியிருப்பின் குவாக்சுகள் திணிவுச் செப்பனிடப்படாதது போய்விடும். இந்நிலையில் குவாக்சுகள் இணைந்து புரோத்தேன்களும் நியூத்திரன்களும் தோன்றுகையில் புரோத்தோன்கள் நியூத்திரன்களை விட ஒரு வீதம் அதிக திணிவுடையவை ஆகிவிடக் கூடிய சந்தர்ப்பம் வந்துவிடும். அதனாலே அப்பேரண்டத்தில் ஐதரசன் அணுக்கரு தோன்றி அவை நியூத்திரன்களுடன் இணைந்து உருகுகையில் பாரமாக ஐதரசன் அணுவும் பின்னராக ஈலியம் 3 உம் தோன்றும்.'

இரண்டாவது தொகுதியை விளக்கிக் கொண்டிருந்தாள் நான்சி..

'இதுதான் இப்பேரண்டத்தில் இருக்கக் கூடிய வித்தியாசம்.' இடைப்புகுந்தார் ஜென்கின்சோ. அவரது குரலில் ஆர்வம் கொப்பளித்தது.

'இப்பேரண்டத்தில் மெலிந்தவிசையின் ஆட்சி இல்லாததால், தனிமங்களின் கதிர் வீச்சுக்களைக் காணமுடியாது' ஜென்கின்சோ்

'அப்படியாயின் இங்கு உயிரினங்கள் தோன்றக் கூடிய சூழல் தோன்றுமா?' சான்

'கண்டிப்பாக. ஏனென்றால், எமது பேரண்டத்தில் உயிரினத் தோற்றத்திற்கு உதவிய காபன்12 என்ற அணு போன்றே அப்பேரண்டத்திலும் ஈலியம்3 இன் உருகலின் போது காபன்14 அணு தோன்றும். இந்தக் காபன்14 அணுவும் உயிரினங்கள் தோன்றுவதற்கு ஏதுவான ஒன்றுதான். எனவே காலப் போக்கில் அப்பேரண்டத்திலும் உயிரினங்கள், எங்களைப் போன்றவை கூடத் தோன்றலாம்.'

சானின் உள்மனம் பரபரப்பாகத்தான் இருந்தது.

அப்படியானால் அந்த இருவரும் கூறியது, தனது இருக்கையில் வந்து இருந்த ஜென்கின்சோ, 'இது ஒரு எடுத்துக் காட்டு மட்டுமே. இதுபோன்ற பல வித்தியாசமான பேரண்டங்கள் இருக்கலாம். சிலவற்றில் உயிரினங்களே தோன்ற முடியாமலும் இருக்கலாம். எல்லாம் அந்தந்தப் பேரண்டங்களின் பிக்பாங்குடன் தோன்றும் அடிப்படை விசைகளிலும் குவாக்சுகளின் தன்மையிலும் தங்கியுள்ளது'



'எல்லாம் சரி புரபெசர், இந்த வேற்றுப் பேரண்டத்தின் பொருட்கள், உயிரினங்கள் எமது பேரண்டத்தினுள் எப்படியோ வந்தால் எமது கண்களுக்குத் தென்படக் கூடியதாக இருக்குமா?' சான் கேட்டார்.

'இதற்குச் சரியான பதில் என்னிடமில்லை. ஆனாலும் காபன்12 அல்லது காபன் 14ன் அடிப்படையில் உயிரினங்கள் ஏதாவது இருப்பின் எமது கண்களுக்கு அவை புலப்படத்தான் வேண்டும்' என்றவர்

'நீங்கள் நாசாவின் உயரதிகாரியல்லவா. உங்களது கவனத்தில் உள்ள பறக்கும் தட்டுகள், வேற்றுக் கிரக மனிதர்களுக்கும் இவற்றிக்கும் ஏதாவது தொடர்புகள் இருக்கக் கூடுமோ என்றுதானே பார்க்கின்றீர்கள்?' எனச் சிரிப்புடன் கேட்டார்.

சான் எதுவும் கூறாமல் இருந்தார்.

ஜென்கின்சோவிடமும் எதையும் கூற விரும்பவில்லை.

'நான் இன்னொரு பேரண்டம் இருந்தால் அதில் உயிரினங்களும் இருக்கலாம் என்பதற்கான விளக்கத்தினைத்தான் தந்தேன். சென்ற கிழமை நடந்த கூட்டத்தில் இது பற்றிப் பேசுவதற்காகத் தயார்படுத்திய விடயங்களில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன்.' என்றவர்

பல்பேரண்டங்கள்' இருக்கக் கூடிய, அல்லது தோன்றக் கூடிய காரணங்களைப் பல ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றார்கள். அது உங்களுக்கும் தெரியும்தானே என்றார் சரிதான் என்பது போல் மெதுவாக தலையாட்டிய சானின் மனம் இப்போது இன்பன் பற்றியும் நாகராசன் பற்றியும் யோசிக்கத் தொடங்கியது.
அவர்களை?

அவர்கள் எப்படித் தப்பினார்கள்?

முற்றாக முடிவடைந்தது..


**Summer Tutoring**

(Grade 1-12, College, & University)

* ENGLISH * FRENCH * MATH * SCIENCE *
* ENGINEERING * ACCOUNTING *

(647) 705 0725

* Prepares the students for next grade they enter in september
* Individual plan for each student to help build strong base
* Completely aligned with Ontario Curriculum
* Highly qualified and experienced teachers conduct lessons

# BASEMENT RENT

**14TH AVE. & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. August 15, 2012.
905.554.6026 / 416.312.8026

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, park. Laminate flooring. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: 647.273.3897

**PHARMACY & FINCH**
4 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, schools. 3 நேரச்சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. September 01, 2012.
416.201.1222 / 416.299.4895

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, milliken park. Avail. immediately. Couple preferred.
416.569.5117 / 416.476.5610

**BRIMLEY & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2012.
647.344.3384 / 647.773.9164

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 1 Bedroom also avail. in main floor. Close to all facilities. தனி family விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
416.299.8863 / Gobi - 416.708.8291

**MORNINGSIDE & MCLEVIN**
1 Bedroom walk-out bsmt fo rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.519.2899 / 416.303.6589

**KENNEDY & FINCH**
1 Bedroom walk-out bsmt for rent. Safe zone neighborhood. Utilities included. Avail. immediately. 3 Bedroom house also avail. October 01, 2012.
647.706.5851 / 416.321.9969

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Newly renovated kitchen, livingroom, full washroom. Closet o TTC, Kennedy subway.
தொடர்புகளுக்கு: 416.265.0162

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, high school. Avail. immediately.
905.471.2987 / 416.666.3971

**MIDDLEFIELD & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2012.
தொடர்புகளுக்கு: 905.910.1142

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Full washroom, laundry. Close to TTC, school. Avail. immediately. 1 Room also available.
தொடர்புகளுக்கு: 647.895.8703
647.895.8702 (Before 1.00 PM)

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail.immediately.
905.201.6043 / 416.725.3665

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, Stores, etc. Avail. immediately .
தொடர்புகளுக்கு: 416.388.6603

**NEILSON & MCLEVIN**
Brand new 1 bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.473.2988 / 647.771.8426

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2012.
416.291.9964 / 416.520.2754

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Livingroom, kitchen, full washroom, parking, sep. entrance. Close to TTC, Kennedy subway, school & all facilities. Quiet place. Avail. immediately.
416.265.9138 / 416.271.8467

**OASIS & SEASONS**
2 bedroom walkout bsmt with sep. entrance for rent in Scarborough. Walk to school, TTC, park. Close to shopping mall, Highway 401&407. Separate laundry room, New paint, one outdoor parking. Avail. Immediately.
Call Kenga @ 416 318 0171 or email to Kengak@Capitalink.ca

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to facilities. Avail. August 01, 2012.
416.431.9832 / 416.315.9348

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime. Rent $850.
தொடர்புகளுக்கு: 416.726.2472

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 washroom, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.305.7317

**MIDLAND & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. washroom, parking, laundry. Avail. immediately. Close to bus, RT, mall, school.
416.266.4789 leave message
416.980.5697 8:00am - 4:00pm

**MORNINGSIDE & SHEPPARED**
Newly renovation 2 bedroom bsmt for rent. Sep. entrance, cable, internet. Couple or students preferred. Close to TTC, mall.
416.220.5967 / 647.852.3864

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Cable, parking. Close to TTC, tamil stores, temple, Grace Hospital, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.230.7696 / 647.966.8612/ 416.412.0406

**VICTORIA PARK & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 1 Bedroom also avail in main floor. (Ladies preferred.). Close to all facilities. Avail. immediately.
416.291.3153 / 416.754.0823

**MORNINGSIDE / SHEPPAED**
Newly renovated 2 அறைகள் கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Gardening செய்யும் வசதியும் உண்டு. அருகாமையில் Mall, TTC, school, library U OF T. Small family preferred. No pets & No smoking.
தொடர்புகளுக்கு: 416.834.1081

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom walk-out bsmt for rent. Laundry parking. Close TTC, mall, Tamil stores, HWY 401. Available August 01, 2012.
416.277.9044/905.683.5105

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: **647.680.5093**

**MIDDLEFIELD & HIGHGLEN**
1Bedroom, 2 bedroom, 3 bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking, utilities included. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **905.334.7398**

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: **416.551.8379**

**MARKHAM & STEELES**
1 bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking. Close to bus, shopping, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.896.7740**

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.833.8903 / 647.995.8903

**MIDDLAND & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Closet to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.448.6464

**BELLAMY & PANDORA CIR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

**MCCOWAN & 16 TH AVE.**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry, bills including. Close to mall, babu catering.
தொடர்புகளுக்கு: 905.887.5385

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.471.2582 / 647.505.2582

மேலும் பக்கங்கள் 25, 26

**16TH AVE. & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, school, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.554.0606

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, YRT, mall, tamil stores. Girls or small family preferred. Avail. immediately.
647.618.4088 / 647.885.1429

**LAWRENCE & ORTONPARK**
தனிவழியுடன் கூடிய Bsmt இல் சகல வசதிகளுடனும் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
647.928.0667 / 416.701.0667

**PAINTED POST & BRIMORTON**
1 Bedroom apt and 1 bachelor apt for rent. Close to all facilities. Avail. immediately.
416.627.6194 / 416.880.3636

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school, temle. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.291.2796

**MORNINGSIDE & OLD FINCH**
2 bedroom bsmt for rent. washroom, sept. entrance, laundry, cable. Bright window, freshly painted. Rent $850. Close to Centennial college U of T.
தொடர்புகளுக்கு: 416.722.3450

**WARDEN & ST.CLAIR**
2 Bedroom, 3 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately.
647.693.3107/ 416.637.2277

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately. 2 or 3 people preferred.
905.599.1622 / 416.939.8656

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.783.4850 / 905.294.2674
416.293.6211

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.750.9138

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom walk-out bsmt for rent.Sep. entrance. Close to TTC, mall, school. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.281.2509 / 416.473.7518

## காணி விற்பனைக்கு
குப்பிளான் தெற்கு 10 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 905.209.0876

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM RENT

**FINCH & MIDDLEFIELD**
Newly renovated 1 bedroom for rent in a condo. Washroom, laundry, cable, internet. Close to TTC, temple, mall.
Avail. August 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.920.8264

Room for rent near McMaster University for students. Avail. August 01, 2012.
647.786.4237 / 416.754.4237

**WARDEN & FINCH**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking. Close to TTC, shopping, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.495.9775

**NEILSON & SHEPPARD**
1 Bedroom for rent in main floor. Close to all facilities. Girls preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.822.2827

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**MORNINGSIDE & STAINS**
2 Bedroom for rent. Close to all facilities. இன்னொரு பெண்ணுடன் share பண்ணி இருப்பதற்கு பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.856.2205

**WARDEN & FINCH**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
Ladies preferred.
416.434.0539 / 416.494.3042

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom for rent. Livingroom, parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.701.3569

**MARKHAM & BRIMORTON**
2 rooms in bsmt for rent. Sep. entrance. No Parking. Close to ttc, mall, centennial college.
தொடர்புகளுக்கு: 416.906.5331

**Room for rent only female**
**MORNINGSIDE & LAWRENCE** சந்திப்பிற்கு அருகில் வீட்டின் மேற்தளத்தில் எல்லா வசதிகளுடன் கூடிய அறை ஒன்று வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. தேவை ஏற்படின் இரண்டு நேரச் சாப்பாடு வழங்கப்படும்.
**647.344.5044 / 416.312.6827**

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Close to mall, TTC, HWY, Science techno center, hospital, etc.
தொடர்புகளுக்கு: 647.981.3771

**NEILSON & FINCH**
Rooms for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.843.1568

**KEELE & FINCH**
Furnished room for rent in condo. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.648.1679

## ROOM RENT

**DONMILLS & SHEPPARD**
3 Bedroom in main floor rent. Kitchen, laundry, parking. Close to TTC, bank, school, Donmills subway, HWY 401, 404.
Avail. August 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.502.8053

**MARKHAM & ELLESMERE**
One Room for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.566.1918

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence LRT. ஒருவர் விரும்பத்தக்கது.
Available immediately.
416.994.9635 / 416.757.9456

**MCCOWAN & 14 AVE.**
1 Bedroom for rent. Parking, laundry. Closet to YRT, mall. Avail. immediately.
416.845.4568 / 905.946.8843

**BSMT / ROOMS FOR RENT**
**MARKHAM & LAWRENCE**
Newly renovated bsmt apt. avail. immediately. Close to TTC, mall, centennial college.
647.706.4881 / 416.439.4076

**MCCOWAN & FINCH**
1 Room for rent. Close to TTC, mall. Avail. immediately. வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.929.0539

**DUFFRIN & HWT 7**
One Master bedroom with washroom.
1 Bedroom also avail. Close to York university, bus, shopping. Avail. immediately.
Ladies or young couple preferred.
647.389.9193 / 905.832.2203

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.8999

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent. Parking, internet, cable உட்பட சகலவசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Avail. immediately.
416.431.9950 / 416.557.7241

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

## BUSINESS FOR SALE

**MCCOWAN & EGLINTON**
Grocery Store ஒன்று விற்பனைக்கு உள்ளது.
1160 Sq.ft. Avail. immediately.
416.438.6959 / 416.278.5334

## ADMINISTRATIVE ASSISTANTS

Required for a Law Office. Should have knowledge of Word & Excel. Ability to write and speak English. Ability to speak tamil. Training will be provided. Must be hardworking and reliable.
Fax resume to: 416.754.2150

## CONDO. FOR RENT

2 Bedroom condo. for rent. Parking, laundry. Close to TTC,mall, bank, school.
Avail. August 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.801.9144

## HOUSE FOR RENT

**MEADOWVALE & SHEPPARED**
4 Bedroom house for rent. 2 Story detached. Rent $1695. Close to all facilities.
**MCCOWAN & FINCH**
4 Bedroom house for rent.
தொடர்புகளுக்கு: 416.575.5055

**MIDLAND & EGLINTON**
3 Bedroom house for rent. Close to Kennedy subway, Junior school, TTC.
Avail. immediately.
905.201.8525 / 647.994.8525

**NEILSON & FINCH**
3 Bedroom house for rent. 2 bedroom bsmt, sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.802.7857 / 416.564.4531

**PHARMACY & FINCH**
4 Bedroom House + 1 Bedroom bsmt for rent. Laundry. Library, mall, plaza, TTC. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.301.5555

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom Bungalow House for rent.1 washroom. New kitchen, cabinets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.301.5555

**KENNEDY & EGLINTON**
2 Bedroom house with all facilities. Very good for small family with children. Very parking and garden. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.264.3899

**MORRISON & ELLESMERE**
1 Bedroom for rent - main floor. Close to University, Avail. immediately. Students or பெண்கள் விரும்பத்தக்கது.
416.291.1752 / 416.460.2549

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent. 8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.867.2129

## HOUSE FOR SALE

**PRIVATE SALE**
**BRIMLEY & STEELES**
4 Bedroom house for sale with 2 bedroom in the bsmt. Sep. entrance, 4 parking. Close to all facilities. Saturday & Sunday Open house.
905.944.9727 / 647.967.9061

## HOUSE FOR SALE

**9TH LINE & HOOVER PARK**
4 Bedroom House for sale - Stouffville. Double garage, 3 washroom. Close to bus, school, plaza, Walmart, etc.
தொடர்புகளுக்கு: 416.409.4730

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## JOB JOB JOB

வயோதிபர் மற்றும் சிறார்களை பராமரிக்க சான்றிதழ் பத்திரம் வைத்திருப்பவரும் கரிசனையுடன் பணியாற்றக்கூடியவருமான கிறிஸ்தவ பெண்மணி ஒருவர் வேலைக்கு உண்டு.
647.693.3107 / 416.300.4775

Metro Appliance இல் secretary வேலைக்கு ஆள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. ஆங்கிலம், தமிழ் நன்றாக பேசத்தெரிந்தவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.454.4466

வாகன வசதி இல்லாதவர்கள், வயதானவர்கள் தங்கள் வாகன தேவைகளை பூர்த்திசெய்ய
(Pick-up, drop-off )
அழையுங்கள்: 647.607.9927

**MARKHAM & SHEPPARD**
Computer Store ஒன்றிற்கு Sales person தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
idealstairs21@gmail.com

## RENOVATION

Renovation, repairs & paint.
போன்ற வேலைகளுக்கு
அழையுங்கள்: 647.998.3535

**Experienced Hardwood installer**
Monday - Friday - 8.00am - 6.00pm.
தொடர்புகளுக்கு: 416.613.1919

## TUTION

தரம் 5 தொடக்கம் தரம் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விஞ்ஞான (Science) பாடம் University of Toronto இல் life Science படித்தவரால் உங்கள் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.
**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent in September 01, 2012. தொடர்புகளுக்கு: 647.966.3786

## விடுமுறைக்கால KEY BOARD CLASSES

**MARKHAM & LAWRENCE**
தமிழ், ஆங்கில பாடல்களை 3 மாதத்தில் வாசிக்கக் கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 647.448.2569


COMPUTER REPAIR
+ கணனி திருத்தவேலைகள்
+ கணனி தேவைகள்
+ அடிப்படை கணனி பயிற்சி
+ இலவச ஆலோசனைகள்

ProWin Computers.
2383 Eglinton Ave. East
(Wind Mobile Store) Kennedy & Eglinton
416 - 879 7489 / 647 - 340 5568


மேலும் பக்கங்கள் 24, 26

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# “எல்லாம் முடிந்துவிட்டது இனி எதுவும் செய்ய முடியாது என்று சோர்ந்து விடாமல் தொடர்ந்து நாம் எமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும்” கருத்தரங்கில் சி. சிறீதரன் நா. உறுப்பினர்.



“ஆயுதப் போர் முள்ளி வாய்க்காலில் முடக்கப்பட்டபின் தமிழ் இனவழிப்புப் போர் மண் பறிப்பாகவும் சிங்கள மயமாக்கலாகவும் பவுத்த மயமாக்கலாகவும் கலாச்சார மற்றும் பொருளாதாரச் சீரழிப்பாகவும் இராணுவ மயமாக்கலாகவும் மிக உக்கிரமாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. ஒட்டுமொத்த இனமும் அழிந்து போவதை விட சர்வதேச உதவியுடன் ஜனநாயக வழிமுறைகளில் எதிர்த்துப் போராடுவதைத் தவிர ஈழத் தமிழருக்கு வேறு வழியே இல்லை”.

யூலை 4ஆம் திகதி கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய மண்டபத்தில் தமிழ்த் தேசீயக் கூட்டமைப்பின் கனடாக் கிளையுடன் கனடியத் தமிழ் அரசியல் செயலவை இணைந்து நடத்திய அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய த.தே.கூ.ன் யாழ். மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிவஞானம் ஸ்ரீதரன் இவ்வாறு தெரிவித்தார். இன்று தமிழ் ஈழத்தில் இடம்பெறும் கடுகதி மண் பறிப்பையும் இராணுவ மயமாக்கப்பட்ட சூழ்நிலையில் நில அபகரிப்பு சிங்கள மயமாக்கல் பவுத்த மயமாக்கல் என்பன எவ்வளவு நுட்பமான முறையில் தனது பகுதியான வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தமிழரின் கலாச்சாரமும் பொருளாதாரமும் எவ்வாறு சிதைக்கப் படுகின்றதென்றும் விரிவான புள்ளி விபரங்களோடு உரையாற்றினார். “தமிழினத்தின் அரசியல்த் தீர்வை உடனே பெற்றுவிட வேண்டும் நாமே பெற்றுவிட வேண்டும் என்று சிந்திக்காமல் இருக்கும் மக்களையும் வளங்களையும் காப்பாற்றி அடுத்தடுத்த சந்ததியிடம் போராட்டத்தைக் கையளிக்க வேண்டும். எல்லாம் முடிந்துவிட்டது இனி எதுவும் செய்ய முடியாது என்று சோர்ந்து விடாமல் இளைஞர் சமுதாயத்தை உள்வாங்கி அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களிடம் அவர்களின் எதிர்காலத்தை ஒப்படைக்க வேண்டும் நாம் தொடர்ந்து இந்த அரசுக்கு எதிராக சனநாயக வழிகளில் போராட வேண்டும். மண்பறிப்புக்கு எதிரான அடுத்த போராட்டம் யூலை 7 இல் மன்னாரில் நடைபெறுகிறது. எமது போராட்டத்திற்கு ஆதரவாக புலம்பெயர்ந்த மக்கள் தத்தம் நாடுகளில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.” என்று குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய கீழ் மாகாணப் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சீனித்தம்பி யோகேஸ்வரன் பாரம்பரியமாக முற்றிலும் தமிழ் மாகாணமாக இருந்த கிழக்கு மாகாணத்திற்குள் அம்பாறை (திகாமடுல்ல) என்ற ஒரு புதிய சிங்கள மாவட்டத்தையே உருவாக்கி உள்ளதையும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் இராணுவத் தேவை என்றும் உயர்பாதுகாப்பு வலயம் என்றும் அபிவிருத்தி என்றும் தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதி என்றும் தேசீய தொழிற்சாலை என்றும் பவுத்தப் புனிதப் பகுதி என்றும் பல வடிவங்களில் தமிழர் நிலம் பறிக்கப்படுவதை விலாவாரியாக எடுத்துரைத்தார். “மனித உரிமைகள் மதிக்கப்படாத, ஊடக மற்றும் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்ட, முற்றிலும் இராணுவ மயமாக்கப்பட்ட சூழ்நிலையில் எமது ஒவ்வொரு சொல்லும் செயலும் உளவுத் துறையால் கண்காணிக்கப்படும் நிலையில் அழிந்துகொண்டிருக்கும் எமது இனத்தைக் காப்பாற்ற, மக்கள் உயிரோடு வாழும் நிலையையாவது உறுதிப்படுத்த நாம் எமது உயிரையும் பணயம் வைத்துப் போராடுகிறோம். ஒற்றுமை வேண்டுமென்பதற்காக ஆனந்தசங்கரி சித்தார்த்தன் போன்றவர்கள் எம்மை நாடி வந்தபோது அவர்களையும் இணைத்துக் கொண்டுள்ளோம் என்றால் த.தே.கூ. அதற்காக எவ்வளவு தூரம் செயற்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அழிவின் விளிம்பில் தத்தளிக்கும் எமது மக்களைக் காப்பாற்ற அனைத்து இராஜ தந்திர, சாணக்கிய வழிகளிலும் உளச் சுத்தியுடன் செயற்படுகிறோம். த.தே.கூ ஒரு ஜனநாயக அமைப்பு. உள்ளிருந்தோ வெளியில் இருந்தோ யாரும் விமர்சிக்க உரிமை உண்டு. அதற்காக எங்களை அடிக்குமேல் அடியாக தொடர்ந்தும் அடித்துக் கொண்டே இருக்காதீர்கள். எங்களுக்கு உவத்திரமாய் இருக்காமல் உங்களால்-புலம்பெயர் தமிழர்களால் முடிந்தளவு உதவுமாறு தான் கேட்கின்றோம். த.தே.கூ. ஒருபோதும் அரைகுறைத் தீர்வை ஏற்று மக்களை ஏமாற்றப் போவதில்லை. யாருக்கும் அடிபணிந்தோ விலைபோயோ மக்களைக் கைவிடப் போவதில்லை என்பதை நம்புங்கள். ஒரு சரியான அரசியற் தீர்வுக்காக அனைத்து வழிகளிலும் இறுதிவரை இயன்றவரை போராடுவோம்”. என்று உரையாற்றினார்.



அங்கு உரையாற்றிய த.தே.கூ. கனடாக் கிளைத் தலைவர் திரு. தங்கவேலு உரையாற்றுகையில் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே சிங்களத் தலைவர்களிடமிருந்த சிங்களப் பவுத்த மேலாதிக்கச் சிந்தனைகளையும் தமிழ் மக்களின் கிழக்கு மாகாணத்தில் பட்டிப்பளை என்ற தமிழ் மாவட்டத்தில் சேனநாயக்க சமுத்திரம் என்ற மிகப் பெரும் செயற்கைக் குளத்தை உருவாக்கி அதன் கீழ் 120,000 ஏக்கர் நிலப் பரப்பில் 40 கொலனிகளில் 20,000 சிங்களவர்கள் முதற்கட்டமாகக் குடியேற்றப் பட்டதையும் இந்தக் குடியேற்றத்தின் விளைவாக 1961 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டம் என்ற புதிய மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டதையும் அதில் இருந்து இன்றுவரை நடைபெறுகின்ற தமிழ் நில அபகரிப்பின் விபரங்களையும் தொகுத்து வழங்கினார்.

“பேராசிரியர் சேரன் தொழில்நுட்ப வரைபடங்களுடன் நில அபகரிப்பின் மோசமான நிலைமைகளையும் பல்முகப்பட்ட நுட்பமான முறைகளில் சிங்கள அரசு முன்னெடுக்கும் இன அழிப்பு நடவடிக்கைகளையும் திட்டமிட்ட நில அபகரிப்பின் படிநிலை வளர்ச்சியையும் விளக்கினார். பல நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மக்களால் முன்வைக்கப்பட்ட வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட்டது. திரு. பொன் பாலராஜனும் தனது கருத்துகளை பகிர்ந்துகொண்டார்., த.தே.கூ (கனடா) செயலாளர் திரு. வீர விஜேந்திரா இக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்ததோடு இறுதியில் நன்றி உரையையும் வழங்கினார். திரு. கேதா நன்னித்தம்பி நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார். பெரும் பயன்பெற்ற திருப்தியுடன் மக்கள் வீடு திரும்பினர்.



## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
416.992.8782 / 905.472.8533

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## HOUSE FOR SALE - COLOMBO

கொழும்பில் அழகிய தொடர்மாடிகள் அதி நவீன வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. 2 அறைகள், 3 அறைகளுடன் மொத்தம் 3 இடங்களில் (Temples Road, Samundra மாவத்தை, College Ave.) மொத்தமாக 70 வீடுகள் விற்பனைக்கு உண்டு. (Sea Side view & Land side view) உங்களுக்கு பிடித்தமான முறையில் வீட்டு வேலைகள் முடித்துத்தரப்படும். (GYM, Roof Top BBQ மற்றும் பல). உங்களுடைய வீடுகளை பதிவு செய்து உங்கள் முதலீட்டை உறுதிப்படுத்துங்கள்.

kulagan: **647.880.1416**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய ரொறொன்ரோவை சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.918.5520

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்தான 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.831.4772

## RENOVATION SPECIALISTS

- ***Kitchen & Pantry***
- ***Flooring & Tiling***
- ***Basement Completion***
- ***Bathroom improvements***
- ***Deck & Patio***

***Before selling homes for attractive upgrades to get high value in the market or After buying homes for affordable and innovative upgrades***

***We Customize your needs!***

***Contact : Varma (416) 857-9773***

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

## Classes

***MORNINGSIDE & LAWRENCE*** சந்திப்புக்கு அருகில் அனுபவமுள்ள யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட பட்டதாரி ஆசிரியரினால் கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டு, வயலின் மற்றும் தமிழ் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன.

***647.857.1509 / 647.344.5044***

மேலும் பக்கங்கள் 24, 25

## காணி வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் Brown Road இல் கலட்டிச் சந்திக்கு அருகில் 3 பரப்புக் காணியுடன் 5 அறைகள் கொண்ட அனைத்து வசதியும் நிறைந்த வீடு விற்பனைக்கு உண்டு. யாழ். பல்கலைக்கழகம் தொழில் நுட்பக்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி என்பன மிகக் குறுகிய தூரத்தில் உள்ளன.
தொடர்புகளுக்கு: ***416.899.5553***

## ROOM FOR RENT

### *WARDEN & FINCH*

Condo. வில் சகலவசதிகளுடன் கூடிய இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். அருகாமையில் பஸ் வசதியுடன் உடனடியாக இருந்து வாடகைக்கு விடப்படும்.

**தொடர்புகளுக்கு: 647.402.9490**

## HOUSE FOR RENT

### *MIDDLEFIELD & STEELES IN MARKHAM*

*Newly renovated 4 bedroom house for rent. 2 full washrooms. Close to TTC, York transit, shoppers Drug Mart, banks, post office, super Markets, walmart. Enrgy certified. All floors are hardwood & laminated.*

***Contact: 416.857.9773***

## OFFICE SPACE FOR RENT

### *MORNINGSIDE & SHEPPARD*

Real Estate, Mortgage, Insurance offices **போன்றவையும்** Show Room **உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.** ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***

***Pl. Call: Murale - 416.569.4065***

## MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at ***Scarborough & Stouffville***

***Contact: 647.340.9490 / 647.831.0363***

## PRIVATE TUTORING

### *By 25 years experienced teacher*

- Math - Grade 9 – 12 & college & university students
- Pre university students calculus (Summer classes)
- We do computer repair and
- Physics – Grade 11 – 12
- Computer subject Grade 9 – 12


***We do custom application programming for you business (Web base and non web base too)***

Contact: ***Siva M. Easwaramoorthy*** (B.sc. and Computer Programmer)

அழையுங்கள்: ***416.271.8467 / 416.265.9138***


## YOGA - MEDITATION CLASSESS

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்




***GTA Square Mall*** **இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham -*** செல்வ சோதி - ***416.289.2033***

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**

***www.vlambaram.com***

# புங்குடுதீவு மான்மியம்




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப்பிரார்த்திக்கின்றேன்.

ஊர், உறவு, வேர், விழுது, அடையாளம், பூர்வீகம், பாரம்பரியம், தொன்மை, தொடர்புகள், விழுமியங்கள், குடி, குலம், கோத்திரம் என்ற சொற்களும் அதன் பொருளும், உணர்வும், உலக இனங்களிடையே இன்றைய காலப்பகுதியில் அடிக்கடி பேசப்படுவதும் எழுதப்படுவதுமாய் விளங்குவதை நாம் அறிவோம். நமது தமிழ் இனத்தின் முகங்களும் முகவரிகளும் மீள்பார்வை செய்யப்படவும் பேணப்படவும் வளர்க்கப்படவும் வேண்டும் என்ற பேரவா நமது இளைய தலைமுறையினரிடம் தலைதூக்கி நிற்பது பாராட்டுக்குரியதே. இது அரசியல் இல்லை. ஆதிக்க ஆணவ முனைப்பும் இல்லை. இது ஆத்மார்த்தமான, மனித நேயம் சார்ந்த, மனிதம் பற்றிய, வாழ்தல் குறித்த உரிமை உணர்வு பற்றிய விடயமாகும்.

நண்பா!
இன்றைய அறிவியல் உலகம் குடிமை குருதி வழி மரபு குறித்த தேடலையும் ஆய்வினையும் செய்து கொண்டிருக்கிறது. திருக்குறளிலே குடிசெயல் வகை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர், தாம் பிறந்த குடியை, குலத்தை மதித்தல், பேணுதல் பற்றிக் கூறிய கருத்துக்கள் நமது இன்றைய தாகத்துக்கு தண்ணீர் வார்ப்பது போன்றிருக்கின்றது. அந்த அதிகாரத்தின் பத்துக் குறள்களையும் அமைதியாக இருந்து கருத்துடன் படித்துப்பார். நாம் அல்லப்பட்டு ஆற்றாது அழுது புலம் பெயர்ந்த போதும் குடிமைப் பண்பை மறக்காதவர்கள் எத்தகைய இன்னல் வந்தாலும், இடர் வந்தாலும் 'தாதி மனம் நீர் குடத்தேதான்' என்றபடி நமது மனங்கள் நம்முடைய குடி இயல்களைச் சுற்றியே வட்டமிடுகிறது.

இது நமது பிறப்பு வாசி. பிறவிக்குணம். இக்குணம் என்னும் குன்று ஏறிய குலமரபினர் தங்கள் ஊர், உறவு, மண், மனிதர்கள், தேசம், தேசியம், நாடு என்று சிந்தித்துச் செயல்படும் மனிதப்பண்பு உடையவர்களே! நமது இனம் சார்ந்த, மொழி, கலாச்சாரம் குறித்த பதிவுகள் வெளியாகி நமது சென்ற காலத்தின் பழுதிலாத்திறனையும், இனி வருங் காலத்தின் சிறப்பையும் வெளிப்படுத்தி வெளிச்சத்திற்கு கொண்டு வரும் இந்தச் செயல் செயற்கரிய செயல் என்பார் திருவள்ளுவர். செயற்கரிய செயல்களைச் செய்பவர்களைப் பெரியர் என்றும் பாராட்டுகிறார். புலம்பெயர்ந்த தேசத்திலே வேலைப்பழு, குடும்பப்பாரம், நேரச்சிக்கல். காலநிலை நிர்ப்பந்தம் முதலிய நெருக்கடிகளின் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டு, தாயகச்சிந்தனைகளோடும், தாயக மக்களின் இன்றைய வாழ்வு குறித்த கரிசனைகளோடும் இயங்கும் இளைஞர் பரம்பரையினரை நாம் வாழ்த்தி வழிநடத்தி உற்சாகப்படுத்தி ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைந்து பெரும்பயன்தர உதவ வேண்டும். பெரியார் ஆகிய இளைஞர்களை ஆலோசனை கூறி ஆற்றுப்படுத்துவது முதிர்ந்த பெரியார்களின் கடமையல்லவா?



நண்பா!
புங்குடுதீவு பற்றிய ஒரு வரலாற்றுப் புத்தகம் வெளியாகி இருப்பதை நீ அறிவாய். புங்குடுதீவு மான்மியம் என்பது அதன் பெயர். மான்மியம் என்றால் மகிமை, பெருமை, சிறப்பு, உயர்வு என்று பல பொருள்கள் உண்டு. இப்பொருள்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தால் மான்மியம் பிறக்கும். மாண்பு என்பது மனத்தின் எண்ணத்தின் ஏற்றமுடைய செயலின் கோலமாகும். மாண்புடைமைபற்றி திருவள்ளுவரும் குறிப்பிட்டுள்ளனர்.

மான்மியம் என்ற சொல் வடமொழியாதலால் மாண்மியம் என்று மூன்று சுழிபோட்டு தமிழ்ச் சொல்லை உபயோகிக்கலாமா? என்று தமிழ் அறிஞர்கள் சிந்திக்க வேண்டும் என்று அன்றைய வெளியீட்டு விழாவிலே உரையாற்றும் போது சொன்னேன். மான்மியம் என்ற வடசொல்லை தமிழோடு கலத்தல் தவறில்லை. வடமொழி ஆக்கம் பற்றி தொல்காப்பியரும், நன்னூல் ஆசிரியர் பவனந்தி முனிவரும் கூறியவைபற்றிச் சிந்தித்துப்பார். ஏற்கனவே வித்துவான் FXE.நடராஜா எழுதிய 'காரைநகர் மான்மியம்' என்ற நூல் வெளியாகியுள்ளது. மட்டக் களப்பு மான்மியம் என்ற நூலும் உண்டு.

வதந்தி வேறு. வரலாறு வேறு. ஒருவர் இருவரால் முகிழ்த்து பலராலும் வளர்த்து படைக்கப்படுவது வரலாறு. வதந்தி என்பது ஒருவரால் உருவாக்கப்பட்டு பலராலும் பரப்பப்படுவது. வரலாற்றிலிருந்தும் வதந்தி புறப்படலாம். ஆயினும் வதந்தியிலிருந்து வரலாறு உருவாக முடியாது. சில சமயங்களில் உருவனாலும் ஆய்வுப்புலம், அகழ்வாராய்ச்சி, நிகழ்வாராய்ச்சி என்று தோண்டித் தோண்டி உண்மையை கண்டு பிடித்துவிடும்.


நண்பா!
ஒருவர் கறுப்புக் கறுப்பாய் சத்தி எடுப்பதைப்பார்த்த இன்னொருவர் கணிப்புப்பிசகாமல் காகம் காகமாய் சத்தி எடுத்தார் என்று சொல்ல இது ஒருவதந்தியாகப் பலராலும் பரப்பப்படும். வயிற்றுக்குள் காகம் எப்படிப்போகும்? என்ற சிந்தனையும் ஆய்வும் கறுப்பு நிறத்திரவம் கக்கலில் காகமாய் தெரிந்திருக்கிறது என்று கண்டு பிடித்துவிடும். புங்குடுதீவு மான்மியம் என்ற மகிமை நூல் அந்த ஊரின் உள்ளடகத்தை, வரலாற்றை, வாழ்வியலை வெளிக்கொண்டு வந்திருக்கிறது. வரலாறு உருவாகி வளர்ந்தமகாலத்தில் வாழ்ந்தவர்களும், வாழையடி வாழையாய் வந்தவர்கள் கேட்டு வைத்திருந்த செய்திகளும் அறிவாய், அனுபவமாய், ஆவணமாய் பதிவாகியுள்ளது. இது புங்குடுதீவின் வரலாற்றுப் பெட்டகம். இந்தப் பெட்டகத்துக்குள் பல பொக்கிசங்கள் பொதிந்து கிடக்கின்றன. கல்விக் கூடங்கள், ஆலயங்கள், கிராம மன்றங்கள், திருவிழாக்கள், கலைவிழாக்கள், கல்வியாளர்கள், கடமையாளர்கள், சான்றோர்கள் நூல்கள், இதழ்கள் என்று பதிவுப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. அந்தக்காலத்து வீடுகள் சிலவற்றில் பெட்டகம் என்ற பெரியமரப்பெட்டி பெரிய இடத்தைத் தனதாக்கி கொண்டு வீட்டை ஆட்சி செய்ததை மறந்திருக்கமாட்டாய். தயிலாப் பெட்டி வேறு. பெட்டகப் பெட்டி வேறு. மாறாட்டமடையாதே. பெட்டகத்திற்குள் நகைகள், காணி உறுதிகள், பட்டுடுப்புகள், பவளப் பாத்திரங்கள், வேறு விலைமதிப்புள்ள பொருட்கள் நிறைந்து கிடக்கும். அவற்றில் சிலவற்றை வெளியில் எடுக்கப் பெருமுயற்சி வேண்டும். பெட்டகத்தின் மூடியை திறந்து பிடிக்க இரண்டுபேர் பெட்டகத்துக்குள் இறங்கி பெரியவர்கள் சொல்லும் பொருளைத் தேடி எடுப்பதற்கு ஒரு சிறுவனோ, சிறுமியோ தேவை. இது போன்ற ஒரு பெட்டகமாய் தோன்றும் பொத்தகமே 'புங்குடுதீவு மான்மியம்' என்ற புத்தகம். இப்புத்தகத்தை தொட்டுப் தூக்கப் பெட்டகத்தின் நினைவுவரும்.

ஒரு கோயிலிலிருந்து வெளிவந்த வீச்சு, ஒரு கல்விக்கூடத்திலிருந்து வெளிவந்த வீச்சு, ஒரு வைத்தியர் வீட்டிலிருந்து வெளிவந்த வீச்சு, ஒரு வைத்தியர் வீட்டிலிருந்து வெளிவந்த வீச்சு, ஒரு ஆசிரியர் வீட்டிலிருந்து வெளிவந்த வீச்சு எல்லாம் ஒரு சமூகக்கட்டமைப்பை உருவாக்கின. மக்களைச் சீர்மைப்படுத்தின. அந்தச் சீர்மையின் வரிசையை முடிந்த அளவு திரட்டிச்சேர்த்து உருவாக்கிய புங்குடுதீவு மான்மியத்தின் பக்கங்கள் எழுநூறுக்கும் அதிகமானவை.

நண்பா! ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியையும் சொல்லுகிறேன். புங்குடுதீவு மான்மியத்தைப் படித்துப்பார்த்து விட்டு நான் இருந்த இருக்கையில் வைத்து விட்டு என் அறைக்குள் போய்விட்டேன். அதைத் தூக்கிக் கொண்டுவந்த என் ஏழு வயதுப் பேத்தி முக்கி முக்கி கொண்டு வந்தாள். புத்தகத்தோடு வந்தவள் இது என்ன தாத்தா? என்று கேட்டாள். This is a Book என்றேன். அவள் This is Nata Book என்றாள். Then what என்றேன். அவள் "Book Book... Book Book" என்று மூச்சை நான்கு முறை இழுத்து விட்டபடி சொன்னாள். அவள் Book என்று தெரிந்து வைத்திருந்த உருவத்திலும் பார்க்க இந்த மான்மியத்தின் பிரமாண்டமும், கனதியும் அவளை வியக்க வைத்திருக்க வேண்டும்.

இந்த நூலை உருவாக்கப் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினர் பட்டபாடு ஒரு கோடி. பாடுபட்டபாடு இன்னொரு கோடி. நடிகர் சிவகுமாரின் மகன் சூரியா உச்சரிக்கும் ஒருகோடி நினைவுக்கு வருகிறதா வரட்டும். இந்த நூலின் பதிப்பாசிரியர் துரை ரவீந்திரன் சுந்தரராம சாமியின் படைப்புலகம் நூலுக்குப் பதிப்பாசிரியராய் விளங்கிய இராஜமார்த் தாண்டனை நினைவுபடுத்துகிறார் என்பது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.

வேறு என்ன?
பிறபின்பு



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)


LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# "மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்"

பாண்டி நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வார், ஸ்ரீ நாராயணனுக்கு மலர்மாலை சார்த்த உதவும் பூமரங்களை நாட்ட அமைத்த நந்தவனத்தில் பாத்தியமைக்கும் நிலத்தை கொத்திய வேளையில் திருமகள், பூமகளின் அம்சமாய் பெண்குழந்தை ஒன்று ஆடித்திதிங்கள் வளர்பிறையில் பூரநட்சத்திரத்தில் தோன்றியது. இக்குழந்தையைக் கண்ட பெரியாழ்வாரின் உள்ளத்திலே களிப்பு பொங்கிப் பெருகியது. அம்மகவை அன்போடு எடுத்து வந்து, தம்குழந்தையாகப் பாவித்து கோதை என்று பெயரிட்டு சீரோடும் சிறப்போடும் வளர்த்து வந்தார்.

இளம் பருவத்திலேயே இறையுணர்வு மிக்க கோதை நீலமேனி நெடுமால் பெருமானிடம் எல்லையில்லாத பக்தி கொண்டிருந்தார். இப்பக்திப் பெருக்கால் அப்பெருமானையே மணம் செய்து கொள்ளவும் விரும்பினார். காலமெல்லாம் எம்மெருமானின் கருணையை எண்ணிக் களிப்பும் வியப்பும் கொள்ளுதலும் ஏற்றிப் போற்றித் துதித்துப் புகழ்தலும் இவரது செயல்களாக இருந்தன.

பெரியாழ்வார் பெருங்கோயில் பெருமானுக்கு சாத்தும் பொருட்டு மலர்மாலை கட்டி வைப்பார். அவர் இல்லாதபோது, கோதை அத்திருமாலையை தன் குழலிலே தரித்தவாறு அப்பெருமானுக்கு தான் நேர் ஒத்து இருக்கின்றேனா? என்று தம்மை பெருமானோடு ஒப்பிட்டு கற்பனையில் திளைப்பார். அழகிய அணிகலன்களை அணிந்து, பட்டாடை உடுத்து, தம்மை ஒப்பனைகள் செய்துகொண்டு எம்பெருமான் நினைவில் தோய்ந்து நிற்பார். தந்தை வந்து



காணுமுன் தாம் குழலில் சூடிய மலர் மாலையை கழற்றி எடுத்து பூங்கூடையினுள் வைத்து விடுவார். நாள்தோறும் கோதையின் செயல் இதுவாகவே இருந்தது. மறைவாக நடக்கின்ற இச்செயலை அறியாத தந்தையார் அம்மாலையை கொண்டு போய் வடபெருங்கோயிலானுக்குச் சார்த்திக் கொள்ள அவரும் அதை விருப்புடன் ஏற்றுக்கொண்டார். கண்ணப்பனின் சுவைத்த இறைச்சியை காளத்தி நாதன் ஏற்றுக்கொண்டதைப் போன்று கோதை சூடிய மாலையை கோவிந்தன் ஏற்றுக்கொண்டான். மாயவனுக்கு சூட்ட இருந்த மலர்மாலையை மகள் கோதை சூடியதை கண்ட பெரியாழ்வார் கோபமுற்று, பெண்ணே இச்செயல் பாவமானது என்று கடிந்து இனிமேல் இச்செயலை செய்யாதே என்று அறிவுரை வழங்கினார். எனவே ஒருநாள் மாலை சூட்டும் பணி தடைப்பட்டது. ஆனால் அன்றிரவு அனந்த சயனப் பெருமான் ஆழ்வார் கனவில் தோன்றி இன்று நீ நமக்கு ஏன் மாலை கொண்டு வரவில்லை என வினவினார். புதல்வியரின் பொருந்தாச் செயலை அவர் அறிவிக்க அவள் சூடிக் கொடுத்த மாலையை நறுமணம் மிக்கது. நமது உள்ளத்திற்கு மிகவும் விருப்பமானது. எனவே அத்தகைய மாலையையே இனிமேல் கொண்டு வருவாய் என அருளிச் செய்தார். வியப்பில் ஆழ்ந்த ஆழ்வார் தனது மகளை திருமகளின் அவதாரமாக எண்ணி அவளுக்கு 'ஆண்டாள்' என்ற பெயரையும், கோவிந்தனுக்கு உரிய மாலையினை தான் சூடிக் கொண்டு பின்பு கொடுத்த காரணத்தால் சூடிக் கொடுத்த 'நாச்சியார்' என்ற பெயரையும் இட்டு அழைக்கலானார்.

ஆண்டாளின் பருவம் வளர வளர அவரது இறைபக்தியும் ஈடுபாடும் வளர்ந்து கொண்டே வந்தன. தமக்கு பொருந்திய காதலனாகக் கருதிய அச்சுதன் மீது காதல் மிக்கவராய் அப்பெருமானை ஒருகணப்பொழுதேனும் மறவாதவராய் கண்ணனது பரிவை எதிர் நோக்கியிருக்கும் ஆயர்குல மங்கையர்போல் தாமும் நோன்பு நோற்று உயிர் தரித்திருந்தார். தமது அக எண்ணத்தையும் ஆர்வத்தையும் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற திவ்விய பிரபந்தங்களின் மூலம் எம்பெருமானிடம் விண்ணப்பம் செய்து வந்தார்.

மணவினைக் குரிய பருவம் வந்ததும் ஆழ்வார் கோதையிடம் அது குறித்து பேச்சு தொடுத்தார். அதற்கு ஆண்டாள் 'மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்' என்று பதிலளித்து பெருமாளுக்குரியவளாக இருக்கின்றேன் என்றார். இது பக்திப் பிரவாகத்தின் உச்சநிலை எனலாம். மானிடர் காதலிலும், தெய்வீகக் காதலிலும் வேதனையும் சோதனையும், மயக்கமும் கலக்கமும், மகிழ்ச்சியும் துக்கமும் இணைந்திருப்பதை காண்கின்றோம். நீலவண்ணனின் நீங்காத நினைவு அவரை வேதனை கொள்ள வைக்கின்றது. இது அவரின் உள்ளத்தின் துயரை வெளிக்காட்டும்

எழில் உடைய அம்மனையீர்! என
அரங்கத்து இன்னமும்
குழல் அழகர் வாய் அழகர் கண் அழகன்
கொப்பூழில்
எழுக மலர்ப் பூ அழகன் எம்மானார்
என்னுடைய
கழல் வளையை தாமும் கழல் வளையே
ஆக்கினனே!

நாரயணனுடைய நல்மணம் நன்றே நிகழும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார் ஆண்டாள். இதனை அவரது இப்பாடல் உணர்த்துகின்றது.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்று ஊத
முத்து உடைத்தாமம் நிரை தாழ்ந்த பந்தற்
கீழ்
மைத்துனன் நம்பி மது சூதனன் வந்து
என்னை
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி
நான்.

அம்மி மிதிக்கக் கண்ட கனா ஆடம்பரமாக நிறைவேறியது. ஆண்டாள் நீலமேனி நெடியோனை வரனாகப் பெற்று ஆண்டாள் தனது ஆழமான அகலாத பக்தியினாலும் மகிழ்ந்தார். அடல் ஆழி கொண்டான். மாட்டு விடாத அன்பினாலும் அவனது தடம் தோள் சேர்ந்து பேரின்பப் பெருநிலை அடைந்தாள். ஆண்டாளின் உள்ளுணர்வும் உறுதியும் எண்ணியதை எய்தியமையும் இன்றைய இளம் வயதினர்க்கு எடுத்துக் காட்டாக அமையட்டும்.



நா. க. சிவராமலிங்கம்


**CONDO. FOR SALE**

**100 Prudential Drive, Scarborough**



- Very Large Three Bedrooms
- Two Washrooms
- Large Living Room and Kitchen
- Close to Kennedy Subway
- Swimming Pool Open 7 Days a Week
- One Parking Spot With the Unit

**416.285.0249 / 416.509.4599**

**50** PARTY HALL EVENT CENTRE MEETING PLACE **AVAILABLE FOR RENT**

**Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

GTA Square Mall (FINCH & MIDDLEFIELD

தொடர்புகளுக்கு: **416.917.6883**

# “தமிழ் குறும்படங்களுக்கென உலக அளவிலான திரைப்பட விழாக்களை முன்னெடுத்தவர்கள் ஈழத்தமிழர்கள்தான்”

## யமுனா ராஜேந்திரனுடன் ரதன் உரையாடல்


**புலம் பெயர் சினிமாவை மிக ஆழமாக கூர்ந்து கவனித்து வருகின்றீர்கள். விமர்சித்துள்ளீர்கள். பல கட்டுரைகளையும் வரைந்துள்ளீர்கள். இப்படங்கள்-குறும்படங்கள் தனித்துவமான ஒரு திரைப்பட மொழியை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா? புலம் பெயர் படைப்பாளிகள் கவனிக்க வேண்டிய விடயங்கள் என்ன?**

உலகிலேயே சினிமாவின் சக்தியை தமிழர்களைவிடவும் வேறு எவரும் அனுபவ பூர்வமாக உணர்ந்திருக்க மாட்டார்கள் என நினைக்கிறேன். தமிழ் சினிமா தமிழகத்தின் ஐந்து முதலமைச்சர்களை உருவாக்கி இருக்கிறது. சினிமாவைப் புறக்கணிப்பவர்கள் தம்மையே புறக்கணித்துக் கொள்கிறார்கள் என்றுதான் நான் சொல்வேன். நிதர்சனம் தொலைக்காட்சியைத் தோற்றுவித்ததும் அதனூடே குறும்படங்கள்-ஆவணப்படங்கள்-முழுநீளப் படங்கள் என உருவாக்கி அதனை நிறுனமயமாக்கியதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தீர்க்க தரிசனம் என்று நான் சொல்வேன். லெனின், மாவோ, பிடல் என எல்லோரும் சினிமாவின் வல்லமையை அறிந்திருந்தார்கள். வேண்டுமானால் இட்லரும் இதனது வல்லமையை அறிந்து கொண்டிருந்தார் எனச் சேர்த்துக் கொள்ளலாம். அது அவரவரது அரசியல் சார்பைப் பொறுத்த விடயம். எவ்வாறெனினும் சினிமா ஒரு மகத்தான கலை மற்றும் தொடர்பு சாதனம். அனைத்துக்கும் மேலாக அது வெகுமக்களை உடனடியில் சென்றடையும் ஊடகம்.

தமிழ் குறும்படங்களுக்கென உலக அளவிலான திரைப்பட விழாக்களை முன்னெடுத்தவர்கள் ஈழத்தமிழர்கள்தான். இலண்டன் சினி சங்கம், விம்பம், கனடா சுயாதீனத் திரைப்படக் கழகம் போன்றன அதனை முன்னெடுத்தன. அதனது வளரச்சி யாக இப்போது பிரான்ஸ் லிப்ட் வரை அது நிறுவனமயப்பட்டிருக்கிறது. இதற்கான சூழல் புகலிடத்தில் நிலவியது. தொண்ணூறுகளில் ஆர்வம் கரைபுரண்டோட குறும்படங்கள் புகலிடத்தில் வெள்ளமெனப் பெருகி வந்தது. கதைப் பொருளில் இருந்த கவனம் ஊடகத் தேர்ச்சியில் இருக்கவில்லை. பிரான்ஸ் அருந்ததியின் முகம், சுவிட்சர்லாந்து ஜீவன் உருவாக்கிய படங்கள் ஊடகத் தேர்ச்சி குறித்த விழிப்பை புகலிடப் படைப்பாளிகளிடம் உருவாக்கின. குறும்படங்களிலிருந்து முழுநீளப்படமாக இப்போது இது வளர்ச்சி பெற்றிருக்கிறது. சதா பிரணவன், லெனின் சிவம், ஐ.வி.ஜனா போன்ற தனித்துவம் மிக்க படைப்பாளிகள் உருவாகி இருக்கிறார்கள். தொழில்நுட்பம், திரைக்கதை, இவை இரண்டுக்கும் ஆதரமான அசலான ஈழத்தமிழர் வாழ்வு சார்ந்த கதைக்களங்கள் என இவர்களது படைப்புக்கள் விரிவு கொண்டிருக்கின்றன.

என்னதான் அதியற்புதமான திரைப்படங்களை எடுத்தாலும் அது பார்வையாளர்களைச் சென்று அடையவில்லையானால் அதற்கான முக்கியத்துவத்தினைப் பெறுவதென்பது கடினம். ஈழத்தமிழர்களின் திரைப்படங்கள் பரவலாகத் தமிழகத்திலும் பிறநாடுகளிலும் திரையிடப்படுவதற்கான மிகப்பெரும் தடைகளாக அரசியல் காரணங்களே இருக்கின்றன. ஈழத்தமிழர்களுக்கிடையிலான அரசியல் முரண்கள், வாழ்வுச் சிக்கல்கள், வன்முறை தோய்ந்த அவர்தம் அன்றாட வாழ்வு, புகலிடத்து அனுபவங்கள் போன்றவை குறித்து வெளியான காத்திரமான ஈழத்தமிழ்க் குறும்படங்கள், முழுநீளப்படங்கள் புகலிடம் தவிர பிற இடங்களை எட்ட முடியாமைக்கு இதுவே காரணம். இவற்றைத் திரையிட வேண்டும் எனும் ஆர்வமுள்ளவர்களுக்கு உள்ள மிகப்பெரும் தடை அரசியல் பிரச்சினைதான். ஈழத் தமிழர் அரசியலில் ஜனநாயக ஆர்வங்கள் அதிகமாகி வரும் புதிய சூழலில் இதற்கான கதவுகள் திறவுபடும் என நம்புவோம்.

**ஈழத் தமிழர்களுக்கு என திரைமொழி உருவாகி இருக்கிறதா எனும் பிரச்சினைக்கு வருவோம். உலகெங்கிலும் திரைப் படத்தினை உருவாக்கும் ஆதாரமான தொழில்நுட்பக் கருவிகள் என்பது ஒன்றுதான். ஒரு சில படத்தொகுப்பு மென் பொருள்களைத்தான் எவரும் தேர்வு செய்ய வேண்டும். பிற்பாடு, தனித்த, பிரத்தியேகமான திரைமொழி என்பது எவ்வாறு உருவாகிறது?**



ஒருவரது வாழ்நிலம், பருவகாலங்கள், சொலவடைகள், உடல்மொழி, அவர்களுக்கே மட்டுமே உரிய தனித்த பிரச்சினைகள், அவர்களைச் சுற்றிய சப்தங்கள், அவர்கள் மட்டுமே எதிர்கொள்ளும் சவால்கள் என்பவற்றை ஒரு சமூகத்தின் படைப்பாளி எப்போது பற்றிப் பிடிக்கிறானோ அப்போதே அவன் தனது சமூகத்திற்கு மட்டுமே உரிய-தான திரைமொழியை உருவாக்குகிறான். ரஸ்யாவின் ஐஸன்ஸ்டைன், கியூபாவின் கிதராஸ் அலியா, செனிகலின் செம்பேன் ஒஸ்மான், வங்காளத்தின் சத்யஜித் ரே, கிரீஸின் தியோ ஆஞ்ஜல பெலோஸ், இங்கிலாந்தின் கென்லோச் போன்றோரிடம் அவர்களுக்கே உரித்தான திரைமொழியை ஒருவர் கண்டடைய முடியும். இந்த நிலையில் இருந்து நோக்கும் போது அருந்ததி, ஜீவன் துவங்கி சதா பிரணவன், லெனின் சிவம், ஐ.வி. ஜனா போன்றவர்களின் திரைப்படங்களில் புகலிட ஈழ சினிமாவுக்கான தனித்த திரைமொழி உருவாகி வந்திருக்கிறது என்று நான் சொல்வேன். இன்னும் கணிசமான குறும்படங்களைக் கொடுத்தவர் எனும் அளவில் சதா பிரணவனின் படங்களில் அது துலக்கமாக இருக்கிறது என்றும் சொல்வேன்.

புகலிட படைப்பாளிகள் கவனிக்க வேண்டிய மிகமுக்கியமானதொரு விடயம் என நான் கருதுவது, பின்னணி இசையை எங்கு பாவிக்க வேண்டும், எங்கு பாவிக்கக் கூடாது எனும் விடயத்தின் அடிப்படைகளை அவர்கள் கவனமாகப் பயில வேண்டும் எனச் சொல்வேன். இதனைப் பயிலுவதற்கான நடைமுறைப் பயிலிடம் என சத்யஜித்ரேவின் திரைப்படங்களை நான் சொல்வேன்.

**புலம் பெயர் இலக்கிய முயற்சிகளையும் நன்கறிவீர்கள். அவற்றின் தரம் பற்றியும் கருத்தியல் வளர்ச்சி பற்றியும் உங்களது கருத்து என்ன?**

புகலிட இலக்கியத்தின் தனித்த ஆளுமைகளாக வருவார்கள் எனக் கருதப்பட்ட கலாமோகன், பார்த்திபன் போன்ற சிறுகதையாசிரியர்கள் அநேகமாக எழுதுவதை நிறுத்தி விட்டார்கள் என்பது ஒரு சோகம். பார்த்திபனது மிக வலிமையான அம்சம் அவரது உரையாடல்கள். பார்த்திபனது எல்லாச் சிறுகதைகளுமே மிகச் சிறந்த திரைப்படத்திற்கான திரைக்கதை அமைப்பைக் கொண்டவை. கச்சிதமான கதை முடிச்சு, சம்பவங்கள், உரையாடல்களைக் கொண்டது அவரது சிறுகதைகள். பார்த்திபனது உரைநடை மிக எளிமையானது. ஆழமானது. யதார்த்தமானது. பாசாங்கற்றது. நேரடியிலானது. பார்த்திபனது குறுநாவல்களும் சிறுகதைகளும் தொகுக்கப்பட வேண்டும் என நினைக்கிறேன்.

புகலிடம் உருவாக்கிய மிகச் சிறந்த புனைவுமொழி கொண்ட, தனித்துவமான சிறுகதையாசிரியன், நாவலாசிரியன் ஷோபா சக்தி. அவரது நாவல்களின் அரசியலுடனும் அவரது அரசியலுடனும் என்னால் உடன்பாடு கொள்ள முடியாது என்பதனை முன்னிறுத்தியபடியே இதனை நான் சொல்கிறேன். அ.முத்துலிங்கத்தின் சிறுகதைகளைவிடவும் அவரது பிற எழுத்துக்களையே நான் அதிகம் விரும்பி வாசிக்கிறேன். கருணாகரமூர்த்தி, அ.இரவி போன்றவர்களையும் நான் வாசிக்கிறேன். கருணாகரமூர்த்தியின் பெர்லின் இரவுகள் தமிழில் வெளியான முக்கியமான அனுபவப் பதிவு என்பது எனது எண்ணம். தேவகாந்தன், சயந்தன், குழந்தைவேல் போன்றவர்கள் முக்கியமான நாவல்களைத் தந்திருக்கிறார்கள். செழியனது வானத்தைப் பிளந்த கதை முக்கியமான வரலாற்றுப் பதிவு. ஈழத்தின் அறியப்பட்ட கவிஞர்களில் பெரும்பாலுமானவர்கள் இன்று புகலிட நாடுகளில்தான் வாழ்கிறார்கள். மு.புஷ்பராஜன், வ.ஐ.ச. ஜெயபாலன், சேரன், இளைவாலை விஜயேந்திரன், சபேசன், ரஷ்மி போன்றவர்கள். புகலிடம் உருவாக்கிய கவிஞர்கள் என என்னால் சிலரைக் குறிப்பிட முடிகிறது. ஆழியாள், திருமாவளவன், சுகன், வாசுதேவன் போன்றவர்கள். சுகனின் அரசியல் மீது எனக்கு ஒவ்வாமைகள் இருப்பினும், தனக்கான மொழி கொண்ட உக்கிரமான கவிதைகளின் சொந்தக்காரர் சுகன் என்பதில் எனக்கு மறுபேச்சில்லை. டி.சே.தமிழன், மெலிஞ்சி முத்தன், அருண்மொழி வர்மன் போன்று காத்திரமாக எழுதுகிற இன்னொரு தலைமுறையினரின் எழுத்துக்களையும் நான் வாசிக்கிறேன். காலம் செல்வம் போன்றவர்கள்தான் புலம்பெயர் இலக்கியம் குறித்து அறுதியாகக் கருத்துச் சொல்லமுடியும் என நினைக்கிறேன்.

தொடரும்...

யமுனா ராஜேந்திரன் சுமார் 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். உலக அரசியல், லத்தீன் அமெரிக்கா, சினிமா, மார்க்சிய விமர்சனம் போன்ற துறைகளில் இவரது நூல்கள் வெளிவந்துள்ளன. புலம் பெயர் தமிழராக இலண்டனில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றார். கோயம்புத்தூர் இவரது பிறப்பிடம். அண்மையில் ரொரண்ரோவில் நடைபெற்ற தமிழியல் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இவர் விளம்பரத்துக்காக பிரத்தியேகமாக அளித்த பேட்டி இது.


## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## வெளிக்கள விருந்துடன் வருடாந்தப் போட்டிகளின் பரிசளிப்பும் விளையாட்டுப் போட்டிகளும்

எமது சங்கத்தின் வருடாந்த “வெளிக்கள விருந்துடன் விளையாட்டுப் போட்டிகளும் - பரிசளிப்பு நிகழ்வும்” July மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வுக்கு எமது பழைய மாணவர்களும் அவர்களின் வாரிசுகளும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம்: ***KID'S TOWN*** L'Amoreaux Park,
3159 Birchmount Road, ***(Birchmount & Mcnicoll)***
Scarborough Ontario.

மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.
***(416) 414.3327 (416) 293.2851 (416) 299.6645***
***(416) 283.5265 (416) 299.5083***

# ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பரிசளிப்பு விழா



புலம்பெயர்ந்த மண்ணில் இன்று அதிக தமிழர்கள் வாழும் இடமாகக் கனடா திகழ்கின்றது. புலம் பெயர்ந்த மக்களின் தாய் மொழியைக் காப்பதில் ஒன்ராறியோ அரசாங்கம் முக்கிய இடம் வகிக்கிறது. ஒன்ராறியோ கல்விச் சபைகளில் தமிழ் மொழி கற்கும் மாணவர்களுக்கான தமிழ் மொழித் திறன் காணல் போட்டி ஒன்றை ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம் சமீபத்தில் நடத்தியிருந்தது. அவர்கள் நடத்திய தமிழ் மொழித்திறன் காணல் போட்டியில் பங்குபற்றிப் பரிசு பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா சென்ற ஞாயிற்றுக் கிழமை 17-06-2012 ஸ்காபரோ பெலாமி வீதியில் அமைந்துள்ள பெரி-யசிவன் ஆலயக் கலை அரங்கத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் மொழித் திறன் காணல் போட்டியில் இவ்வருடம் கனிஷ்ட பாலர் பிரிவு தொடக்கம் தரம் 8 வரையிலான ஒன்ராறியோ கல்விச் சபைகளில் கல்வி கற்கும் சுமார் 1800 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். சென்ற வருடத்தைவிட சுமார் 300 மாணவர்கள் மேலதிகமாகப் பங்குபற்றியிருந்தனர். சுமார் 750 மேற்பட்ட மாணவர்கள் 90 புள்ளிகளுக்குமேல் பெற்று அதிசிறப்புப் பரிசு பெற்றிருந்தனர். குறிப்பாக ரொறன்ரோ கல்விச்சபை, பீல் கல்விச்சபை, நோத்ஜோர்க் கல்விச்சபை ஆகியவற்றில் இருந்து அதிக மாணவர்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். தமிழ் மொழி மீது ஆர்வம் கொண்ட பல முக்கிய பிரமுகர்களும், தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் ரொறன்ரோ கல்விச்சபையிலிருந்தும், ஏனைய கல்விச் சபைகளில் இருந்தும் பல பிரதிநிதிகள் கலந்து கொண்டு இவ்விழாவைச் சிறப்பித்திருந்தனர். ஆர்வத்தோடு தமிழ் மொழித் திறன் காணல் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசு பெற்ற மாணவர்கள் மேடையில் வைத்துப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதைவிட இடையிடையே ஆசிரியர், மாணவர் கலந்து கொண்ட கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்ச்சியைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா தேசியப் பண், அமைதி வணக்கம் ஆகியன இடம் பெற்றன. குமுதினி ஸ்ரீஸ்கந்தராஜாவின் மாணவர்கள் பங்கு பற்றிய வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து சங்கத்தின் உபதலைவர் பொன்னையா விவேகானந்தனின் வரவேற்புரை இடம் பெற்றது. அடுத்து சுசீலா ராஜகுலேந்திரனின் மாணவர்கள் பங்கு பற்றிய அபிநயப்பாடலும், தொடர்ந்து உசா லெட்சுமணனின் மாணவர்களின் அபிநயப்பாடலும் இடம் பெற்றன.

அடுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ரொறன்ரோ கல்விச் சபையைச் சேர்ந்த ஜொலி யங், சரோ ஜெகநாதன் ஆகியோரின் சிறப்புரைகள் இடம் பெற்றன. எங்கள் தாய்மொழியை மட்டுமல்ல எமது பண்பாடு கலாச்சாரத்தையும் புலம் பெயர்ந்த மண்ணில் தொடர்ந்தும் பேணிக்காப்பதையிட்டுத் தாங்கள்

தொடர்ச்சி 39ஆம் பக்கம்






Niru BRAND®
FOOD PRODUCTS
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
நிரு பிராண்ட்
Pure Gingelly Oil
(Sesame Oil)
Kitul Treacle
CHILLI SAUCE
COW GHEE
SPICY COFFEE
CONDENSED
Sweetened Condensed Mi
300ml.
JACK
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

# பூனைக்குட்டியும் புலிக்குட்டியும்

பூனைக்குட்டி ஒன்று தனது வாலினால் தொலைக்காட்சி Remote ஐ அமர்த்திக் கொண்டு இருந்தது. வீட்டில் ஒருவரும் இல்லாததால், அதற்கு தொலைக்காட்சி பார்ப்பது பொழுது போக்காக இருந்தது.

தொலைக்காட்சியில் அப்போது காட்டுப் பூனைகளைப் பற்றிய விவரணச்சித்திரம் போய் கொண்டு இருந்தது. பூனைக்குட்டிக்கு ஆசை உண்டாயிற்று. முழுநாளும் வீட்டுக்குள் இருந்து தொலைக்காட்சியை பார்ப்பதைவிட காட்டுக்குள் ஓடி விளையாடுவது பூனைக்குட்டிக்கு திறமாக தோன்றியது. தொலைக்காட்சியில் அப்போது விளம்பரம் ஓடி கொண்டிருந்தது. பூனைக்கு ஒரு யோசனை தோன்றியது. செம்மஞ்சள் நிறமான அது, கறுப்பு மையை பூசினால், புலிக்குட்டி போல் இருக்கும் என்று நினைத்தது. 'இனி நான் காட்டுக்குள் செல்லமுடியும்' என்றது.

அது அப்படியே செய்தது. கண்ணாடியில் அது தன்னைப் பார்த்தபோது அதில் தெரிவது உண்மை புலிக்குட்டி என நினைத்து பயந்தது. அது, தான் என்று ஞாபகம் வந்தபோது அது மகிழ்ச்சியடைந்தது. பூனைக்குட்டி வெளியே சென்றது. அது பெரிய பாதையை தாண்டி வெகு தூரத்திற்கும், பல நேரத்திற்கும் பிறகு பூனைக்குட்டி நகரத்தின் எல்லைக்கு வந்தது. ஆனால் காடு எங்கோ தூரத்தில்




இருந்தது. இப்படி வீட்டை விட்டு பயணம் செய்யும் யோசனையில் பாதை தவறிவிட்டேன் என பூனைக்குட்டி நினைக்க ஆரம்பித்தது.

திடீரென யாரோ அதை தூக்கியதை உணர்ந்தது. பாதையை தாண்டிப் போனபோது தான் யாரோ Animal Control ஐ அழைத்து இருக்கிறார்கள் என பூனைக்குட்டிக்கு புரிந்தது. அங்கு மிகவும் இருட்டாக இருந்தது. பக்கத்திலுள்ள கூடுகளில் எல்லாம் பூனைகள் இருந்தன. சில காட்டுப் பூனைகள், சில வீடில்லாத பூனைகள் என எல்லாவகையும் இருந்தன. அந்தப் பூனைகள் எல்லாவற்றிற்கும் இந்த பூனைக்குட்டி புலிக்குட்டி அல்ல என்று தெரிந்தது. எனவே அவை பூனைக்கு சில அறிவுரைகள் கூறின.

'காட்டு வாழ்வு ஓடித் திரிந்து விளையாடுவது மட்டும் அல்ல, உணவுக்கு பின்னால் ஓட வேண்டும், வேட்டைகாரர்களிலிருந்தும் ஓட வேண்டும் என கூறின. 'நாங்கள் வாழலாம், ஆனால் உன்னால் முடியாது', பூனைக்குட்டிக்கு தன் தவறு புரிந்தது. அப்போது தன்னுடைய கூடு திறக்கும் சத்தம் கேட்டு திரும்பியது பூனைக்குட்டி. அதன் சொந்தக்காரர் வந்திருந்தனர். பூனைக்குட்டியும் அவர்களுடன் மகிழ்ச்சியுடன் சென்றது.

**நீதி - இக்கரைக்கு அக்கரை பச்சை**



**ஞா. ஆரணி**
அகவை 13

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.


Specializing in Auto Collision Repair
Painting - Body Repair - Mechanical
Car Detailing - All party Insurance Collision Work Accepted




We pay Your Deductible
152 Bullock Dr. Unit 2, Markham, Ontario L3P - 1WR
Mobile Estimate anywhere in GTA
info@grsmauto.com
WWW.GRSMAUTO.COM
905.910.0045 Suraj Siva 416.830.0439

# கடலோரக் காதல் காட்சிகள்

கடலோரக் காதல் காட்சிகள் உண்மையிலேயே நெஞ்சத்தை நெகிழ வைப்பவை. கடற்றொழில் செய்யும் பொருட்டுக் கடலிற் செல்லும் காதலன், காதலி இருவருமே கடலன்னையிடம் வேண்டிப் பாதுகாப்புக்காக காதலன் காதலிக்காகவும் காதலி காதலனுக்காகவும் இரங்கி வரம்வேண்டும் தன்மை அவர்களது உள்ளத்து உணவர்வுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. கடலில் ஏகிய காதலன் தனது காதலிக்கு ஏதும் நிகழக்கூடாது என்பதனை எடுத்துக்கூறும் பாங்கில் கீழ்வரும் பாடல் அமைந்துள்ளது. செவிவழியாகக் கேட்டுப் பாடப்பட்டு வரும் பாடல்களே இவை.

மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத் தீவு போன்ற கரையோரப்பகுதிகளில் இஸ்லாமியர்களும் வாழ்ந்து வரவதோடு கடற்றொழில் செய்வது வழமை. பின்வரும் பாடல் இஸ்லாமியரான காதலன் தனது காதலி எதுவித இடைஞ்சலும் இன்றி வீடு சேரவேண்டும் என்னும் நோக்கோடு மனமிரங்கும் பாடலொன்று இங்கே தரப்படுகின்றது. மயங்கும் மாலைப்பொழுதில் காதலியை வீட்டுக்கு அனுப்புகின்றாள். நாள்முழுவதும் இருக்க விருப்பம்தான். ஆனாலும் பெற்றோர் விடமாட்டார்கள். எனவே அவளைத் தனியாகவீட்டுக்கு அனுப்பவும் விரும்பவில்லை. வாலைக்குமரியல்லவா ஒரு துணைதேவை. எனவே உரத்த குரலில் அவளது தாயைத் துணைக்கு அழைக்கும்படி புத்திமதி புகட்டுகின்றான் காதலன். தனது வருங்கால மனைவிமீது அத்துணை பரிவு, இரக்கம், அன்பு. எனவே அவளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவனது மனம் உந்துவதில் தவறில்லையே! அவனது ஆதங்கத்தைக் கேளுங்கள்:

ஆசைக்கிளியே என்ர ஆசியத்து உம்மாவே
ஓசைக் குரலிலே உங்க உம்மாவைக் கூப்பிடுங்க எனத் துணைக்குத் தாயை அழைக்க வைத்ததோடு நின்றுவிடாமல், அவளின் பாதுகாப்புக்காக அமைதி நிலவவேண்டும். அவள் செல்லும் வழியில் ஏதும் இடையூறு நிகழாமல் இருக்கவேண்டும். அவ்விதம் ஏதும் நிகழ்ந்தால் தனக்கு அந்த ஆபத்தொலியைக் கேட்கும் நிலை இருக்கவேண்டும் என்பதும் அவனது ஆதங்கமாக உள்ளது.

கடலே இரையாதே காற்றே நீ வீசாதே
நிலவே எறியாதே என்ர நீல வண்டுபோய்ச் சேருமட்டும்



எவ்வளவு அழகாகத் தனது காதலியை அங்கம் அங்கமாக ரசித்துள்ளான் என்பது இந்தப்படாலடிகளில் முனைப்புறுகின்றது. ‘என்ர நீல வண்டு’ அவளது கண்களை நீல வண்டுக்கு ஒப்பிட்டுக்கூறும் பாங்கு அவளின் அழகை ரசிக்கும் பரம ரசிகனாக மாறிவிட்டான் என்பதே. அதுமட்டுமன்றி மிகநெருங்கி விட்ட மைத்துனியை எவ்விதம் ‘மச்சியென’ அழைப்பதா? அல்லது ‘மனைவி’ என அழைப்பதா? என்ற சந்தேகம் எழுகின்றது. அதனை அவளிடமே கேட்டு விடலாமா என்று நினைத்து அவளிடமே கேட்டுவிடுகின்றான். இதோ அந்தப்பாடல்.

மாமி மகளே என்ர மருதங்கிளி வங்கிசமே
ஏலங் கராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்

நல்லதொரு அடைமொழி வைத்து அவளை மகிழ்வூட்டுகின்றார். மருதங்கிளி மிக அழகாக பேசக்கூடிய கிளி. மருதமரம் குளிர்மை பொருந்திய மரம் .வயலோரத்தில் நீர்நிலை நிறைந்த இடத்தில் நிற்கும் மராமரம். ஆதில் இருக்கும் கிளிதான் மருதங்கிளி. குளிர்மை பொருந்திய கன்னி எனக்குறிப்பிடுகின்றானோ? அத்தோடு உன்னை நான் கைவிடமாட்டேன் என உறுதிகூறுகின்றான். அதற்காக கடவுள்மீது ஆணையிடுகின்றான். உன்னை நம்பும்படி செய்வதற்கு உறுதி மொழியளிக்கின்றார். என்று நான் உன்னை அடையாவிட்டால் எனக்கு வாழ்வே இல்லை. நீதான் என் வாழ்க்கை, என் உயிர் எனக் கூறுகின்றார்.

கைவிடுவேன் என்ற எண்ணிக் கவலைப்படாதே கண்ணார் அல்லாமேல்
ஆணை உன்னை அடையாட்டி காட்டுப் பள்ளி!

இதற்கு உடனடியாகவே அவளிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை. அவள் என்ன சொல்வாள் பேதை. தாய், தந்தை கட்டுப்பாடு. அவர்கள் எல்லோரும் பார்த்து விரும்பிச் செய்துவைக்க வேண்டியது கலியாணம். ஆனால் அவள் சற்று யோசிப்பதைப் பார்த்து அவன் மனம் வேதனைப்படுகின்றது. என்னைப் பார்த்துப் பதில் சொல்லத் தயங்குவது ஏன், வானத்தைப் பார்த்து என்ன ஏக்கம் உனக்கு என்று கேட்கின்றான்.

சீனத்துச் செம்பே.. என்ர சிங்காரப் பூநிலவே
வானத்தைப் பார்த்து... மச்சி வாடுவது என்னத்திற்கோ?

ஓதிப் படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய்த தீங்கை.. அல்லா எள்ளளவும் ஏற்கமாட்டான்.

தவறு செய்தோர் யாராக இருந்தாலும் இறைவன் மன்னிக்கமாட்டான். தீங்கிழைத்தல் கூடாது. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாழுக்குச் சமம். னவே இறைவன் நின்றறுப்பான் என்று உள்ளத்தில் உணர்வை ஊட்டுகின்றான். உன்னை மணமுடிக்கச் சொல்லி வற்புறுத்துகின்றான். வயலுக்குச் சென்று காவல் காக்கும் காலமதில் அங்கு காவலுக்காகக் கட்டிவைக்கப்பட்டுள்ள கொட்டகையில் படுத்துறங்க உள்ளது ‘பரண்’ எனப்படும். அதில் படுத்துறங்கும் நேரத்தில் நீ வந்து எனது கால்மாட்டில் நிற்பதனைக் கண்டேன். என்கின்றான். அதாவது என் நினைவெல்லாம் நீதான். தூக்கத்திலும் உன்னைத்தான் நினைக்கின்றேன்.

காவற் பரணிற் கண்ணுறங்கும் வேளையிலே

**த. சிவபாலு,** B.Ed. MA.

கண்ணான மச்சி வந்தென் காலூன்றக் கண்டேனே!

எனத் தனது உள்ளத்துணர்வினை எடுத்துக்காட்டுகின்றான். அத்துடன் சும்மாவிடுவதாக இல்லை. உனக்குக் காசு பணம் தேவையானால் நான் தருகின்றேன். தனிமை உன்னை வாட்டும் என்று எனக்குத் தெரியும். ஆனால் உன்னோடு கதைத்துக்கொண்டு பொழுதைக்களிக்க நான் வரட்டா? எதற்கும் உனது சம்மதந்தான் எனக்குத்தேவை. நீ ஆம் என்றால் எல்லாம் சரிதான் என்பதுதான் அவனது எண்ணமாக வெளிக்காட்டுகின்றான்.

காசி தரட்டோமச்சி கதைத்திருக்க நான் வரட்டோ
தூதுவரக் காட்டிடட்டோ இப்போ சொல் கிளியே உன் சம்மதத்தை!

என அவளின் சம்மதத்தைக் கேட்டே விடுகின்றான். காதல் கைகூடும் நிலையினை கிராமியப் பாடல்களில் மிக நயமாகவே சித்தரித்துக் காட்டுகின்ற காட்சி உண்மை யிலேயே நாடகப்பாணியில் அமைந்து உரையாடலாகவே மாறுகின்றது.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com






# நுண்ணுலகியல் 38 குவாண்ரம் பிறந்த கதை


முடிவாக!

சென்ற தடவையில் கைசன்போர்க்கின் உறுதியின்மைக் கோட்பாடு பற்றிப் பார்த்தோம். இத்துடன் எங்களைப் பொறுத்த வரையில் குவாண்டம் பற்றிய விபரங்கள் போதுமானது எனக் கருதிக் கொண்டு முடித்துக் கொள்வோம். இப்பகுதியானது விஞ்ஞானம் தெரியாத விஞ்ஞானிகட்காக விளம்பரத்தில் வந்தது. யாருமே எளிதில் தெரிந்து கொள்ளும் வண்ணமாக, விஞ்ஞானத்தனம் ஏதுமின்றி, கணிதச் சிக்கல்களைத் தவிர்த்து, அரிஸ்ரோற்றலில், டிமோக்கிரசிஸ் காலத்தில் இருந்து எவ்விதம் குவாண்ரம் கருத்து வளர்ச்சி பெற்று வந்தது என்பதை ஒரு கதை வடிவிற் பார்த்தோம். தொடர்ச்சியாக வாசித்து வந்தவர்கள் ‘அட இவ்வளவு தானா?’ எனக் கேட்கக் கூடும். ஆம், இவ்வளவுதான், அடிப்படை.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 111

இவ்வளவையும் அடைவதற்கு விஞ்ஞானிகள் பட்டபாடு, சிந்தனைகள், ஆக்குரோசங்கள், போட்டிகள், ஒவ்வாக் கருத்துக்கள், ஏன் இன்னமும் ஒருபடி மேலேபோய் உயிர்



மாய்ப்பு என்பதும் கூடச் சந்தித்தோம்.

குவாண்ரம் ஆனாது இந்நாட்களில் வெற்றிகரமான ஒரு பௌதீகத்தின் துறையாகும். குவாண்ரம் இல்லாத பகுதிகளே இன்று இல்லை எனலாம். நியூட்டனின் காலத்துச் செவ்வியல் என்பது உண்மையில் குவாண்டத்தினால் தெளிவு படுத்தப்படக் கூடியது. அதனால் சார்புத் தத்துவங்களை எவ்விதம் செவ்வியலின் திருத்தமான வடிவம் என்கிறார்களோ அவ்வாறே குவாண்ரத்தையும் கூறுகின்றார் கள். குறிப்பாக, அலை-துணிக்கை இயக்கம் என்பது எல்லா இயக்கங்களுக்கும் பொருத்தமானது. ஆனால் நுண்ணுலகின் துகள்களிலேயே அவற்றினைத் தெளிவாகக் காணலாம். அல்லாமலும் அவற்றில் செவ்வியலின் முடிவுகள் சரிவராது. ஆனால், சாதாரணமாக உலகளவியலிற்குப் பழக்கப் பட்ட எமது புலன்களினால் செவ்வியலைத் திருத்தமானதாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது. இவற்றிக்கும் குவாண்ரம் முடிவுகளைப் பொருத்திப் பார்த்தால் எவ்வளவு பொருந்துகின்றன என்பது தெரியும். விஞ்ஞானிகள் கோள்களின் இயக்கங்களைக் கூட, இப்போது குவாண்டத்தின் அலை-துணிக்கை அமைப்பில்தான் பார்க்கின்றார்கள். கெப்பிளரின் கோள்களுக்கான இயக்கவிதியின்படி இயக்கங்கள் நடைபெற்றாலும், அக்கோள்களும் அலை வடிவில்தான் பயணப்படுகின்றன என்கிறார்கள். ஆனால் கோள்கள் உலகளவியலில் பார்க்கப்படுவதால், அவற்றின் பருமன் காரணமாக, அவற்றின் அலைவடிவம் தெரிவதில்லை, தவிர்க்கக் கூடிய அளவில் உள்ளது. கைசன்போர்க்கின் உறுதியின்மைக் கோட்பாடானது இன்று எல்லாவிடத்திலும் பிரபலமாகிவிட்டது. சினிமாவாகிலும் சரி, பங்குச் சந்தையாயினும் சரி, சூழல் பற்றிய படிப்பாயினும் சரி, தொலைகாட்சிகள், வானொலிகள் ஆகியவற்றின் செய்திகளாயினும் சரி, உறுதியின்மைக் கொள்கையானது பாவிக்கப்படக்கூடியது என்கிறார்கள். சாதாரண மனிதனொருவர் ஒவ்வொரு நாளுமே கேட்கின்ற தத்துவம் போன்றதாகிவிட்டது இந்த உறுதியின்மைக் கொள்கை.

பேரண்டத்தின் பல விடயங்களுக்குத் தெளிவினைத் தருவது உறுதியின்மைக் கொள்கைதான். பேரண்டத்தின் தோற்றம், பேரண்டத்தினுள் காணப்படும் புலங்களின் தன்மை, வெற்றிடத்தில் ஒளி செல்வது எவ்விதம் என்பவையெல்லாம் குவாண்ரத்தின் உறுதியின்மைக் கொள்கையின் மூலமாகத் தான் விளக்குகின்றார்கள். உயர்வலுக் கணினிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், கைத்தொலைபேசிகள் என்பவை எல்லாம் குவாண்ரம் தொழில் நுட்பத்தின் உதவி யுடனேயே தொழிற்படுகின்றன. ஏறக்குறைய மனிதர்களின் சாதாரண வாழ்க்கையிலே, எங்களுக்கும் தெரியாமலே கலந்து விட்ட குவாண்ரம் பற்றிய ஆரம்ப அறிவினைப் பெற்றுவிட்டோம், குவாண்ரம் பிறந்த கதையின் ஊடாக. சில சிக்கல்கள் உங்களுக்கு தோன்றக் கூடும். விளக்கம் தேவைஎனில் என்னுடன் நேரடியாகவோ அல்லது விளம்பரத்தின் ஊடாவோ தொடர்பு கொள்ளுங்கள். முடிந்தவரையில் தெளிவுபடுத்தலாம்.

குவாண்ரம் பிறந்த கதையின் ஊடாக உங்களுக்கும் எனக்கும் ஒரு பாலம் ஏற்படுத்தித்தந்த விளம்பரம் நிறுவனத்தினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இன்னொரு அழகிய விஞ்ஞானத் தொடரின் ஊடாக மீண்டும் சந்திக்கிறேன்.

‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு www.vlambaram.com

திவ்ய ஆற்றுக்கால் தேவி ஜோதிடம்
ஜாதகம் கணித்தல், திருமணப்பொருத்தம், கல்வி,
குழந்தைப்பேறு, திருமணத் தடை நிவர்த்தி.
அழையுங்கள்: ராம் மீனாட்சி சுந்தரம்
Phone - 416.439.2002
67 Milford Haven Drive,
Scarborough, ON. M1G 3C9 Canada.
Attukaljothidam@gmail.com



# அறிதுயிலியல் (Hypnotism) வளர்ந்துவரும் சிகிச்சை முறை

கடந்த 50 வருடங்களாக உளவியல் துறையில் நடைபெற்று வரும் மாற்றங்களில் ஆராய்ச்சிகளில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ள ஒரு சிகிச்சை முறையே அறிதுயிலியல் எனலாம். அதிகமாக ஹிப்னோட்டிசம் ((Hypnotism) என்று ஆங்கிலத்திலேயே பாவித்து வருகின்றனர். உறக்கப்போலி, மனோவசியம், செயற்கைத்துயில் என்றெல்லாம் வேறு வேறு சொற்களில் பாவிப்போரும் உளர். அறிதுயில் (Hypnotism) என்பதிலிருந்து அறிதுயிலியல் என்பது ஒரு சிகிச்சை முறையாக மாற்றமடைந்துள்ளது. வைத்தியத்திற்கான தேவையையும், முறையையும் புரிந்து கொண்டு இம்முறை பயன்படுகின்றது. வைத்தியத்துறை மட்டு மின்றி சமூகத்தில் பல்வேறு பிரச்சினை களுக்கும் தீர்வு காண்பதற்கு தினமும் இம்முறை பயன்பட்டு வருகிறது. உளப்பகுப்பாய்வு முறையுடன் (Psychoanalysis) தொடர்புடைய இம்முறை இன்று வைத்தியதுறையிலேயே புதிய சாதனையை நிகழ்த்தி வருகின்றது.

Hypnos என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். அதாவது இதற்கு 'நித்திரை' என்று பொருள்படும். வாய்மொழிமூலமாக ஒரு நோயாளியை துயிலாக்கம் செய்து படிப்படியாக அவரது உள்மனதிற்கு சென்று பல விளக்கங்களை பெறுவதே இம்முறையாகும். எமது வெளிமனதிலிருந்து அடிப்படை தகவல் களை பெறமுடிவதில்லை. எனவேதான் உள்மனதிற்கு செல்ல வேண்டியுள்ளது. மிக நீண்டகாலமாக தனிப்பட்டவர்களை வசியம் செய்வது, மாந்திரீகம் செய்வது மூலம் உள்ளத்தின் இரகசியங்களை பெறும்முறை இருந்துள்ளது. ஆனால் சிசிச்சை முறைக்காக அல்லது மருத்துவரீதியில் பயன்படவில்லை. அண்மையான சில காலங்களிலேயே இதன் சிறப்புக்கள் பல உணரப்பட்டன. அண்மையில் Electro Encephalo Gram (EEG) பரிசோதனை களின் மூலம் மூளையின் அலைகள் மூலம் நித்திரைமட்டுமின்றி சில விழிப்புணர்வு களையும் பெறமுடிந்தது. இதிலிருந்தே இம்முறை ஆய்வுக்கு மாற்றமடைந்தது. எமது மூளையில் 100 மில்லியன் நியூரோன்ஸ் உள்ளதென்றால் வியப்பே மேலிடும். இந்த நியூரோன்ஸ் எமது நுண்மதி, சிந்தனை, புலக்காட்சி, காரணங்கள், மனஎழுச்சிகள், அவதானம், தொடர்பு ஆற்றல்கள் போன்றவற்றை யெல்லாம் தீர்மானிக்கின்றன. 'ஆத்மா அழிவதில்லை' என்ற சிந்தனைகளை கௌதம புத்தர், பிளாட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற சில கிரேக்க சிந்தனையாளர்கள், இந்துமகான்கள், இஸ்லாமியப் பெரியோர்கள் அனைவரும் நம்பி வந்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக மத்தியகாலத்திலும், பின்பும் பல



தத்துவங்கள் எழுந்துள்ளன. இன்றும் மனம் பற்றிய ஆய்வு முடிவுறாத நிலையில் உள்ளது. புறமனம், உள்மனம் கூட ஆய்வுக்கு உட்பட்டுள்ளது. எனவேதான் அறிதுயில் பற்றி 30 வரைவிலக்கணங்கள் வரையில் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு வரும் குழப்பமான நிலையிலேயே இன்றும் உள்ளனர். இப்போதும் ஆழ்துயிலியல் நுட்பங்கள், சுய ஆழ்துயில் முறை, ஆழ்துயில் படங்கள் பற்றிய ஆய்வுகள் உள்ளன. உலகெங்கிலும் ஒரு சிகிச்சை முறையாகவும் அதேவேளையில் பணம் சேகரிக்கும் வழியாகவும் கூட இம்முறை பயன்படுகிறது.

1700 இன் பிற்பகுதியில் வியன்னாவை சேர்ந்த வைத்தியர் Franz Anton Mesmer (1734-1815) என்பவர் மிருக காந்தவியல் (Animal Magnetism) என்ற முறையை அறிமுகம் செய்தார். பல நோயாளிகளுக்கு பயன்படுத்தி வெற்றியும் கண்டார். மருந்துகளின்றி வசியதூக்கத்தில் ஆழ்த்தி சிகிச்சை செய்யப்பட்டது. இவரது முறையில் நிபுணர் தனது கண்பார்வையின் வலிமையாலும், சொல்வன்மையாலும், மனோதிடத்தாலும் தன் வசப்படுத்துவதும் அறிமுகமானது. இதுவே மாயாஜாலக் காட்சிகள், மந்திரதந்திரம், கண்கட்டி வித்தை, பில்லிசூனியம், ஏவல், செய்வினை வசியம் என்ற பல்வேறு கலைகளும் வளர உதவியுள்ளது. இவை விஞ்ஞான ரீதியிலன்றி வெறும் தனியாள் திறமையில் மட்டுமே வளர்ந்தன. இப்படியே மந்திரித்து கொடுத்தல், விபூதி மந்திரித்தல், மை போடுதல், ஓலை எழுதுதல், செபித்தல் போன்ற பயிற்சி முறைகளும் சமூகத்தில் புகுந்து கொண்டன. மெஸ்மரை தொடர்ந்து 1815 இல் பிரான்சிய மருத்துவர் டெலியஸ் என்பவர் கட்டுரைத்தல் (Suggestion) மூலமாக பல நோய்களை குணப்படுத்து வார். கூடெட் என்ற மருத்துவர் மெஸ்மரிச் முறையில் உறக்கத்தில் ஆழ்த்தி பற்களைக் கூட வலியின்றி பிடுங்கிக் காட்டினார். இந்த நிலையில் அறிதுயிலியல் துறையில் பெரும் திருப்பத்தினை ஏற்படுத்தியவர் Amboise Augaueste Liebault என்பவராவர். இவர் விஞ்ஞான அடிப்படையில் சிகிச்சை செய்து ஆயிரக்கணக்கானவர்களை குணமாக்கி னார். இதன் பின்னர் சிக்மண்ட் பிராய்ட் என்ற அறிஞர் உளப்பகுப்பாய்வு மூலம் பலருக்கு சிகிச்சையளித்தார். பின்னர் 1914-1918 வரையான உலக யுத்தம் காரணமாக பல ஆயிரம் உள நோயாளிகள் காணப்பட்டனர். இதனால் உறக்கவியலின் தேவையும் அதிகமாயிற்று. ஹிஸ்ரீரியா (Hysteria) என்ற நோய்க்கு நிரந்தர தீர்வாகவும் இம்முறையே இன்னும் பயன்படுகிறது.

அறிதுயிலியல் முறையின் பயன் பாட்டினை அறிந்து கொண்ட உலகின் பல நாடுகள் இன்று வேகமாக ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றன. பல்கலைகழகங்கள், கல்லூரிகள், வைத்தியநிலையங்கள் எங்கும் இம்முறை பயன்பட ஆரம்பித்தது. 1956 இல் பிரித்தானியாவில் இவ்வைத்திய சிகிச்சை முறை சட்டமாக்கப்பட்டதால் பல நாடுகள் ஒரு சட்டரீதியான வைத்திய முறையாக ஏற்றுக் கொண்டுள்ளன. 1958 இல் அமெரிக்காவிலும் இம்முறை சட்டரீதியா யிற்று. மருந்து 20 வீதம் என்றால் மனமே 80 வீதம் என்ற நிலைக்கு மாறியுள்ளதால் மனதுடனான இச்சிகிச்சை வலுப்பெற்று வருகின்றது.

அறிதுயிலியல் முறையில் பல நுட்பங்கள் உள்ளன. இதிலும் Trance Theory தூக்கநிலை கோட்பாடு (1979), Sociological Role Theory - சமூகபங்களிப்பு கோட்பாடு (1979), Task Motivation Theory நோக்க ஊக்க கோட்பாடு (1969) என்பனவாகும். முதலாவது முறையில் விழிப்புணர்வு என்பது ஒருவரது வார்த்தை களால் மாற்றமடையலாம். இரண்டாவது பிரிவில் ஒருவரை அவரது இலக்கினை சமூகத்துடன் ஒன்றச் செய்வது. மூன்றாவது முறையில் ஒருவரது விழிப்புணர்வை பெரிதும் மாற்றாது உறக்கநிலைக்கு உட்படுத்துபவரது சிபார்களை ஏற்றுக் கொள்ள வைத்தல். இப்படி பல கோட்பாடுகள் உள்ளமையால் இது இன்னும் விரிவடைந்து செல்கின்றது.

இன்றைய சூழ்நிலையில் இச்சிகிச்சை முறை மருத்துவத்தின் பல துறைகளுக்கும் பயன்படுகிறது. Roy Rudolf என்பவர் Hand Book of Hypnosis for Professionals என்ற ஒரு கைநூலை 1980 இல் வெளியிட்டு இத்துறைக்கு வலுவூட்டினார். எவ்வகையான நோய்களுக்கு இது பயன்படும் என்பதனையும் இதில் விளக்கியுள்ளார். மதுபோதை, பிள்ளைகளது இரவுப்பயம், தொடர்ச்சியான ஒற்றைத்தலைவலி, போதைவஸ்து பாவனை, நித்திரையில் சிறுநீர் கழித்தல், பாலியல் அதிருப்தி, ஆண்மைக்குறைவு, நித்திரையின்மை, களவெடுத்தல், நகம் கடித்தல், அளவுக்குமீறி உண்ணுதல், மனோநிலைப் பாதிப்பு, உளரீதியான நடுக்கம், பாலியல் ஒழுங்கீனங்கள், தற்கொலை உணர்வு, ஞாபகமறதி, தசைப்பிடிப்பு போன்ற பல நோய்களுக்கு வழிகூறியுள்ளார்.

இச்சிகிச்சை முறை மிக விரைவானது, சுலபமானது, சிக்கனமானது என்பதே இன்றுள்ள வைத்தியர்களது முடிவாகும். அறிதுயிலியல் சிகிச்சை (Hypnotherapy) என்பது நரம்பியல் நித்திரை (Nervous Sleep) என்றே முன்பு கொள்ளப்பட்ட தெனினும் இன்று கட்டுரைத்தலுக்கு உட்பட்ட ஓய்வுடன் கூடிய உயர்நிலை கற்பனைக்கு கொண்டு செல்லப்படுவதே வழக்கமாகும். 1960 இல் Milton Erickson என்ற வைத்தியர் இதுபற்றி பல நூல்களை எழுதியுள்ளார். இவரது முறையை 'Ericksonian Hypnotherapy' என்று அழைப்பர். இதன்பின்பு குற்றவாளியை கண்டுபிடித்தல் (Forenics), விளையாட்டு, கல்வி, உடற்சிகிச்சை, உடல் புத்தாக்கம் போன்ற பலவற்றுக்கும் பயன்படுகிறது. அனுமதி பெற்றி வைத்தியர்கள், உளவியலாளர்கள், உளச்சிகிச்சை யாளர்கள் இதில் ஈடுபட்டு உளச்சோர்வு,



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 38ஆம் பக்கம்


**AYURVEDA**
**MASSAGE GOOD FOR HEALTH & PAINS**
Back, Leg, Shoulder, Cervical, Heel, Knee and Foot Pain Stiff Neck, Severe Headacke, Migraine, Insommia Weight Problems, Sciatica, Slipped - Prolapsed Disc, Solar Piexus, Disorders Of Joints, Bones And Muscles.
*Women For Women, Men For Men - 416.434.9251*

# நான் ஈ - திரை விமர்சனம்




தமிழ், தெலுங்கு, மலையாளம் என்று மூன்று மொழிகளில் வெளியாகியிருக்கும் படம், 'மகாதீரா' (மாவீரன்) திரைப்படத்தின் மூலம் தமிழ் ரசிகர்களிடையே ஏற்கெனவே நன்கு அறிமுகமான எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கும் படம். அறிவியல் கதை, முழுக்க கிராபிக்ஸ் காட்சிகள்... எல்லாவற்றையும்விட தொடர்ச்சியான விளம்பரங்கள் ஏற்படுத்தியிருக்கும் எதிர்பார்ப்பு என ஏகப்பட்ட பலங்களுடன் வந்திருக்கும் படம் 'நான் ஈ'

ஆனால், கதை ரொம்ப எளிமையானதுதான். கதாநாயகன் - கதாநாயகி காதல் ஒருபக்கம், இன்னொரு பக்கம், கதாநாய கியை அடைய நினைக்கும் வில்லன். தன் எண்ணத்துக்கு தடையாக இருக்கும் கதா நாயகனைக் கொன்றுவிடுகிறார், வில்லன். இறந்த கதாநாயகன், ஈயாக வந்து வில்லனைக் கொன்று கதாநாயகியைக் காப்பாற்றுகிறார். இதுதான் கதை.

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

கதாநாயகனாக நானி நடித்திருக்கிறார். படம் துவங்கிய அரை மணி நேரத்திற்குள் செத்து விடுகிறார். இதிலும் இவர் வரும் காட்சிகள் இருபது நிமிடங்கள்தான். ஆனாலும், மனதில் பதிகிறார். வில்லனால் சாகும் போது பரிதாபத்தை (குறிப்பாக பெண்களிடம்) அள்ளிக்கொள்கிறார்.

கதாநாயகி, சமந்தா. அப்படி ஒரு அழகு. அழகும் நடிப்பும் சேர்ந்த அரிய நடிகைகளுள் ஒருவராக வலம் வர



வாய்ப்புகள் அதிகம். காதலனை அலைய விட்டு வேடிக்கை பார்க்கும் 'சராசரி' பெண் கதாபாத்திரம்தான். ஆனாலும், தனக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகளை வீணாக்காமல் நன்றாகவே நடித்திருக்கிறார்.

வில்லனாக சுதீப்... கன்னட ரகுவரன் என்று இவரைச் சொல்லலாம். இவர்தான் படத்தை அதிகமாக ஆக்ரமிக்கிறார். பெண்களை வசியம் செய்யும் தொழிலதிபராக அட்டகாசமாய் பொருந்துகிறார். ஈயால் இம்சைக்கு ஆளாகும் போதெல்லாம் சுதீப் தரும் உணர்ச்சி வெளிப்பாடு நன்று. ஈ, பெட்ஷீட்டுக்குள் நுழைந்து இவரை இரவு முழுவதும் தூங்கவிடாமல் செய்து, இறுக்கப் போர்த்திக்கொண்டு படுக்க வைத்து, காலையில் பிந்தி எழச் செய்ய வைக்கும் காட்சியில் ஈயைவிட பிரமாதப்படுத்தியிருக்கிறார் சுதீப்! கண்களில் தெரியும் வில்லத்தனம், காமம், சமந்தாவை அடையத் துடிக்கும் வெறி, ஈயினால் பாதிப்பு வந்துவிடுமோ எனக் கண்களில் தெரியும் பயம்... என்று மனிதன் பிய்த்து உதறியிருக்கிறார்.

சந்தானம், படத்தின் வியாபாரத்துக்காக நுழைக்கப்பட்டிருக்கிறார். ஆரம்பத்தில் ஒரு காட்சியில் வந்துவிட்டு, மீண்டும் இறுதியில் படம் முடியும்போது இன்னொரு காட்சியிலும் வருகிறார்.

கிராபிக்ஸ் ஈ இந்தப் படத்தில் ஒரு முக்கியப் பாத்திரம். சுதீப், சமந்தாவை

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

SPACE FOR RENT
Garage Space For Rent
BULLOCK DRIVE & MARKHAM
(close to Markville Mall)



OFFICE SPACE FOR RENT
Front facing main road - Full windows wall to wall. $800 per month all inclusive.

Fully Zoned for **Auto Mechanic Shop**. Comes with brand new 2 Hoists & Compressor For sub-lease shared body shop. Front facing main road. $2300 + 40% utilities per month.

SURAJ: 416.830.0439

நகைச்சுவைத் தொடர் 250

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





பேசப்படாத அனுபவங்கள்

இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரம் தொடர்ந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணம் என்பது போல இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு, அடாவடி, கைது, சித்திரவதை சிறைகளில் தமிழர் முக்கியமாக இளைஞர்கள் (அன்றல்ல இன்றும்கூடத்தான்) தொடர்ந்ததால் நாட்டை விட்டு தமிழ் மக்கள் வெளியேறும் படலம் ஆரம்பித்தது.

வெளியூர்ப் பயணங்கள் கூட செய்யாதவர்கள் தினம் தினம் தரைவழியாகவும் (அதாவது தலைமன்னாரிலிருந்து ராமானுஜம் கப்பல் மூலம் ராமேஸ்வரம் சென்று பின்னர் பஸ் ரெயின் மூலம் மட்ராஸ், டில்லி அடுத்த நாடான பாகிஸ்தான் தொடர்ந்து லாகூர், கராச்சி, இஸ்லாமபாத், குவெட்டா, சகிடான் ஊடாக ஈரான் சென்றவர்களும் திக்குத்திசை தெர-ியாமல் ஆப்பிட்ட பஸ்களில் ஏறி அப்கானிஸ்தானுடாக கடல்வழியாகவும் ஆகாயமார்க்கமாகவும் முகவர்கள் உதவியுடன் செல்ல ஆரம்பித்தனர்.

ஆடிக்கலவரத்துடன் பல உயிர்கள் அடங்கின. உடமைகள் அழிந்தன. வீடு வாசல் சொத்து சுகங்கள் தீக்கிடப்பட்டது. தமிழர்கள் உயிரோடு ரயர் போட்டு துடிக்கத் துடிக்க தீயிலிடப்பட்டனர்.

லங்காபுரி அனுமாரினால் தீக்கிரையாக்கப்பட்டது என இலக்கியச்சுவையுடன் இராமாயணத்தில் படித்ததை விட சொந்த உறவுகள் கண்முன் எரிந்ததை இன்றுவரை சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.



தொடர்ந்து கூட்டங்கள் மேடைநிகழ்ச்சிகளுக்கு தடை. ஊரடங்கு சட்டங்கள் கால வெள்ளத்தில் எல்லாம் மாறத் தொடங்கியது.


• • •

உலகர், ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் ராசம்மாவுடன் முணுமுணுத்துக் கொண்டிருப்பதை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தார். ராசம்மாவை மத்தியஸ்தம் வைத்துத்தான் ஏதோ கதைக்கிறார்கள் என்பது மட்டும் புரிந்தது.

அரசியல் கதைக்கமாட்டார்கள். சமயம், தத்துவம் கதைக்க மாட்டார்கள். என்ன இருந்தாலும் முடிவுரைக்கு உலகரிடம் வருவார்கள். உலகர் ஆடிப்பிறப்பை மனதுள் நினைத்தார்.



"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே! கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே" என்று சொல்லும்போது வாய் ஊறத்தான் செய்கிறது. ஆடிப்பிறப்பு லீவில் நின்றுவிட்டு மீண்டும் பள்ளிக்கூடம் செல்லும்போது இரண்டு விடயங்களில் வயிற்றைக் கலக்கும். கொழுக்கட்டையிலும் கூழிலுமுள்ள பயறு வயிற்றை கலக்கும். அடுத்தது ஆடிப்பிறப்பைப் பற்றி கட்டுரை எழுத வேண்டும். நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் பாட்டுக்களைப் பாடிக் காட்டவேண்டும். அதுவும் தமிழ் வாத்தியாருக்கு கோபம் வந்தால்



(எங்களைப் போன்றோருக்கு படிப்பிக்கும் போது நிச்சயம் கோபம் வரும்) அவர் சொல்லுவார் சோமசுந்தரப் புலவர் உங்களைப் பற்றியும் பாடியிருக்கிறார்."

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று காவல் புரிகின்ற சேவகா" என சோமசுந்தரப் புலவர் கத்தரி வெருளி பற்றி எழுதிய பாடலைப் பாடிக்காட்டுவார்.

ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட புளோர் செல்லம்மாவும் போடும் சத்தம் சற்று கூடத்தொடங்கியது. உலகண்ணை இதைக்கேழுங்கோ சினேகாவும் பிரசாந்தும் கலியாணம் கட்டிக் கொஞ்சநாள். அதுக்கிடேலை பிரியினமாம் எண்டு ரி.வி.யிலை கெட்லைன் போனது. உடனே செல்லம்மா கோவில் குளமெண்டு இந்தியாவுக்கு வக்கேசன் போன பிறிம்லி மீனாவுக்கு ரெலிபோன் அடிச்சு மீனா சினேகாவுக்கு என்ன நடந்தது, நித்தியானந்த சுவாமியை எங்கை வைச்சு பொலிஸ் பிடிச்சது எண்டு கேட்க அவ பேசிப்போட்டு ரெலிபோனை வைச்சிட்டா. ஏன் மீனா பேசினவவெண்டு உலகர் கேட்க ஆட்டிலறி அன்னம்மா விழுந்தடிச்சுக்கொண்டு சொன்னா உலகண்ணை விடியப்பறம் 3 மணி கோவம் வருமோ..? வராதோ? கோபமும் சிரிப்பும் கலந்து சொன்னா ஆட்டிலறி அன்னம்மா. லப்ரொப்பில் வெல்லுங்கள் ஒருகோடி பார்த்துக்கொண்டிருந்த ரூபி சிரிச்சுக்கொண்ட சொன்னா அது அன்னம்மா அன்ரி ஆடித்தள்ளுபடி. ரெலிபோன் விளம்பரத்துக்கு அவை ரண்டுபேரும் பிரிஞ்சு போறமாதிரி ஒரு வசனம்...அதுதான்.





ஒவ்வொரு மனிசருக்கும் அவையவையின்ரை பிரச்சினை. அன்னம்மாவுக்கு உது பெரிய பிரச்சினை.

உனக்கு மன அமைதி வேண்டுமாயின் யாருடைய குறையையும் காணாதே உன் குறைகளையே பார்.

- அன்னை சாரதா தேவி



• • •

ஞாபகம் வருதே....ஞாபகம் வருதே

யூலை 16---30...

16. ஆடிப்பிறப்பு (ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே. - நவாலியூர் சோமசுந்தரப்புலவர்)
16. இன்றும் காற்றினிலே வரும் கீதம். இசைத்திலகம் டி.கே.பட்டம்மாள் நினைவுதினம். (பிறப்பு-1919 – மறைவு 2009)
18. ஆடி அமாவாசை. (தந்தையொடு கல்விபோம், தாயொட அறுசுவைபோம்)
18. இத்தாலி ரோம் நகரில் வர்த்தக மையத்தில் பெரும் தீ. அப்போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தான்
19. சுவாமி விபுலானந்தர் நினைவு தினம் (1947)
20. அன்னை சாரதா தேவி நினைவு தினம் (சுவாமி ராமகிருஸ்ணரின் மனைவி) (பிறப்பு-1853- மறைவு 1920)
21. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவு தினம் (பிற-1927----மறைவு 2001)
27 தங்கத்தாத்தா-சோமசுந்தரப்புலவர் நினைவுதினம்
30. வாக்கிய பஞ்சாங்க கணிதர் இரகுநாதையர் (1969) நினைவுதினம்
கறுப்பு யூலை (1983) இனக்கலவரம்









# அறிதுயிலியல்....

36ஆம் பக்கத்தொடர்ச்சி

பதட்டம், உணவு உண்ணும் ஒழுங்கீனம், நித்திரை கோளாறுகள், யுத்தத்திற்கு பின்னான மனஅழுத்தம் என்பவற்றிற்கு சிகிச்சையளிக்கின்றார்கள். Tigerwood எனப்படும் சர்வதேச விளையாட்டு வீரர் கூட தனது போட்டி இறுதி நிகழ்வுகளில் இச்சிகிச்சை பெற்றுள்ளார். 1963 இல் அமெரிக்க குடியரசு தலைவர் ஜோன்.எவ். கெனடியை ஆஸ்வால்ட் சுட்டுக்கொன்றான் என்றும், அவரை பல சித்திரவதைகள் செய்தும் உண்மையை ஒத்துக்கொள்ளவில்லை. இந்தியாவிலிருந்து சென்ற உளமருத்துவ நிபுணர் அவரை தனது வசியமான கட்டுப்பாட்டில் கொண்டுவந்து கட்டுரைத்தல் மூலம் உண்மையை வரவழைத்தார். இந்த நிகழ்வு பலரையும் வியக்கவே வைத்தது.

நவீன அறிதுயில் சிகிச்சை என்பது உளச்சிகிச்சையியலில் இன்று பயன்படுகிறது. பயம் அல்லது பீதி (Phobias), ஒன்றுக்கு அடிமையாகுதல் (Addictions), பழக்க கட்டுப்பாடு (Habit control), நோவைச்சீர்த்திருத்தல் (Pain Management), ஓய்வு எடுத்தல் (Relaxation), தோல் நோய்கள் (Skin Diseases) சத்திரசிகிச்சை நோயாளர் (Surgical Patients), விளையாட்டுத் திறமைகள், உடற்பாரத்தை குறைத்தல், தீராத வயிற்றுக் கோளாறு (Irritable Abdominal Syndrome) என்பவற்றிற்கு உதவுகிறது.



இன்று சுயஅறிதுயில் முறை Self Hypnosis புதிதாகி வருகின்றது. இது மேடைப்பயம், புகைபிடித்தலை விடுதல், உணவுப் பழக்க மாற்றம், மன அழுத்தம் போன்றவற்றை தீர்க்க உதவுகிறது. சிலவேளைகளில் இதற்கு மற்றவர்களின் உதவியும் தேவைப்படலாம். அத்துடன் மேடை அறிதுயில் (Stage Hypnosis) முறையும் உருவாகியுள்ளது. பார்வையாளர்களில் சிலரை அழைத்து மேடையில் நித்திரை கொள்ள வைத்தலே இம்முறை. சில கேளிக்கை நிகழ்வுகளில் இது இடம் பெறுகிறது. மகப்பேறு நடைபெறும் போது வலியை குறைப்பதற்காக 'Hypnobirthing' என்ற முறையும் அறிமுகமாகியுள்ளது.

கனடாவில் ரொறொன்ரோ மோபஸ் சிகிச்சைநிலையம் (Toronto Morphs Clinic), ஒன்ராரியோ அறிதுயிலியல் நிலையம் (Ontario Hypnosis Centre), ரொறொன்ரோ அறிதுயில் சிகிச்சை நிலையம் (Clinical Hypnosis Toronto) போன்றவை இவற்றில் தீவிரமாக இயங்கி வருகின்றன. உலகெங்கிலும் இதற்காக பல அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

பல ஆண்டுகளாக பல்வேறு ஆய்வுகளுக்கும், பரிசோதனைகளுக்கும் உட்பட்டு பல்லாயிரக்கணக்கான உள உடல் நோய்களை தீர்ப்பதிலும், உளவியல் நோய்களை அறிவதிலும் பெறுமதி மிக்க முறையாகவும் சமூக நெறி பிறழ்விலிருந்து விடுபட உதவும் நிவாரணியாகவும் இவ் அறிதுயிலியல் முறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

# ஒன்ராறியோ..

31ஆம் பக்கத்தொடர்ச்சி

பெருமைப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டனர். அதைத் தொடர்ந்து ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் தமிழ் பெற்றோர்களின் நேரடி ஆலோசனையைப் பெறுவதற்கான பெற்றோர் சங்கம் ஒன்றை அமைத்துச் செயற்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து பத்மராணி பஞ்சாட்சரத்தின் மாணவர்களின் பல்லிசை நடனம் இடம் பெற்றது. அடுத்து பாக்கியா




**- மணிமாலா -**

சங்கத்தலைவர் எழுத்தாளர் குரு அரவிந்தனின் உரை இடம் பெற்றது. அவரது தலைமை உரையில் இனிவரும் காலங்களில் ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள் கலந்து கொள்ளும் ஒன்றுகூடலுடலான விளையாட்டு போட்டிகள் நடத்த சங்கம் ஆலோசித்திருப்பதாகவும், விஜயராஜாவின் ஆக்கத்தில் அவரது மாணவர்கள் பங்கேற்ற வழிகாட்டி என்ற நாடகம் இடம் பெற்றது. அடுத்து நகுலா ரெஜினோல்ட்டின் மாணவர்கள் பங்குபற்றிய மாணவன் நாடகம் இடம் பெற்றது. தொடர்ந்து சங்கத்தின் செயலாளர் கௌசல்யா தர்மலிங்கம் பொருளாதார உதவி வழங்கிய எல்லோருக்கும் நன்றி கூறினார். நன்றியுரையுடன் பரிசளிப்பு விழா இனிதே முடிவுற்றது.




# தென் இந்தியாவின்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி



நன்றாக இணைக்கப்பட்டுள்ளது. திருச்சூரில் இருந்து பஸ் மற்றும் ரயில் மூலம் குருவாயூர் செல்லலாம். குருவாயூரிலேயே இரயில் நிலையம் உள்ளது. இங்கிருந்து, 'குருவாயூர் - சென்னை விரைவு வண்டி' திருவனந்தபுரம், நாகர்கோவில், திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி வழியாக குருவாயூருக்கும் சென்னைக்கும் இடையே தினமும் இயங்குகிறது. எர்ணாகுளம், திருச்சூரில் இருந்து குருவாயூருக்கு பயணிகளின் இரயிலும் இயக்கப்படுகிறது. திருச்சூர் சென்றுவிட்டால் அங்கிருந்து எல்லா ஊர்களுக்கும் செல்லலாம். குருவாயூரில் இருந்து 75 கிலோமீட்டர் தொலைவில் கொச்சின் சர்வதேச விமான நிலையம் உள்ளது. மேலும், இங்கிருந்து பல ஊர்களுக்கும் பல தரப்பட்ட தனியார் மற்றும் அரசு பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. குருவாயூரிலேயே நல்ல உணவு விடுதிகளும் எல்லா தரத்திலும் தங்கும் விடுதிகளும் உள்ளன.





# நான் ஈ...

37ஆம் பக்கத்தொடர்ச்சி



தொட்டவுடன் கோபம் கொள்வது, சுதீப்பை நோக்கி பாய்வதற்காக கால்களை உதறிக் கொள்வது, நானி நான்தான் என்று சமந்தாவிடம் எழுதிக் காட்டுவது, டீ குடிப்பது, ஊசியை எடுத்துக் குத்துவது, பீரங்கி வடிவ குழாயில் வெடிமருந்து நிரப்பி வெடிக்க வைப்பது, கேஸ் சிலிண்டர் பக்கமே துப்பாக்கி குண்டை பாய வைப்பது... என்று ஒரு மனிதத்தன மூளையுடன் செயப்படும் ஈயின் செயலை எவ்வித லாஜிக்கும் பார்க்காமலேயே ரசிக்க முடிகிறது! மந்திரவாதி வந்தவுடன் ஏதோ நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்தால் பெரிசா கோலம்லாம் போட்டு ஜிகுஜிகுவென பூஜையை ஆரம்பித்து பொசுக்கென செத்துப் போகிறார். மந்திரவாதியை ஈ படுத்தும்பாடு ரசிக்கும்படி இருக்கிறது.

அந்த வகையில் கிராபிக்ஸ் செய்த மேக்ஸிமா குழுவினர் படத்துக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். முழுக்க முழுக்க சிஜியிலேயே எடுக்கப்பட்ட இந்தியத் திரைப்படங்களில் சிறந்தவற்றின் வரலாற்றில் ஈக்கும் இடம் இருக்கும்.

ஒளிப்பதிவாளர் செந்தில்குமார், இசையமைப்பாளர் மரகதமணி ஆகிய இருவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அற்புதமான ஒளிப்பதிவை அளித்திருக்கிறார் செந்தில். இரண்டே பாடல்கள்தான் படத்தில் முழுவதுமாய் வருகிறது. மற்ற பாடல்கள் பின்னணியிசையாய் வருகிறது. நானி ஈயாய் மாறி சுதீப்பை துரத்த ஆரம்பித்ததும், வரும் பின்னணி இசை அட்டகாசம்.

ஏற்கெனவே பல கோணங்களில் வெளிவந்த இரண்டு வரிக்கதை என்றாலும், புதிய கோணத்தில் அதை திரைப்படமாக மாற்றுவதற்கு இயக்குநர் ராஜமௌலி எடுத்துக்கொண்ட உழைப்பும் முயற்சியும் படத்தில் நன்கு பிரதிபலிப்பதுடன், லாஜிக் மீறல்களை தாண்டி படத்தை விறுவிறுப்பாக ரசிக்க வைக்கிறது. படத்தில் அதிக வசனமில்லாமல், வெறும் காட்சிகளாலேயே படத்தை வெற்றிப் படமாக்கியிருக்கிறார் இயக்குனர். 'ஈ' என்ற இந்த உயிரினத்திற்கு மட்டும் சிந்தனை திறனும், நம்மைப் போன்ற அறிவும் இருந்துவிட்டால் அவற்றால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை திரையில் காண்கின்றபோது நமக்கே பகீரென்கிறது..!

குழந்தைகளுக்கு பிடிக்கும்.


உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்
SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2
*Independently Owned & Operated

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

Kantha Property Management Group Inc.
KPM Group Inc.
Personal and Business Loans
Line of Credits
Business Setup Consultancy
1st and 2nd Mortgages
Residential and Commercial Leasing
Investment Properties
Property Management Services
Bad Credit Solutions
Bankruptcy
Consumer Proposals
T: 416-214-6161
F: 416-465-3535
3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com

Thayalan (Thaya) Gobalakrishnan
Mortgage Development Manager
Scarborough North, Markham and Stouffville
Call me for any Mortgage Financing questions
* New Mortgages
* Refinance
* Equity take out
you're richer than you think.
Cell: 416-575-3211
Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@scotiabank.com
Scotiabank

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
Low Mortgage Rates
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute